

CESL

POWERING TECHNOLOGY

# சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்

# வருடாந்த அறிக்கை

# 2024

*நாங்கள் ISO 9001, ISO 14001 ரூ ISO 45001 சான்றழித்த,*
*CIDA CS2 பதிவுசெய்த கம்பனி*

நீர்ப்பாசன அமைச்சகம்

CECB முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனம்

cecb


ஒன்றிணைந்த வணிக செயற்பாடுகள்
புவித் தொழில்நுட்பப் பொறியியல்
கட்டிடங்கள்
சுற்றாடல் மற்றும் காலநிலை
கட்டடக்கலை வடிவமைப்பு மற்றும் உள்ளக வடிவமைப்பு
போக்குவரத்து உட்கட்டமைப்பு
கருத்திட்ட முகாமைத்துவ உசாதுணை
பொறியியல் பெறுகை, உசாதுணை முகாமைத்துவம்
நிர்மாண மேற்பார்வை
அணைக்கட்டுகள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகள்
நீர்வலு, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி
பாலங்கள் மதகுகள்
நிர்மாணம், முக்கிய சுற்றாடல் பிரதேசங்கள்
நிலஅளவை, வரைபடமாக்கல், டிஜிட்டல் பொறியியல்
கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள்

# உள்ளடக்க அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | எம்மை பற்றி | |
| | நாம் யார் | 1 |
| | தூரநோக்கு, செயற்பணி, கூட்டுத்தாபனக் குறிக்கோள்கள் | 2 |
| | நிறுவனக் கட்டமைப்பு | 3 |
| 02 | நிதிசார்ந்த முக்கிய குறிப்புகள் | 4 |
| 03 | தவிசாளரின் செய்தி | 5 |
| 04 | தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி | 6 |
| 05 | தற்போதைய பணிப்பாளர்கள் சபை | 7-10 |
| 06 | கடந்தகால பணிப்பாளர்கள் சபை | 11 |
| 07 | பணிப்பாளர்களின் அறிக்கை | 12-13 |
| 08 | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 14 |
| 09 | சேவைப் பிரிவுகள் | 15-20 |
| 10 | வணிகச் செயற்பாடுகளின் கண்ணோட்டம் | 21-26 |
| 11 | நிதிக் கூற்றுக்கள் | |
| | சுயாதீனக் கணக்காய்வாளர் அறிக்கை | 28-35 |
| | விரிவான வருமானக் கூற்று | 36 |
| | நிதி நிலைக் கூற்று | 37-38 |
| | ஒப்புரவு மாற்றங்கள் கூற்று | 39 |
| | காசுப்பாய்ச்சல் கூற்று | 40 |
| | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 41-76 |
| 12 | எஞ்சிய பணிகள் | 77-80 |
| 13 | முக்கியமான வலிமைகள் | 81 |
| 14 | நிதிசார்ந்த செயலாற்றுகை | 82 |
| 15 | ஆறு ஆண்டு சுருக்கம் | 83 |
| | உள் பிற்புற அட்டைகூட்டுத்தாபனத் தகவல்கள் | 84 |

# எம்மைப் பற்றி

## நாம் யார்....?

**செ**ன்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) என்பது மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (ம.பொ.உ.ப.) முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாகும். இது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட ஒரு பொறுப்பு கம்பனியாக கூட்டிணைக்கப் பட்டது. அதன் பின்னர் இது 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீளப் பதிவு செய்யப்பட்டது.

இந்த CESL நிறுவனம் இந்த காலப் பகுதியில் நிர்மாண செயற்பாடுகள் அதிகளவில் அதிகரித்ததன் காரணமாக நிர்மாண சேவைகளுக்கு அதிக கேள்வி உருவாகியது. இந்த வாய்ப்பை பயன்படுத்தும் முகமாக இந்த நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் பகுதியில் துல்லியமாக தனது செயற்பாடுகளை ஆரம்பிக்க தொடங்கியது. CESL, கைத்தொழிலினால் உருவான சவால்களுக்கு முகம்கொடுத்து, நிர்மாண முகாமையையும், தொழில் நுட்ப தொடர்பையும் சம்பாதித்த அதே வேளை ம.பொ.உ.ப. உடன் இணைந்து பணியாற்றியன் மூலமாக கருத் திட்டம் பற்றிய தனது அறிவையும் வளர்த்துள்ளது. CESL நிறுவனத்தின் முக்கிய வணிக பணி கட்டிடங்கள், வீதிகள், நீர்ப்பாசன நிர்மாணங்கள் என்பவற்றிலும் மற்றும் ஏனைய விடேஷ கருத் திட்டங்களிலும் ஒருமுகப்பட்டுள்ளது. எமது இந்த நிறுவனமானது தனது கருத் திட்டங்களுக்கு தேவையான கொங்கிறீட்டு மற்றும் அஸ்பால்ட்டு தகடுகள் என்பவற்றை உற்பத்தி செய்வதிலும் ஈடுபடுகின்றது.

இந்த எமது CESL நிறுவனம் அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய துறைகளின் வாடிக்கையாளர்களுக்கு நிர்மாண சேவைகளை பெற்று கொடுக்கின்றது. இந்த CESL நிறுவனம் கால நேரத்திற்கு இதன் குறித்த இலக்குகளையும் மற்றும் சகல வகையான நிறுவன சார் நிர்மாண கருத் திட்டங்களில் அத்தகைய இலக்குகளையும் அடைந்ததன் மூலம் அரச அதிகாரிகள், வணிக தலைவர்கள் மற்றும் நிருவாகிகள் ஆகிய தரப்புகளின் நம்பிக்கையை சம்பாதித்துள்ளது. எமது இந்த நிறுவனம் ம.பொ.உ.ப. இன் கீழ், கைத்தொழிலினுள் உசாதுணை நிறுவனமாக ஆரம்பத்தில் 1973 ஆம் ஆண்டு பிரவேசித்ததை பின்னோக்கி பார்க்கும் போது, அத்தகைய பிரவேசமானது தற்பொழுது நாம் ஒரு உந்துதலாக தொழிற்படும் அளவுக்கு எமக்கு பல பாடங்களை கற்றுத் தந்துள்ளது. ம.பொ.உ.ப. இன் EPC பிரிவின் கீழ் இதற்கு கிடைத்த நிர்மாணம் சார்ந்த அனுபவமும் ஒரு நிலைபெறுதகு வணிக சூழலை தோற்றுவித்துள்ளது.

## தூரநோக்கு...

“இலங்கையின் நிர்மாணத் துறையில் தனித்துவமான முன்மாதிரியாக விளங்குதல்”

## செயற்பணி...

“பங்களிப்பு போதுமான அளவு மதிக்கப்பட்டுள்ள அதிக ஊக்கமுடைய பணியாளர்களைக் கொண்டு நிர்மாணத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குதல் மற்றும் புத்தாக்கத்தை அடைதல்”

## கூட்டிணைந்த குறிக்கோள்கள்...

01 உலகமயமாக்கப்பட்ட நிர்மாணத் தொழிலைக் கையாள நிறுவனம் முழுவதும் நவீன, பயனுள்ள மற்றும் திறமையான முகாமைத்துவ கலாச்சாரத்தை அடைதல்.

02 தொழில்துறையில் போட்டித்தன்மை கொண்ட பங்கேற்பாளராக ஆவதற்கு அனைத்து செயல்முறைகளிலும் உற்பத்தித்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துதல்.

03 உள்ளூர் மற்றும் சர்வதேச கட்டுமான சந்தைகளில் ஊநுளுடு இன் சந்தைப் பங்கை விரிவுபடுத்துதல்.

04 வணிக கண்டுபிடிப்பு மற்றும் வணிக பல்வகைப்படுத்தல் மூலம் நிறுவனத்தின் ஸ்திரத்தன்மையையும் சாத்தியமான வளர்ச்சியையும் உறுதி செய்தல்.

05 பணியாளர் திருப்தி, குழு மனப்பான்மை மற்றும் உடல் மற்றும் மன நல்வாழ்வை மேம்படுத்துதல்.

06 நிலையானநிர்மாண நடைமுறைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்தல் நிறுவனத்தின் நன்மதிப்பைமேம்படுத்துதல்.

# நிறுவன கட்டமைப்பு...




* Chief Operation Engineer Sections in CESL : Western Province - 1, Western Province - 2, Central Province, Southern Province, Eastern & Uva Province, Northern & North Central Province, UAE & Polonnaruwa, Electrical, Mechanical & IT

# நிதிசார்ந்த முக்கிய குறிப்புகள்

| | 2024 மில்.ரூ. | 2023 மில்.ரூ. | 2022 மில்.ரூ. | 2021 மில்.ரூ. | 2020 மில்.ரூ. |
|---|---|---|---|---|---|
| நிர்மாண வருமானம் | 8,724 | 6,854 | 6,332 | 8,298 | 6,694 |
| முழு மொத்த இலாபம் | 1,058 | 470 | 636 | 840 | 622 |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | 664 | 302 | 254 | 254 | 70 |
| வரிக்கு பின்னருள்ள தேறிய இலாபம் | 525 | 184 | 160 | 210 | 59 |
| மொத்த சொத்துக்கள் | 15,081 | 14,213 | 13,609 | 13,033 | 12,558 |
| பங்களித்த மூலதனம் | 10 | 10 | 10 | 10 | 10 |
| மொத்த ஒப்புரவு | 1,888 | 1,367 | 1,226 | 1,063 | 856 |
| மொத்த ஒப்புரவும் அதற்கு சமனானவையும் | 15,081 | 14,213 | 13,609 | 13,033 | 12,558 |
| நடைமுறை சொத்துக்கள் | 14,439 | 13,583 | 12,983 | 12,442 | 11,947 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 11,569 | 11,225 | 10,802 | 10,493 | 10,011 |

**நிர்மாண வருமானம் (மில்.ரூ.)**




**மொத்த சொத்துக்கள் (மில்.ரூ.)**




| நிர்மாண வருமானம் (மில்.ரூ.) | | | | |
|---|---|---|---|---|
| 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| 6,694 | 8,298 | 6,332 | 6,854 | 8,724 |

| மொத்த சொத்துக்கள் (மில்.ரூ.) | | | | |
|---|---|---|---|---|
| 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| 12,558 | 13,033 | 13,609 | 14,213 | 15,081 |

# தவிசாளரின் செய்தி



2024 நிதியாண்டுக்கான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (PVT) லிமிற்றட் (CESL) இன் வருடாந்த அறிக்கையையும் மற்றும் ஒருங்கிணைந்த கணக்குகளையும் சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.. இதனை பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றேன். ஆரம்பத்தில், தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் தலைவராகவும், சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (PVT) லிமிற்றட் (CESL) இன் தலைவராகவும் என்னை நியமித்து நம்பிக்கை வைத்ததற்காக முதலில் கமத்தொழில், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2024 ஆம் ஆண்டில் CESL இன் கடினமான காலகட்டத்தில் அதை வழிநடத்திய பதவி விலகும் தலைவர் பொறியாளர் சுனில் பெரேரா அவர்களுக்கும் மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மீண்டுவருவதற்கான எளிதான அறிகுறிகளைக் காட்டிய போதிலும், அரசியலின் நிச்சயமற்ற தன்மை 2024 செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய தேர்தல்கள் முடியும் வரை நீடித்தது.இதனால் ஓரளவு நிலைத்தன்மை ஏற்பட்டது. சவாலான வணிகச் சூழலும் மற்றும் நிர்மாணத் துறையில் செயற்பாடுகள் கணிசமானளவு குறைந்து இருந்த போதிலும், CESL அதன் மூலோபாயக் கவனத்தைத் தக்க வைத்துக் கொண்டு 2024 ஆம் ஆண்டில் ரூ. 8.72 பில்லியன் நிர்மாண வருமானத்தை ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இது 2023 ஆம் ஆண்டை விடவும் 27.3% அதிகரித்து ரூ. 6.85 பில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. வரிக்குப் பின்னருள்ள இலாபத்தில் ரூ. 525 மில்லியனை எட்டியுள்ளது. இந்த ஆண்டில், வரிகள் மற்றும் பிற சட்டப்பூர்வ வரிகள் அமைப்பில் ஒட்டுமொத்தமாக ரூ. 139 மில்லியன் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் பல்வேறு அமைச்சகங்களுடன் பல குறிப்பிடத்தக்க தேசிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களை CESL வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தாலும், அரசாங்கத்தின் கருத்திட்டங்களில் நீடித்த கட்டண தாமதங்கள் நிறுவனத்தின் நிதி நிலையில் தொடர்ந்தும் அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றன.

வழமையான நிர்மாணக் கருத்திட்டங்களைத் தவிர, சந்தை சவால்களை எதிர்கொள்ள CESL புத்தாக்க நடவடிக்கைகளை முன்கூட்டியே அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக, நிலைபெறுதகு சக்தி, சூரிய சக்தி, பசுமை நிர்மாண முயற்சிகள், புவிசார் பொறியியல், BIM மாதிரிகள், டிஜிட்டல் உருமாற்ற படிகள் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் பொறியியல் துறைகளில் CESL மூலோபாய ரீதியாக பன்முகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அபுதாபியில் உள்ள அதன் நிலையத்தின் மூலம் சர்வதேச உட்கட்டமைப்பு சந்தைகளில் பிரவேசிக்கும் பொருட்டு CESL குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இறுதியாக, எனது சக சபை உறுப்பினர்களின் உறுதியான ஆதரவுக்கும் வழிகாட்டுதலுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதான நிறைவேற்று அதிகாரி பொறியாளர் எஸ்.பி.ஏ.டி. சேமசிங்க அவர்களின் தலைமைத்துவத்திற்கும் மற்றும் அர்ப்பணிப்புக்கும், உயர் செயற்பாடுகள் முகாமைத்துவத்திற்கும், மிக முக்கியமாக, CESL இன் மிகவும் மதிப்புமிக்க பொக்கிஷமாக விளங்கும் பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களுக்கும் குறிப்பாக எனது எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பொறியியலாளர் ஏ.பி. ஜெயதிஸ்ஸ**
தலைவர் - CESL

# தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி



2024 நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அறிக்கை கடந்த ஆண்டின் எமது செயல்திறனைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், சவாலான காலங்களில் மீள்தன்மைக்கும், புத்தாக்கத்திற்கும் மற்றும் அபிவிருத்திற்கான எமது உறுதியான அர்ப்பணிப்பிற்கும் ஒரு சான்றாக விளங்குகின்றது.

முதலில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கௌரவ கமத்தொழில், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சருக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். தேசிய அபிவிருத்திற்கு நாம் தொடர்ந்து அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்யும் அதே வேளையில், தங்களது மேற்பார்வையின் கீழுள்ள அமைச்சுடன் இணைந்து பணியாற்ற நாம் எதிர்நோக்குகின்றோம்.

கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக பொருளாதாரத்திலும் மற்றும் நிர்மாணத் துறையிலும் ஏற்பட்டிருந்த தொடர்ச்சியான வீழ்ச்சி இதற்கு காரணமாகும். எனினும் எமது நிறுவனம் இந்த க்ஷ்டங்களை எல்லாம் தாங்கி நின்றது மட்டுமல்லாமல், உறுதியாக செயற்பட்டுள்ளோம் என்பதையும் நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது எமது நெகிழ்ச்சியான கூட்டு உறுதிப்பாடு, மூலோபாய தூரநோக்கு மற்றும் எமது செயற்பணி, உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் விளைவாகும்.

பொறுப்பையும் எதிர்காலத்தையும் நோக்கமாகக் கொண்ட நிர்மாண நடைமுறைகள் தொடர்பான அரசாங்கத்தின் கட்டமைப்புடன் நாம் உறுதியாக இணைந்துள்ளோம். இதன் வழிகாட்டுதலின் பேரில், எமது செயற்பாட்டு ஆள்புலத்தையும் மற்றும் சேவை வழங்கல்களையும் மாற்றும் நிமித்தம் நாம் துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

உலகளாவிய நிர்மாணத் துறையில் ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்ட அர்ப்பணிப்புள்ள சர்வதேச தொடர்பு அலகுகளை நாம் நிறுவினோம். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் புத்தாக்கங்களின் நிமித்தம் உலகளாவிய நிலையமான ஐக்கிய அரபு இராச்சியத்தில் எமது கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்தமையையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

வரைபடமாக்கல் மற்றும் நிலஅளவை சேவைகளில் கவனம் செலுத்தும் ஒரு புவிசார் பொறியியல் பிரிவையும் நாம் ஆரம்பித்துள்ளொம். இந்த அலகு நீண்டகால தேசியத் தேவையை நிவர்த்தி செய்யும் என்பதோடு உள்ளூர் நிபுணத்துவத்தால் இயக்கப்படும் நம்பகமான, அரச பொறியியல் சேவைகளை வழங்குவதற்கான எமது திறனையும் வலுப்படுத்தும்.

டிஜிட்டல் நிர்மாண சகாப்தத்தில் வேகமாக அதிகரித்து வருகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு விசேட டிஜிட்டல் பொறியியல் பிரிவையும் நாம் தாபித்துள்ளோம். டீஜஆ, தரவு சார்ந்த வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் இரட்டையர்களின் எழுச்சியுடன், இந்த அலகு இந்தத் துறையில் டிஜிட்டல் மாற்றத்தின் முன்னணியில் எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் ஒரு அமைப்பாக நம்மை நிலைநிறுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

**பொறியியலாளர் எஸ்.பி.ஏ.டி. சேமசிங்க**
பிரதான நிறைவேற்று அதிகாரி - CESL

# தற்போதைய பணிப்பாளர்கள் சபை



**பொறியியலாளர் ஏ.பி. ஜயதிஸ்ஸ - தலைவர்**

*BSc. Eng, C.Eng, MIE (SL)*

2024 திசம்பர் மாதம் 18 ஆம் திகதி சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். இவர் CECB இன் நிர்மாணத் துணை நிறுவனமான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) இன் தவிசாளராகவும் பணியாற்றுகிறார்.

இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (1995) சிவில் பொறியியலில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்ற இவர், இலங்கையின் பொறியாளர்கள் நிறுவனத்தின் பட்டய உறுப்பினராகவும், இலங்கை புவி தொழில்நுட்ப சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டுமான மேலாண்மையில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், வணிக நடுவர் டிப்ளோமா மற்றும் திட்ட மேலாண்மை நிபுணராக (PMP) பட்டம் பெற்றுள்ளார்.

நிர்மாணத்திலும மற்றும் கட்டுமான மேற்பார்வையிலும் 29 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், இடர் முகமைத்துவம், ஒப்பந்த தயாரிப்பு மற்றும் சேவை ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஒரு திறமையான ஒப்பந்த முகாமையாளராக உள்ளார். ஒப்பந்த நியதிகளை அவர் திறம்பட நிர்வகிக்கின்றார்.முன்னேற்றத்தையும் மற்றும் வழங்கல்களையும் மேற்பார்வையிடுகின்றார். கட்டிடங்கள், வீதிக, பாலங்கள், உட்கட்டமைப்பு, உயர் அழுத்த மின் இணைப்புகள், எண்ணெய் மற்றும் எரிவாயு களங்கள் (ஓமான்), அணு மின் நிலைய கட்டமைப்புகளின் கட்டுமானம் (யுஏஇ-அபுதாபி) மற்றும் வீதிகள் மற்றும் பாலங்களின் விரிவான வடிவமைப்பு உள்ளிட்ட பல்வேறு கருத்திட்டங்களில் அவரது அனுபவம் பரந்ததாகும். ஒப்பந்த காலக்கெடுவை நிர்வகிப்பதிலும் கடுமையான அட்டவணைகளைப் பேணுவதிலும் அவர் திறமையானவர். செயற்பாட்டு மற்றும் சேவை சிறப்பை உறுதி செய்வதற்காக அவர் இணை-செயற்பாட்டு குழுக்களுடன் திறம்பட பணியாற்றுகின்றார். அவரது உள்ளூர் அனுபவத்தில் நிர்மாணம், உட்கட்டமைப்புகளின் நிர்மாண மேற்பார்வை, வீதிகள் மற்றும் பாலங்கள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் ஆகியவை அடங்கும்.

உள்நாட்டிலும் இலங்கையிலும் மேற்கொள்ளப்படும் பல்வேறு கருத்திட்டங்களை நிர்வகிப்பதில் பெற்ற சிவில் பொறியியலில் தனது விஷேட அறிவையும் பரந்த நிபுணத்துவத்தையும் அவர் சபைக்குப் பெற்றுக்கொடுக்கின்றார்.



**பொறியியலாளர் ஏ.எம்.டி.பி. அதபத்து - பணிப்பாளர்**

*BSc. Eng, C.Eng, MIE (SL)*

இவர் 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி முதல் முதல் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரத்தில் ஊநுஊடீ இன் நிர்மாணத் துணை நிறுவனமான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) இன் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தில் இயந்திர பொறியியலில் இளங்கலை பட்டம் பெற்றுள்ளார் (1995).மேலும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் பட்டய உறுப்பினராகவும் உள்ளார்.

இவர் நிர்மாணத்திலும் மற்றும் நிர்மாண மேற்பார்வையிலும் 29 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், இடர் முகாமைத்துவம், ஒப்பந்த தயாரிப்பு மற்றும் சேவை ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஒரு திறமையான ஒப்பந்த முகாமையாளராக உள்ளார். இவர் ஒப்பந்த நிபந்தனைகளை திறம்பட நிர்வகிக்கின்றார்.முன்னேற்றத்தையும் மற்றும் வழங்கல்களையும் மேற்பார்வையிடுகின்றார். இவரது அனுபவத்தில் பல்வேறு வகைகள் உள்ளடங்குகின்றன.

மின் உற்பத்தி நிலைய நிர்மாணங்கள் மற்றும் செயற்பாடுகள் உள்ளிட்ட கருத்திட்டங்கள், புதிய நீர்ப்பாசனம் மற்றும் நீர் கட்டுப்பாடு, அனைத்து வகையான ஃகு நுழைவாயில் நிர்மாணம் மற்றும் நிறுவுகை, ராஜாங்கனை நீர்த்தேக்கம், மினிபே இடது கரை, முத்தியன்கட்டுவ, கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டு வாயில்கள் மற்றும் விக்டோரியா, பொல்கொல்ல போன்ற புனரமைப்புக் கருத் திட்டங்கள், உக்குவெல, போவத்தன்ன, சமனலவெவ, கல்ஓயா, லக்ஷபான நீர் மின் உற்பத்தி நிலையங்களின் புனரமைப்புக் கருத்திட்டம் என்பவற்றில் நேரடியாக இவர் சம்பந்தப்படுகின்றார்.மேலும் நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், கலனிதிஸ்ஸ மற்றும் சப்புகஸ்கந்த புனரமைப்பு மற்றும் திருத்தப் பணிகளில் பெரும்பாலானவை என்பன இவரின் பணிகளில் உள்ளடங்குகின்றன. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் ஃகு குழாய் மார்க்கத்திற்கான எரிபொருள் தொட்டி நிர்மாணப் பணிகள் KRB நீர் சுத்திகரிப்பு நிலைய நிறுவுகை மற்றும் அம்பத்தலே குழாய் உற்பத்தி மற்றும் நிறுவுகை என்பன எண்ணிலடங்காதவை. நீர் சபைக்கான ஃகு பாலத்தின் நிர்மாணம், நாரம்மல முதல் துல்ஹிரிய வரையிலான கோபுரக் கோடு நிர்மாணம், CIC இற்கான ஃகு சைலோ நிறுவல் ஆகியவை பல்வேறு துறைப் பணிகளில் சில. ஒப்பந்த காலக்கெடுவை நிர்வகிப்பதிலும் கடுமையான அட்டவணைகளைப் பேணுவதிலும் இவர் திறமையானவர். செயற்பாட்டு மற்றும் சேவை சிறப்பை உறுதி செய்வதற்காக இவர் இணை-செயற்பாட்டு குழுக்களுடன் திறம்பட பணியாற்றுகின்றார்.

உள்ளூர் அதிகாரிகளாலும் மற்றும் சர்வதேச தரப்புகளாலும் மேற்கொள்ளப்படும் பல்வேறு கருத்திட்டங்களை நிர்வகிப்பதில் பெற்ற இயந்திர பொறியியலில் தனது விஷேட அறிவையும் மற்றும் பரந்த நிபுணத்துவத்தையும் இவர் சபைக்கு பெற்றுக்கொடுக்கின்றார்.



**திருமதி. ஜே.கே.என். சமன்மலி - பணிப்பாளர்**

*BSC (Management) USJP, Master of Public Administration (PIM), MA in Economics (International University of Japan)*

இவர் 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி முதல் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதே நேரத்தில் CECB இன் நிர்மாணத் துணை நிறுவனமான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) இன் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பணியாற்றுகின்றார்.

ஜே.கே.என். சமன்மலி இலங்கையின் அரச துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு பொது நிதி நிபுணராவார். இவர் தற்போது நிதி அமைச்சில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைப் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றுகின்றார். இதற்கு முன்னர், இவர் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தில் பணிப்பாளராக (வருமானம்) பணியாற்றினார். மேலும் முன்னர் பொதுக் கணக்குகள் திணைக்களத்தில் பல மூத்த பதவிகளில் பணியாற்றினார். இவர் நிலஅளவை ஆணையாளர் திணைக்களத்தில் உதவி நிலஅளவை ஆணையாளராக (நிதி) தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இவர் ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பொருளியல் பிரிவில் கலை முதுகலைப் பட்டத்தையும், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ முதுகலை நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும், அதே பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு முகாமைத்துவ கௌரவ (பொது) விஷேட பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் தனது கல்விச் சான்றுகளுக்கு மேலதிகமாக, இலண்டனில் உள்ள பட்டய பொது நிதி மற்றும் கணக்கியல் நிறுவனத்தின் (CIPFA) தகுதிவாய்ந்த உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பகுதி தகுதி பெற்றவராகவும் உள்ளார். ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் மேக்ரோ பொருளாதாரம் மற்றும் பொருளாதார அளவியல் துறையில் கற்பித்தல் உதவியாளராக கல்வித்துறைக்கும் பங்களித்துள்ளார். இவர் இவரது தொழில்முறை சேவையில் SD-CC, இலங்கை அங்கீகார சபையிலும் மற்றும் தற்போது பணியாற்றும் மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்திலும் பணிப்பாளர்கள் சபையில் பதவிகளையும் வகித்துள்ளார்.

பொது நிதி முகாமைத்துவம், நிதிக் கொள்கை மற்றும் ஆளுகை ஆகிய விடயங்களில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான விரிவான அனுபவத்துடன் வலுவான கல்விச் சான்றுகளை பெற்ற இவர், சபையின் மூலோபாய மேற்பார்வையிலும் மற்றும் முடிவெடுப்பதில் மதிப்புமிக்க நுண்ணறிவை பெற்றுக்கொடுக்கின்றார்.



**திரு. எம்.பி.எல். ரகுமான் - பணிப்பாளர்**

*MA (Public Administration), PGDip. (Edu.) LL.B – (Colombo)*

இவர் 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதி முதல் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.அதே நேரத்தில் CECB இன் நிர்மாணத் துணை நிறுவனமான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) இன் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் இஸ்லாமியக் கல்வியிலும் மற்றும் அரபு மொழியிலும் ஏழு ஆண்டு படிப்புப் படிப்பை நிறைவு செய்த பின்னர், 1996 ஆம் ஆண்டு இலங்கையின் பேருவளையில் உள்ள ஜாமியா நளீமியாவின் நிர்வாகக் குழுவால் அவருக்கு அல்-ஷஹாதா அல்-அலியா (உரிமம்) வழங்கப்பட்டது. இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றவராவார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை இளங்கலைப் பட்டம் பெற்றவராவார்.மேலும், 2000 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியலில் முதுகலை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் 2010 ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் 2003 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து சுகாதார அமைச்சில் பல்வேறு பதவிகளில் பணியாற்றினார். 2024 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் விஷேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றார். இவர் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சில் மேலதிக செயலாளராக (தாபனம், சட்டம் மற்றும் விசாரணை) பணியாற்றி வருகின்றார்.

இவர் 2019 ஆம் ஆண்டில் இலங்கை இணக்க மதிப்பீட்டு சபையின் (SLAB) நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும், 2024 ஆம் ஆண்டில் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் (HARTI) நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

இவர் ஒரு நிர்வாக நிபுணராக, சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திற்கு மதிப்பு சேர்க்கும் வகையில் பணியாற்றுகின்றார்.



**பொறியியலாளர் எஸ்.ஏ.யு.டி.சி. சிறிவர்தன - பணிப்பாளர்**

*B.Sc. Eng.(Hons) Sri Lanka, M.Sc. (Hydraulic Engineering and River Basin Development) Netherlands, C.Eng., MIE(Sri Lanka), M Cons. E (SL), MICOLD (SL), Member of SLGES, Registered Structural Engineer (SL)*

இவர் 2020.06.03 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டார்.அதே நேரத்தில் CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் பொது முகாமையாளராகவும் பணியாற்றுகின்றார்.

பொறியியலாளர் சிறிவர்தன ஒரு ஹைட்ராலிக் மற்றும் கட்டமைப்பு பொறியியலாளராவார். இவர் நெதர்லாந்தின் IHE-டெல்ஃப்டில் இருந்து ஹைட்ராலிக் பொறியியலிலும் மற்றும் நதி படுகை அபிவிருத்தியிலும் முதுகலைப் பட்டத்தை பெற்றுள்ளார். இவர் இலங்கையின் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் சிவில் பிரிவில் தனது முதல் பட்டமான BSc. பொறியியல் பட்டத்தை பெற்றுள்ளார். முதல் பட்டப்படிப்புக்குப் பின்னர் உடனடியாக இவர் பீடத்தில் ஒரு பயிற்றுவிப்பாளராக இணைந்துகொண்டார். பின்னர் 1997 ஆம் ஆண்டில் இவர் தற்போதைய நிறுவனமான CECB இல் வடிவமைப்பு பொறியியலாளராக இணைந்தார். அதன் பின்னர் இவர் கட்டமைப்பு வடிவமைப்புகள், நிர்மாண மேற்பார்வை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் ஆகிய விடயப் பிரிவுகளில் ஒரு வதிவிடப் பொறியியலாளராகவும், ஒரு சிரேஷ்ட வடிவமைப்பு பொறியியலாளராகவும், ஒரு விஷேட பொறியியலாளராகவும் மற்றும் கருத்திட்ட முகாமையாளராகவும் பணியாற்றினார்.

இவர் 2009 ஆம் ஆண்டு முதல் பிரதிப் பொது முகாமையாளராக (நீர்வளம்) நியமிக்கப்பட்டுள்ளார். உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல்வேறு அளவிலான நீர்வள அபிவிருத்திக் கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளார். 2015 ஆம் ஆண்டில், இவர் நிறுவனத்தில் மேலதிகப் பொது முகாமையாளராக (நீர்வளம் மற்றும் திட்டமிடல்) பதவி உயர்வு பெற்றார். பொறியியலாளர் சிறிவர்தன ஹைட்ராலிக் மற்றும் நீர்மின் பொறியியல், கட்டமைப்பு பொறியியல் மற்றும் நீர்வள பொறியியல் ஆகிய பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்றவர். அனைத்து வகையான கட்டிடங்களுக்கும் மற்றும் நிர்மாணங்களுக்கும் இலங்கையில் சான்றளிக்கப்பட்ட.ஃபதிவுசெய்யப்பட்ட கட்டமைப்பு பொறியாளராகவும் விளங்குகின்றார். சிவில் பொறியியல் பிரிவில் இவர் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



**பொறியியலாளர் எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய - பணிப்பாளர்**

*BSc. Eng.(Hons.), M.Sc.(Structural - Japan), MBA(J'Pura), CEng., MIE(SL), MSSE (SL)*

இவர் 2023.05.24 ஆம் திகதி பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.அதே நேரத்தில் CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் கூட்டுத்தாபன மேலதிகப் பொது முகாமையாளராக (வடிவமைப்புகள்) பணியாற்றுகின்றார்.

இவர் பொறியியலிலும் மற்றும் முகாமைத்துவத்திலும் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், முதன்முதலில் CECB இல் இணைந்து, 1999 ஆம் ஆண்டில் ஒரு வடிவமைப்பு பொறியாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். இவர் ஜப்பானில் தனது படிப்பைத் தொடர JICA உதவித்தொகையைப் பெற்று 2006 ஆம் ஆண்டில்அதனை நிறைவு செய்தார். இவர் மேலும் 2008 ஆம் ஆண்டில் நாடு திரும்பியதும், நிர்மாண வடிவமைப்பில் விஷேட பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். 2014 ஆம் ஆண்டில் நிர்மாண வடிவமைப்பு பிரதிப் பொது முகாமையாளராகவும், அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டில் வடிவமைப்பு 3 இன் மேலதிகப் பொது முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டதால் இவர் தனது தொழில் வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேற்றம்கண்டுள்ளார்.

இவர் CECB-இல் பணியாற்றிய காலத்தில், அம்பாந்தோட்டை விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம், பாதுகாப்பு தலைமையக கருத்திட்டம், மெனிங் சந்தை கருத்திட்டத்தை வேறு இடத்திற்கு நகர்த்துதல், மெட்ரோ கொழும்பு திண்மக்கழிவு வடிவமைப்பு மதிப்பாய்வு, துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம், களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி மற்றும் செத்சிரிபாய கட்டம் ஐஐ மற்றும் ஐஐஐ அபிவிருத்திக் கருத்திட்டங்கள் போன்ற பல முக்கிய தேசிய கருத்திட்டங்களுக்கு பங்களித்துள்ளார்.

இவர் நிர்மாண வடிவமைப்புகளை மேற்பார்வையிடுவதோடு மட்டுமல்லாமல், மேலதிகப் பணிப்பாளராகவும் பல்வேறு பொறுப்புகளை ஏற்று நிறைவேற்றியுள்ளார்.



## திருமதி ஜி.வி.ஏ. ஆர்.எம். டி சில்வா - இயக்குனர்

*ACA,ACMA,CGMA*

இவர் 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதி முதல் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரத்தில் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் (CECB) பதில் பிரதிப் பொது முகாமையாளராகவும் (நிதி) பணியாற்றுகின்றார்.

திருமதி டி சில்வா, பொது மற்றும் தனியார் துறைகளில் நிதி முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் கணக்காய்வு ஆகிய விடயப் பிரிவுகளில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு தகுதிவாய்ந்த நிதி நிபுணராவார். இஅவர் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (ACA) உறுப்பினராகவும், பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CIMA - UK) மற்றும் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர் (CGMA - UK) நிறுவனம் ஆகியவற்றில் உறுப்பினராகவும் காணப்படுகின்றார். இவர் தற்போது தனது வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தைப் பயின்றுவருகின்றார்.

திருமதி டி சில்வா 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் நிதி உதவி.்.பிரதிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். மேலும்  இவர் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஜூன் 2023 வரை நிறுவன கணக்காளராகப் பணியாற்றினார். CECB இல் இணைவதற்கு முன்னர், திருமதி ஏ டி சில்வா, MAS Linea Aqua (Pvt) Ltd இல் இரண்டு ஆண்டுகள் நிர்வாக மட்டத்தில் பணியாற்றியுள்ளார். மேலும் மிகப்பெரிய உலகளாவிய தொழில்முறை சேவை நிறுவனங்களில் ஒன்றான இலங்கையின் KPMG இல் நான்கு ஆண்டுகளும் பணியாற்றியுள்ளார். இந்த நேரத்தில், அவர் வெளிவாரி  கணக்காய்வு, நிதி அறிக்கையிடல், செலவு பகுப்பாய்வு மற்றும் உள்ளக் கட்டுப்பாட்டு அமைப்புகளில் விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் கணக்காய்வு குழுக்களை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளார்.பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பவற்றில் ஈடுபட்டு அவற்றின் அவற்றின் பணிகளைத் திறம்பட நிர்வகித்துள்ளார்.மேலும் இவர் மூலோபாய நிறுவன இலக்குகளுடன் இணைந்த நிதிக் கட்டுப்பாடுகளையும் செயற்படுத்தியுள்ளார்.

# கடந்தகால பணிப்பாளர்கள் சபை



பொறியாளர் பி.ஏ.எஸ்.எஸ். பெரேரா - தவிசாளர்
*B. Sc. (Eng.), MBA, Chartered Engineer*



பொறியியலாளர் ஜி.டி.ஏ. பியதிலக - பணிப்பாளர்
*B. Sc. Eng. (Hons), PG. Dip. (Const.Mgt),*
*PG. Dip. (Port & Coastal Eng.) Norway, MIE(SL) C. Eng., MASCE*



திருமதி. பி.என். கமகே - பணிப்பாளர்
*B. Sc. (Hons), MBA, MPM*



பொறியியலாளர் (செல்வி) பி.எம். ஜெயதீரா - பணிப்பாளர்
*B. Sc. Eng. (Hons) Moratuwa, M. Eng. (Water Resources*
*Engineering & Management) Moratuwa, C.Eng., MIE(SL)*



பொறியியலாளர் எஸ்.ஏ.யு.டி.சி. சிறிவர்தன - பணிப்பாளர்
*B. Sc. Eng. (Hons) Sri Lanka, M. Sc. (Hydraulic Eng.)*
*Netherlands, C. Eng., MIE (SL), M Cons. E (SL),*
*M SLNCOLD (SL), Registered Structural Engineer (SL)*



பொறியியலாளர் எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய - பணிப்பாளர்
*BSc. Eng.(Hons.), M.Sc.(Structural - Japan),*
*MBA(J'Pura), CEng., MIE(SL), MSSE (SL)*

# பணிப்பாளர்களின் அறிக்கை

**கம்பனியின் விவகாரங்கள் குறித்த பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை**

சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர்கள் கம்பனியின் 2024 டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் அடிப்படையில் தேவைப்பாடுகளை உள்ளடக்கிய தங்களின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

## பொதுவானவை

சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்டதுடன் 2007 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் தேதி மீண்டும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டது. கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட புதிய பதிவு இலக்கம் PV 16723 ஆகும்.

## நிறுவனத்தின் முதன்மைச் செயல்பாடுகள் மற்றும் வருடத்தில் செயல்திறன் மதிப்பாய்வு

நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகளின் குறிப்பு 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிதி அறிக்கைகளுடன் கூடிய பணிப்பாளர் அறிக்கையானது நிறுவனத்தின் விவகாரங்களின் நிலையை பிரதிபலிக்கிறது.

## நிதி அறிக்கைகள்

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வாளர்கள் சார்பாக இரண்டு பணிப்பாளர்களால் முறையாக கையொப்பமிடப்பட்டு குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் உட்பட பொருந்தக்கூடிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

## சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீதான சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை பக்கங்கள் 28 முதல் 35 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த ஆண்டு அறிக்கையின் பக்கம் 41 முதல் 76 வரை கொடுக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRSs மற்றும் LKASs) ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கும் இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை பக்கங்கள் 41 முதல் 76 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கையிடலுக்கான இயக்குனர்களின் பொறுப்பு

நிறுவனத்தின் நிதி அறிக்கைகளை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

## நிதி அறிக்கையிடலுக்கான இயக்குனர்களின் பொறுப்பு (தொடர்ச்சி..)

நிறுவனத்தின் இந்த நிதிநிலை அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRSs மற்றும் LKASs) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## கணக்காய்வாளர்

தேசிய கணக்காய்வு அலுவலகம் மீளாய்வாண்டில் கணக்காய்வாளராக செயற்பட்டது.

## கூறப்பட்ட மூலதனம்

நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 10,000,020 தொகையான 100,002 சாதாரண பங்குகளைக் குறிக்கிறது.

## ஒதுக்கம்

கம்பனியின் வருடத்தி இடம்பெற்ற ஒதுக்கங்களின் அசைவுகள் பக்கம் 39 இலுள்ள உரிமைத்துவ மாற்றங்களின் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## சட்டப்பூர்வ கொடுப்பனவுகள்

இயக்குநர்கள் தங்களுக்குத் தெரிந்தவரை, நிறுவனம் செலுத்த வேண்டிய அனைத்து வரிகள், கடப்பாடுகள் மற்றும் தீர்வைகள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களின் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து பங்களிப்புகள், வரிகள் மற்றும் அனைத்து தீர்வைகள் மற்றும் அறியப்பட்ட சட்டரீதியான நிலுவைத் தொகைகள் மற்றும் நிதி நிலை அறிக்கையின்படி நிறுவனத்தால் செலுத்தப்பட வேண்டியவை செலுத்தப்பட்டது அல்லது தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## ஐந்தொகைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

தணிக்கையாளர்களின் அறிக்கையின் படி ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான நிதிநிலை அறிக்கைகளில் சீராக்கப்பட வேண்டிய அல்லது வெளிப்படுத்துதல் தேவைப்படும் முக்கிய நிகழ்வுகள் எதுவும் இல்லை.

## கூட்டங்கள் மற்றும் வருகைகள்

2024 நிதியாண்டில் 08 சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபை கூடியிருந்ததுடன் அதற்கு பணிப்பாளர்களின் வருகை பின்வருமாறு இருந்தது.

| பெயர் | பதவி | 2024 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 10 ஜனவரி | 16 பிப்ரவரி | 18 மார்ச் | 26 ஏப்ரல் | 06 ஜூன் | 09 ஜூலை | 21 ஆகஸ்ட் | 12 செப்டம்பர் |
| பொறி. பி.ஏ.எஸ்.எஸ். பெரேரா | தலைவர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறி. ஜி.டி.ஏ. பியதிலக | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| திருமதி பி.என். கமகே | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறி. (செல்வி) பி.எம். ஜயதீர | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறி. எஸ்.ஏ.யு.டி.சி. சிறிவர்தன | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறி. எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய | பணிப்பாளர் | - | √ | √ | √ | √ | √ | √ | √ |

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

## கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்

CESL இன் தணிக்கைக் குழு CESL இன் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்படுகிறது.

## கூட்டங்கள் மற்றும் வருகைதருதல்

2024 நிதியாண்டில் 03 நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மற்றும் அதற்கான வருகை பின்வருமாறு.

| பெயர் | பதவி | 2024 | | |
|---|---|---|---|---|
| | | 12 ஜனவரி | 02 மே | 02 ஆகஸ்ட் |
| பொறி. பி.ஏ.எஸ்.எஸ். பெரேரா | CESL இன் தலைவர் | √ | √ | √ |
| திருமதி பி.என். கமகே | குழுவின் தலைவர்/ இயக்குனர் | √ | √ | √ |
| பொறி. எஸ்.ஏ.யு.டி.சி. சிறிவர்தன | இயக்குனர் | √ | √ | √ |
| பொறி. எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய | இயக்குனர் | √ | √ | √ |

## குழுவின் நோக்கங்கள்

a) உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புகளைத் தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் மீளாய்வு செய்தல்.

b) நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்து மீளாய்வு செய்தல்.

c) செலவுத் திறனுக்காகவும், வீண் செலவுகள் போன்றவற்றை அகற்றவும் சீரான இடைவெளியில் செயலாற்றலை மீளாய்வு செய்தல்.

d) வேளிக் கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி/ வெளிப்புற கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.

e) சட்டங்கள், பிரமாணங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குகின்றனவா என்பதைக் கண்டறிதல்.

f) கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்காக நிதிநிலை அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

g) உள் கணக்காய்வு.˙.வெளிப்புற வெளிப்புற அறிக்கைகள், சரிசெய்தல் நடவடிக்கைக்கான முகாமைத்துவக் கடிதங்களை மதிப்பாய்வு செய்தல்.

h) பொது முயற்சிகளுக்கான குழுவின் பரிந்துரைகள்.˙.உத்தரவுகளை செயல்படுத்துவதை மதிப்பாய்வு செய்தல்.

## அதிகாரம்

i) குழு அதன் குறிப்பு விதிமுறைகளுக்குள் செயல்பாடுகளைச் செய்வதற்காக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பணியாளரிடமிருந்தும் தேவைப்படும் எந்த தகவலையும் பெறுவதற்கு இது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் குழுவால் செய்யப்படும் எந்தவொரு கோரிக்கைக்கும் அனைத்து ஊழியர்களும் ஒத்துழைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ii) குழு அதன் கவனத்திற்கு வரும் ஏதேனும் சந்தேகத்திற்குரிய மோசடிகள் அல்லது முறைகேடுகள், உள்ளக கட்டுப்பாட்டின் தோல்விகள் அல்லது சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் சந்தேகத்திற்குரிய மீறல்கள் குறித்து பணிப்பாளர் சபையிடம் புகாரளிக்க வேண்டும்.

iii) தேவை என்று கருதினால் வெளியில் இருந்து சட்ட அல்லது சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையைப் பெறவும் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட அவ்வாறான வெளியாட்களின் வருகையை பொருத்தமானவற்றுடன் பாதுகாக்க வேண்டும்.

# பணிப்பாளர்களின் அறிக்கை

### கட்டிடங்கள் (*CIDA* தரநிலை - *CS2*)

வடிவமைப்பு மற்றும் நிர்மாண அடிப்படையில் கட்டிடங்களின் வடிவமைப்பிலும் மற்றும் நிர்மாணத்திலும் CESL முன்னணியில் உள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகள், கட்டிடங்கள் (பல மாடி கட்டிடங்கள், தொழிற்சாலை வகை, ஐக்கொனிக், முதலியன) என்பன முதல் தீவு முழுவதும் உள்ள முழு நகர மேம்பாடுகள் வரை உள்ளன.

மேலும், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களின் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளையும் CESL மேற்கொண்டுள்ளது.

CESL பெரும்பாலும் அதன் நிறுவன நிபுணத்துவத்தையே சார்ந்துள்ளது. இருப்பினும், சிறப்பு சந்தர்ப்பங்களில், CESL அதன் திட்டக் குழுக்களை வலுப்படுத்தவும், ஒரு திட்டத்தின் குறிப்பிட்ட தேவைகளைக் கையாளவும் புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர்கள் போன்ற தொடர்புடைய பணியாளர்களை ஈடுபடுத்துகிறது.

CESL பல்வேறு செயல்பாட்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ளது, உதாரணமாக:

- வைத்தியசாலைகள்
- வணிகக் கட்டிடங்கள்
- நிருவாக மற்றும் அலுவலக் கட்டிடங்கள்
- விடுதிகள்
- பொழுதுபோக்கு கட்டிடங்கள்
- விளையாட்டுக் கட்டிடத்தொகுதிகள்
- அடுக்குமாடிவீடுகள்
- பொதுக் கட்டிடங்கள்
- பல்கலைக்கழ உட்கட்டமைப்பு
- நீதிமன்றக் கட்டிடத்தொகுதிகள்
- சிறைச்சாலைக் கட்டிடத்தொகுதிகள்








## வீதிகள்

இலங்கையில் வீதிகளைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் ஆகியவற்றில் CESL பல வருட அனுபவத்தைக் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் வளமான அனுபவத்தில் பின்வருவன அடங்குகின்றன:

- சுரங்க வீதிகள்/ தமனி சார்ந்த வீதிகள்/ மேன் வீதிகள்/ போன்றவற்றை அமைத்தல் மற்றும் விசாலப்படுத்துதல்.
- தற்போதுள்ள வீதிகளை புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல்.
- காவல் தண்டவாளங்கள், வீதித் தளபாடங்கள் போன்றவற்றின் கட்டுமானம்.





## வீதிகளும் மதகுகளும்

நாட்டில் பாலங்கள் மற்றும் மதகுகள் வடிவமைப்பிலும் கட்டுமாணத்திலும் CESL பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளது.

பல ஆண்டுகளாக CESL வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் நிறுவுகை ஆகியவற்றில் சிறந்த நற்பெயரைப் பெற்றுள்ளது.

- கொங்ரீட்டு மற்றும் இரும்புப் மேம்பாலங்கள்/ கொங்ரீட்டு, இரும்பு மற்றும் கூட்டுப் பாலங்கள்/ பாதசாரி பாலங்கள்/ மேன்கடவைப் பாலங்கள்
- ஏற்கனவே உள்ள பாலங்களை புனரமைத்தல் மற்றும் பலப்படுத்துதல்
- மதகுகள், வரிசையாக அமைக்கப்பட்ட வீதியோர வடிகால்கள் மற்றும் முன்னணி வழி வடிகால்கள் போன்ற வடிகால் கட்டமைப்புகள்





## நீர்ப்பாசன கட்டமைப்புகள்

நீர்ப்பாசனத் துறையில் CESL இன் பொறியியல் நிபுணத்துவம், பெரிய அளவிலான நீர்ப்பாசன கருத்திட்டங்களை வடிவமைத்தல், திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல் வரை நீண்டுள்ளது.

இதில் பின்வருவன அடங்கும்:

- பெரிதாக்குதல்
- நீர்த்தேக்கங்களின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு
- கால்வாய்கள்
- அணைக்கட்டுக்கள்
- மண் அணைகள்
- ஒழுங்குமுறை கட்டமைப்புகள்
- அணைகள்
- நீர்வலு நிர்மாணங்கள்





## கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள்

CESL கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளின் நிர்மாணம், பெரிதாக்கல், புனரமைப்பு மற்றும் மேம்பாடு என்பவற்றில் ஈடுபட்டுள்ளது.

இவற்றில் பின்வருந அடங்கும்:

- மிருகக்காட்சிசாலை
- விடுதிகள்
- வைத்தியசாலைகள்
- அலுவகங்கள்
- குஞ்சுபொறிக்கும் கட்டிடங்கள்





## சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகள் கட்டுமானம்

இயற்கை அழகு மற்றும் உணர்திறன் மிக்க இயற்கை சூழல்கள் உள்ள பகுதிகளில், தேவையான கட்டமைப்புகளை நிர்மாணிப்பதில் விஷேச கவனத்தை செலுத்த வேண்டும், மேலும் இது பெரும்பாலும் பொறியியலாளர்கள் மற்றும் அபிவிருத்தித் தரப்புகள் ஆகியோருக்கு ஒரு சவாலாக அமைகின்றது. ஆனால் சரியான தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் சிந்தித்துப் பார்த்தால், அதனை சமாளிக்க முடியும்.

- உலக மரபுரிமை ஸ்தலங்களுக்குள் கட்டுமானங்களை நிர்மாணித்தல்
- வனவிலங்கு சரணாலய எல்லைக்குள் கட்டுமானங்களை நிர்மாணித்தல்
- விலங்கியல் பூங்காக்களையும் மற்றும் ச.்.பாரி பூங்காக்களையும் உருவாக்குதல்
- உயிரியல் பன்முகத்தன்மை பூங்காக்கள், இயற்கைப் பாதைகள் மற்றும் பூங்காக்கள் என்பவற்றை நிர்மாணித்தல்
- வன நிறுவனங்கள், வனசீவராசி நிறுவனங்கள்







## நீர்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி

நாம் ஒரு தொழில்முறை நீர் மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவைகள் மற்றும் தீர்வுகள் வழங்குநர்கள், சுத்தமான மற்றும் எரிசக்தித்திறன் கொண்ட தொழில்நுட்பங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமும் அவற்றை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதன் மூலமும் மின்சாரம் மற்றும் எரிசக்தி சவால்களை சமாளித்துக் கொள்கின்றோம்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்கள், நிலையான மேம்பாடு மற்றும் பொறியியல் துறைகளில் உள்ள எமது அறிவு சார்ந்த குழு மற்றும் சர்வதேச அளவில் தகுதிவாய்ந்த நிபுணர்களின் வலையமைப்பின் முயற்சிகள் என்பற்றின் மூலம் இது அடையப்படுகின்றது.

நீர் மின்சாரம், சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்தி வதிவிடங்களுக்கும், வணிகங்களுக்கும் மற்றும் சமூகங்களுக்கும் நீண்டகால மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம், எரிசக்தி பற்றாக்குறையை குறைப்பதன் மூலம் நிலையான தீர்வுகளை உருவாக்குவதற்கும் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கும் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.







## புவி தொழில்நுட்ப பொறியியல்

மண்ணை மீளப்பலப்படுத்தல் மற்றும் தரையை நிலைப்படுத்தல் ஆகியவற்றுக்கான தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளில் நாம் நிபுணர்கள். புவி தொழில்நுட்ப பொறியாளர்கள், புவியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய மிகவும் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் எமது வலிமை. எமது அனுபவத்தினால் தொழில்நுட்ப வளங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தி செலவு குறைந்த புவி தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தீர்வுகளை நாம் இணைக்கிறோம்.

நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான முறைமைகள் மற்றும் தீர்வுகள் ஆகியன அடங்கலாக மிக உயர்ந்த தரமான சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குகின்றோம்.

- புவி தொழில்நுட்ப ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகள்
- நிலச்சரிவு தணிப்பு
- சாய்வு மற்றும் பாறை வீழ்ச்சி பாதுகாப்பு
- அத்திவாரம் மற்றும் அத்திவார மண் மேம்பாடு
- சாய்வு நிலைப்படுத்தல்
- புவி பௌதீகவியல் ஆய்வு





## உள்ளக வடிவமைப்பு

உயர்நிலை குடியிருப்பு சொகுசு வீடுகள் மற்றும் வணிகக் கருத்திட்டங்கள் என்பவற்றுக்கு ஆயத்த தயாரிப்பு வடிவமைப்பு தீர்வுகளை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளோம்.

வாடிக்கையாளரின் தனிப்பட்ட பாணியுடனும் மற்றும் விருப்பங்களுடன் இணைந்த காலத்தால் அழியாத தரமான, அதிவிஷேட வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டுத்தன்மை கொண்ட ஆடம்பரமான, அதிநவீன உட்புறங்களை உருவாக்கும் எமது திறனால் நாம் வெற்றியை அடைந்துள்ளோம். மிக முக்கியமாக, எமது வாடிக்கையாளரின் பாதீட்டையும் மற்றும் நிலையான காலவரிசையையும் நாம் மதிக்கின்றோம்.

- வடிவமைப்பு ஆலோசனை
- இடம்சார் திட்டமிடல்
- ஒளி வடிவமைப்புகள்
- தளபாடங்களை ஒழுங்கமைத்து நிறுவுதல்





## புவியியல்சார் பொறியியல்

எமது உயர்நிலை துல்லியமான புவியியல் பொறியியல் தீர்வுகளின் மூலம், செயற்பாடுகளை நெறிப்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், கணக்கெடுப்பு, வரைபட வளர்ச்சியை செயற்படுத்தும் முழு அளவிலான புவியியல் தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும் நாம் எப்போதும் தயாராக இருக்கின்றோம். CESL வடிவமைப்பு, சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் அழகுபடுத்தல் மற்றும் பகுப்பாய்வு சேவைகளை வழங்குகின்றது.

- LiDAR ட்ரோன் வான்வழி ஆய்வு மற்றும் வரைபடமாக்கல்
- புவியமைப்பு பற்றிய ஆய்வு
- புவித்தொழில்நுட்ப சேவைகள்
- DGPS சேவைகள்
- நிலகீழ் வசதியமைப்பு மற்றும் வரைபடமாக்கல்
- மின் காந்த உப மேற்பரப்பு ஆய்வு மற்றும் அழகுபடுத்தல்
- 2D மற்றும் 3D லேசர் ஸ்கேனிங் மற்றும் மாடலிங்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- நீரியல் வரைபு ஆய்வு
- உசாதுணை
- சுற்றாடல் மதிப்பீடுகள்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- பிரயோக அபிவிருத்தி
- நிலையற்ற மின்காந்த புவி பௌதீகவியல் சேவைகள்







## டிஜிட்டல் பொறியியல்

எமது டிஜிட்டல் பொறியியல் சேவைகள் மேம்பட்ட கட்டிட தகவல் மாதிரியாக்கம் (BIM) மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் மூலம் சிறந்த வடிவமைப்பு, கட்டுமானம், முகாமைத்துவம் ஆகியவற்றை செயற்படுத்துகின்றன. நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்:

- BIM சேவை முகாமைத்துவம்
- கட்டடக்கலை மாதிரி உருவாக்கம்
- நிர்மாண மாதிரி உருவாக்கம்
- MEP மாதிரி உருவாக்கம்
- சிவில் மாதிரி உருவாக்கம்
- 5D BIM (சரியான செலவு மதிப்பீடு)
- BIM இற்கான ஸ்கேன்





# வணிகச் செயற்பாடுகளின் கண்ணோட்டம்

பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா கெம்பஸ் நூலகத்திற்கான ஒரு மூன்று மாடி கட்டிடத்தை வடிவமைத்து, நிர்மாணித்து உத்தியோகபூர்வ திறந்துவைத்தல்

- **வாடிக்கையாளரின் பெயர்:** உயர் கல்வி அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 355 மில்லியன் இ.ஷெரு.
- **அமைவிடம்:** பம்பைமடு











## உத்தேச சிறுநீரகவியல், குருதிசுத்திகரிப்பு மற்றும் மாற்று அறுவை சிகிச்சை அலகு போதனா வைத்தியசாலை நிர்மாணம், கராப்பிட்டி, காலி



- **வாடிக்கையாளர் பெயர்:** சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 713 மில்லியன் இஷ்ரூ
- **அமைவிடம்:** காலி கராப்பிட்டிய

## தேசத்திற்கு மகுடம் சார்பாக புதிய மாத்தறை கங்கொடகம பொது வைத்தியசாலைக்கான உத்தேச அபிவிருத்தி



- **வாடிக்கையாளரின் பெயர்:** சுகாதாரா, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 608 மில்லியன் இஷ்ரூ
- **அமைவிடம்:** காலி கங்கொடகம







## இரத்தினபுரி மாகாண மட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

- **வாடிக்கையாளரின் பெயர்:** விளையாட்டுத் துறை அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 445 மில்லியன் இஷரூ
- **அமைவிடம்:** இரத்தினபுரி









## மாத்தறை ப்ரவுன்ஸ் ஹில் இலங்கை ரெலிகம் பிஎல்சி நிறுவனத்திற்கான உபகரண கட்டிட நிர்மாணம்

- **வாடிக்கையாளரின் பெயர்:** இலங்கை ரெலிகம் PLC
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 209 மில்லியன் இஷரூ
- **அமைவிடம்:** மாத்தறை







## காலி, ஹப்புகல, ருஹுணு பல்கலைக்ழக பொறியியல் பீடத்திற்கான சமுத்திரக் கல்விகள் மற்றும் கப்பல்துறைக்கான தென் நிலையத்திற்குரிய இரண்டு கட்டிடங்களின் வடிவமைப்பு, நிர்மாணம், மேற்பார்வை, நிறைவு மற்றும் பராமரிப்பு

- **வாடிக்கையாளரின் பெயர்:** ருஹுணு பல்கலைக்ழகம்
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை** 595 மில்லியன் இஷரூ
- **அமைவிடம்:** காலி ஹப்புகல








## நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலகக் கட்டிடப் புனர்நிர்மாணம்

- **வாடிக்கையாளரின் பெயர்:** நீதிச் சேவைகள் ஆணைக்குழு
- **தற்போதைய நிலை:** நிறைவு
- **நிறைவு செய்த ஆண்டு:** 2024
- **ஒப்பந்தத் தொகை:** 117 மில்லியன் இஷரூ
- **அமைவிடம்:** கொழும்பு











## இலங்கை வயம்ப குளியாபிட்டிய பல்கலைக்கழ நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

- **வாடிக்கையாளரின் பெயர்:** உயர் கல்வி அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிகழ்கின்றது
- **ஒப்பந்தத் தொகை:** 2,950 மில்லியன் இஷரூ
- **அமைவிடம்:** குளியாபிட்டிய















## குளியாபிட்டிய நாரங்கொல்ல கற்பித்தல் பிரிவுக்கான தேசிய கல்விக் கல்லூரி மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி நிலையம் - கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (KOICA) நோக்கெல்லை

- **வாடிக்கையாளரின் பெயர்:** உயர் கல்வி அமைச்சு
- **தற்போதைய நிலை:** நிகழ்கின்றது
- **ஒப்பந்தத் தொகை:** 940 மில்லியன் இஷுரு
- **அமைவிடம்:** குளியாபிட்டிய நாரங்கொல்ல













# நிதிக் கூற்றுக்கள்



- சுயாதீனக் கணக்காய்வாளர் அறிக்கை
- விரிவான வருமானக் கூற்று
- நிதி நிலைக் கூற்று
- ஒப்புரவு மாற்றங்கள் கூற்று
- காசுப்பாய்ச்சல் கூற்று
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல. } CAE/D/CESL/09/FS/2024/01
My No

දිනය
திகதி } 2025 ஜுன் 09
Date

தவிசாளர்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (தனியார்) கம்பனி

**சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (தனியார்) கம்பனியின் 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்படும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (தனியார்) கம்பனியின் 2024 திசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைக் கூற்று, அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க உரிய தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது வழிகாட்டல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப் படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான கம்பனியின் நிதி நிலை மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி சார்ந்த செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான ஒரு நிலையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 · +94 11 2 88 72 23 · ag@auditorgeneral.gov.lk · www.naosl.gov.lk

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலம் பற்றி வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 2.3.6 இன் பிரகாரமும் கம்பனியால் வருடாந்தம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயனுள்ள பாவனை காலம் பற்றி மீளாய்வு செய்வதாக குறிப்பிடப்பட்டு இருந்தாலும், 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முழுமையாக தேய்ந்திருந்த 883.88 மில்லியன் ஷரூபா பெறுமதியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயனுள்ள பொருளாதார பாவனை காலம் மீண்டும் மதிப்பிடப்படாமல் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இற்கு இணங்க மதிப்பீட்டு வித்தியாசங்கள் சீராக்கப்பட்டு சரியான கொணரப்படும் பெறுமானம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமல் கம்பனியால் அந்த சொத்துக்கள் தொடர்ச்சியாக பாவிக்கப்பட்டு இருந்தன.

(ஆ) மீளாய்வு ஆண்டில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டு இருந்த 2.74 மில்லியன் ஷரூபா பெறுமதியான சொத்துக்களின் அகற்றல் மூலமான இலாபத்தினுள் முன்னைய ஆண்டுகளின் அகற்றல்களுக்கு உரிய மேலதிக சீராக்கல்கள் (Adjustment of Over - depreciated amount in disposal from previous years) 1.69 மில்லியன் ஷரூபா உள்ளடக்கப்பட்டு இருந்ததால் ஆண்டின் ஏனைய வருமானம் அந்த அளவினால் மிகைத்து காட்டப்பட்டு இருந்தது.

(இ) கம்பனியால் அதன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்திற்கு முறையே 62.16 மில்லியன் ஷரூபாவும் மற்றும் 2242.95 மில்லியன் ஷரூபாவும் செலுத்த வேண்டிய வணிகக் கடன்களாகவும் மற்றும் செலுத்த வேண்டிய பணி ஆரம்பித்தல் முற்பணங்களாகவும் இனங்காணப்பட்டு இருந்தன. தாய் நிறுவனத்தால் அதன் கணக்குகளில் கிடைக்க வேண்டிய வணிகக் கடன்களாகவும் மற்றும் கிடைக்க வேண்டிய பணி ஆரம்பித்தல் முற்பணங்களாகவும் முறையே 53.20 மில்லியன் ஷரூபாவும் மற்றும் 2239.57 மில்லியன் ஷரூபாவும் இனங்காணப்பட்டு இருந்தன. அதற்கு ஏற்ப கம்பனியினதும் மற்றும் அந்த தாய் நிறுவனத்தினதும் நிதிக் கூற்றுக்களில் வணிகக் கடன்கள்/ பற்றுக்கள் மற்றும் கிடைக்க வேண்டிய/ செலுத்த வேண்டிய பணி ஆரம்பித்தல் முற்பணங்கள் தொடர்பான நிலுவைகளில் முறையே 8.96 மில்லியன் ஷரூபா மற்றும் 3.37 மில்லியன் ஷரூபா வித்தியாசம் காணப்பட்டது.

(ஈ) 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தப்பட்ட வருடாந்த பொருள் இருப்புக்கள் மற்றும் சொத்துக்கள் உறுதிப்படுத்தலின் போது தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை ஆகியவற்றின் 03 கருத் திட்ட அலகுகளுக்கு சொந்தமான இருப்புக்கள் மற்றும் சொத்துக்கள் பலவற்றில் மிகை இருக்கின்றமையும், ஏலத்தில் விற்பனை செய்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அகற்றிய நிலையான சொத்துக்கள் தொழில்முயற்சி வளங்கள் திட்ட (ERP) முறைமையினுள் மேலும் காணப்படுகின்றமையும், சொத்துக்கள் சிலவற்றில் பற்றாக்குறை நிலவுகின்றமையும் தெரிய வந்திருந்தன. என்றாலும் ஏனைய மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பவற்றின் நிதிப் பெறுமானம் அறிக்கையிடப்படும் தினத்திலும் அந்த முறைமையினுள் சீராக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) கம்பனியின் செலுத்த வேண்டியவை, செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல்கள் மற்றும் வணிகளவில் கிடைக்க வேண்டியவை என்பன பற்றிய விரிவான அட்டவணைக்கு இணங்க முறையே 64.85 மில்லியன் ஷரூபாவும், 28.42 மில்லியன் ஷரூபாவும் மற்றும் 26.54 மில்லியன் ஷரூபாவும் கம்பனியின் பெயரிலேயே உள்ளடக்கப்பட்டு இருந்தன. அதன்படி, நிறுவனத்தின் உள்ளகப் பிரிவுக்கு இடையில் நிகழும் கொடுக்கல்வாங்கல்கள், இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட நேரத்தில் இணக்கல் செய்யப்பட்டு சீராக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களை நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவத்தினால் உரிய கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட போது கம்பனியின் தள அலுவலகங்களுக்கு இடையில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் நீக்கப்பட வேண்டி இருந்தாலும், 27.71 மில்லியன் ஷரூபா பெறுமதியான உள்ளகக் கொடுக்கல்வாங்கல்கள் வருமானத்தின் கீழ் கணக்குக் காட்டப்பட்டு இருந்த காரணத்தால் வருமானம் அதே அளவினால் மிகைத்துக் காட்டப்பட்டு இருந்தன.

(எ) 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி இலங்கை ஹதபிம அதிகார சபையுடன் கூட்டிணைந்த ஒரு கோழி வளர்ப்புக் கருத் திட்டத்திற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி ஒரு கூட்டிணைந்த தொழில்முயற்சி ஒப்பந்தம் (Joint venture agreement) செய்து கொள்ளப்பட்டு இருந்தது. குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் முதல் 06 ஆண்டுகளினுள் நிபந்தனைகளின் கீழ் தேறிய இலாபத்தில் நூற்றுக்கு 70 வீத இலாபத்தை கம்பனிக்கும் மற்றும் நூற்றுக்கு 30 வீத இலாபத்தை அதிகார சபைக்கும் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பாடு எட்டப்பட்டு இருந்தது. ஹதபிம அதிகார சபையின் 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 3.56 மில்லியன் ஷரூபா தேறிய இலாபம் ஈட்டப்பட்டு இருந்தாலும், குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கம்பனிக்கு இலாபம் பகிர்ந்தளிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், கம்பனிக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டு இருக்கவுமில்லை. இது வரை கம்பனியால் இந்தக் கருத் திட்டத்திற்கு செலவு செய்த மொத்தம் 87.39 மில்லியன் ஷரூபா தொகை மாத்திரம் நிகழும் பணியாக கம்பனியின் நடைமுறை சார்ந்த சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டு இருந்தது. இந்தக் கருத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப் பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையை வழங்க என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

## 1.3 கம்பனியின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிற்குப் பின்னர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் இந்த கம்பனியின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும் நிதிக் கூற்றுக்களிலும் எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடங்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் எனப் பொருள்படும். இத்தகைய ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூறவேண்டும்.

குறித்த இந்த ஏனைய தகவல்கள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயத்தில் உள்ளடக்கப்படவில்லை. மேலும் நான் எந்த உறுதிப்படுத்தலையும் செய்யவில்லை அல்லது எந்த வகையிலும் அது பற்றிய எந்த அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவுமில்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வை பொறுத்தவரையில், மேலே இனங்காணப் பட்டுள்ள ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது அவற்றை வாசிப்பதும், அவ்வாறு வாசிக்கின்ற போது, அத்தகைய ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் நான் பெற்ற எனது அறிவுக்கு முரணாக உள்ளதா அல்லது வேறு விதமாக உள்ளதா என்பதைக் கருத்தில்கொள்வதும் எனது பொறுப்பாகும்.

எனது கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும் என்னால் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் அடிப்படையிலும் இந்த ஏனைய தகவல்கள் போதியளவில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளன என நான் அவதானித்தால், அத்தகைய விடயங்கள் என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது தொடர்பில் என்னால் அறிக்கையிடுவதற்கு எதுவும் கிடையாது.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் மீது முகாமைத்துவத்தினதும் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினதும் பொறுப்புகள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாமானதாக சமர்ப்பிப்பதற்கு மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க இயலும் வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியை தொடர்ந்து பேணிச்செல்லக்கூடிய அதன் ஆற்றலைத் தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் கம்பனியை ஒழித்துக்கட்டுவதற்கு எண்ணினால் அல்லது மாற்றுவழி இல்லையென கருதும் சந்தர்ப்பத்தில் அதன் செயற்பாடுகளை நிறுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுத்தால் ஒழிய தொடர்ந்திருக்கும் அடிப்படையில் கணக்குகளைக் காட்டுவதும் மற்றும் கம்பனியின் தொடர்ந்திருக்கும் நிலை பற்றிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடுகை செயன்முறை தொடர்பில் பரிசீலித்துப் பார்ப்பது கட்டுப்பாட்டுத் தரப்புகளின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சொந்த வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பில் சரியான முறையில் புத்தகங்களும் அறிக்கைகளும் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது பிழை காரணமாக எழக்கூடிய போதிய பொய்யான கூற்றுக்கள் நீங்கியன என்பதற்கு நியாமான ஒரு உறுதிப்பாட்டை வழங்குவதும் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தில் உள்ளடங்கும் கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதமானது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும். என்றாலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் ஒரு கணக்காய்வை மேற்கொள்ளும் போது எல்லா நேரங்களிலும் பொய்யான கூற்றுக்களை அது கண்டுபிடிக்கும் என்பதற்கு ஒரு உத்தரவாதமாக அமையாது. மோசடி அல்லது பிழை தனியாக அல்லது கூட்டாக பாதிக்கும் என்பதால் போதிய பொய்யான கூற்றுக்கள் ஏற்படக் கூடும். அதன் போதிய தன்மையானது இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார ரீதியான தீர்மானங்களை நோக்கிய தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் ஒரு கணக்காய்வின் ஒரு பாகமாக, நான் கணக்காய்வில் தொழில்முறை தீர்ப்பு மற்றும் தொழில்முறை சந்தேகம் ஆகியவற்றின் பேரில் செயற்பட்டேன். பின்வருவனவற்றையும் நான் மேற்கொண்டுள்ளேன்:

- எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை நான் வழங்குவதில், நிதிக் கூற்றுக்களில் மோசடி அல்லது பிழைகள் காரணமாக போதிய தவறான கூற்றுக்கள் நிகழக்கூடிய அபாயத்தைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்காக, ஒருமுறையான கணக்காய்வு நடைமுறை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. மோசடியின் தாக்கம், பிறழ்கூற்றினால் ஏற்படக் கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களின் தாக்கத்தை விடவும் அதிகமாகஉள்ளது, ஏனெனில்அவை கூட்டு, மோசடி, வேண்டுமென்றே விடுபடுதல்கள், தவறான பிறழ்கூற்றுக்கள் அல்லது உள்ளகக்கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுள்ள தன்மை பற்றிய ஒரு அபிப்பிராயத்தை வெளியிடும் எண்ணத்தில் இல்லாவிட்டாலும் சமயோசித ரீதியில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறையைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஒரு புரிதல் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்படும் உரிய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனி தொடர்ந்திருப்பது தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை உண்டா என்பது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை இருப்பதை நான் அவதானித்தால், நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வாளர் அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை நான் மாற்றிக் கொள்ள வேண்டும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் கம்பனி நிலைத்திருப்பதை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் என்பன உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த விளக்கம், அடிப்படையான பரிவர்த்தனைகள், நிகழ்வுகளின் பொருத்தமான மற்றும் நியாயமான உள்ளடக்கங்கள் என்பன மதிப்பிடப்பட்டன.

எனது கணக்காய்வின் போது கண்டறிந்த முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளகக் கட்டுப்பாட்டின் முக்கிய பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் என்பவற்றை கட்டுப்பாட்டுத் தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலும் கீழ்காணும் தேவைப்பாடுகள் தொடர்பான விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவிலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கண்ககாய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தேவைப்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக்கு தேவையான அனைத்துத் தகவல்களும் மற்றும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன. எனது கணக்காய்வு விசாரணையில் இருந்து தெரிய வருகின்ற விதத்தில் சரியான முறையில் நிதி அறிக்கை கம்பனியால் பேணிச்செல்லப்பட்டு இருந்தது.

2.1.2 கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை அனுசரித்து காணப்படுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்துப்போகுகின்றன.

2.1.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, எனது அறிக்கையில் உள்ளடங்கியுள்ள முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவின் 1.2 (அ), (இ), (உ) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர, முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்டு இருந்த சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றிய நடவடிக்கைகள் மற்றும் கிடைத்த சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் போதியளவான விடயங்களுக்கு மட்டுப்படுவதன் ஊடாகவும் கீழே வெளிப்படுத்துமளவுக்கு நான் எதனையும் அவதானிக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் நிருவாக சபையில் உள்ள எவரேனும் ஊழியர் ஒருவருக்கு கம்பனி சம்பந்தப்படும் ஏதாவது ஒரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் வழமையான வணிக நிலைமைகளுக்குப் புறம்பாக ஒரு தொடர்பு இருக்கின்றமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கீழ்காணும் அவதானிப்புகள் தவிர, ஏதாவது உரிய சட்டத்திற்கு அல்லது எழுத்திலான சட்டத்திற்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஏதாவது பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளமை.

| **சட்டங்களுக்கான/ ஒழுங்குவிதிகளுக்கான குறிப்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) இ மற்றும் 38 (2) ஆம் பிரிவு | பிரதான கணக்கீட்டு அதிகாரிகளும் மற்றும் கணக்கீட்டு அதிகாரிகளும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிதிக் கட்டுப்பாட்டின் நிமித்தம் ஒரு பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பேணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அந்த முறைமையின் பயனுள்ள தன்மை தொடர்பில் அவ்வப்பொழுது மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளதாக பேணிச்செல்லும் பொருட்டு தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். மேலும் அந்த மீளாய்வு எழுத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன் ஒரு பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். எனினும் அதன் பிரதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (ஆ) பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டுக் கைந்நூல்<br>(i) 4.3 (iii) ஆம் பந்தி | கம்பனியால் சகல பொருள் இருப்புக்கள் மற்றும் விநியோகங்கள் ஆகியவற்றை முகாமை செய்யும் பொருட்டு முறையான ஒரு பொருள் இருப்பு முறைமை பேணப்படுதல் வேண்டும். எனினும் கம்பனியால் பாவிக்கப்படும் தொழில்முயற்சி வளங்கள் திட்ட முறைமையின் (ERP) பிரகாரம் முறையான காலப் பகுப்பாய்வு அறிக்கையை தயாரிப்பதற்கான சாத்தியம் இல்லை. ஆகையால் காலம் தாண்டிய, மந்தமாக நகரும் மற்றும் நகராத பொருட்களை இனங்காண முடியாதிருந்தது. |
| (ii) 3.2 மற்றும் 3.4 ஆம் பந்திகள் | பல பதவிகளுக்கான பதவியணியினரை ஆட்சேர்த்துக் கொள்ள முன்னர் கம்பனியினுள் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டமும் ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்கள் தொடர்பான ஒரு திட்டமும் இருத்தல் வேண்டும். என்றாலும் அத்தகைய ஒரு ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டமும் மற்றும் பதவி உயர்கள் தொடர்பான திட்டமும் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவிலும் கூட கம்பனியால் தயாரிக்கப்பட்டு அனுமதித்துக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. |
| (இ) 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் பிரமாணக் குறிப்பின் 5.4.4 (iii) ஆம் பந்தி | ஒப்பந்தத் தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது உரிய கொடுப்பனவுகளில் நூற்றுக்கு 90 வீதத்தை செலுத்த முன்னர் அந்தத் தரப்புகளுக்கு செலுத்திய முற்பணம் முழுமையாக அறவிடப்படுதல் வேண்டும் என்றிருந்தாலும் 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு 6 தள அலுவலகங்களின் கருத் திட்டங்கள் தொடர்பான பணிகள் நூற்றுக்கு 90-100 வரை நிறைவடைந்த 16 கருத் திட்டங்களுக்குரிய மொத்தம் 376.67 மில்லியன் ஷரூபா பணி ஆரம்பித்தல் முற்பண நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றுக்கு முரணாக செயற்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கீழ்காணும் அவதானிப்புகள் தவிர, கம்பனியின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனானவும், பயனுள்ளதாகவும் மற்றும் உரிய காலப் பகுதிகளினுள் உரிய சட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பாவிக்கப்படாமை.

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள 60 பேர்ச் அளவான ஒரு காணியை 30 ஆண்டு காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கம்பனியால் 2019 ஆம் ஆண்டில் 15.43 மில்லியன் ரூபா குத்தகைப் பணமாக அதிகார சபைக்கு ஒரே தடவையில் செலுத்தப்பட்டு இருந்தது. எனினும் மீளாய்வு ஆண்டு இறுதியிலும் கூட இந்த குத்தகை சொத்து தொடர்பாக கம்பனியால் அதிகார சபையுடன் முறையான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மேலும், கம்பனியால், இந்தக் காணியில் சபரகமுவ தள அலுவலகத்தை அமைக்கும் முகமாக ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. சட்டமுறையான நிலைமைகளை கருத்திற் கொள்ளாமல் முறையான ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டு குத்தகைப் பணம் செலுத்தப்பட்டமை மற்றும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை என்பன சொத்தின் பாவனையின் போது அவதானத்திற்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் வழிவகுக்கக் கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு இணங்க, கம்பனிக்கு அதன் முழுமையாக நிறைவு செய்யப்பட்ட நிர்மாணக் கருத் திட்டங்களிலிருந்து முறையே 745.47 மில்லியன் ரூபாவும், 942.90 மில்லியன் ரூபாவும் மற்றும் 667.42 மில்லியன் ரூபாவும் என செயற்பாட்டு இலாபங்கள் முறையே 2024, 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கிடைத்து இருந்தன. மீளாய்வு ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வந்த 203 கருத் திட்டங்களில் 35 கருத் திட்டங்களுக்கு மொத்தம் 444.49 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டம் ஏற்படும் நிலைக்கு காரணமாக இருந்த விடயங்களை தற்பொழுது இனங்கண்டு தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிர்மாண கருத் திட்டங்களை வினைத் திறனாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் கண்காணிக்கும் பொருட்டு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. இந்த நிலை கம்பனி தொடர்ந்திருக்கும் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வு ஆண்டிற்கு கம்பனி 190.56 மில்லியன் ரூபா ஒட்டுமொத்த செயற்பாடு இலாபம் ஒன்றைப் பெற்றிருந்தது. அனுராதபுர தள அலுவலகம், வடமேல் மாகாண தள அலுவலகம் மற்றும் அபுதாபியில் அமைந்துள்ள பிரிவு ஆகியவற்றினால் முறையே 1.75 மில்லியன் ரூபா, 17.85 மில்லியன் ரூபா மற்றும் 58.42 மில்லியன் ரூபா என்ற வீதத்தில் செயற்பாடு சார்ந்த இலாபங்கள் பதிவாகியிருந்தன.

(இ) 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கம்பனியால் அதன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்திற்கு 1569.40 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டி இருந்தும் இது தொடர்பாக தரப்புகளுக்கு இடையில் சரியான முறையில் இற்றைப்படுத்திய ஒப்பந்தங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நிலுவையை தீர்ப்பனவு செய்யும் முகமாக இரண்டு நிறுவனங்களினதும் முகாமைத்துவங்களால் எந்த விதமான பயனுள்ள நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. ஆகையால் 2017 ஆம் ஆண்டு முதல் இந்த நிலுவை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

(ஈ) 2024 திசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைக் கூற்றுக்கு இணங்க, மொத்த கடன் நிலுவை 3049.96 ஷரூபாவாக இருந்தது. அதில் 313.43 மில்லியன் ஷரூபா மற்றும் 152.85 மில்லியன் ஷரூபா தொகைகள் முறையே 03-05 வரையான காலமும் மற்றும் 05 வருடங்களுக்கு அதிகமான காலமும் நிலுவையாக இருந்தன. எனினும், அந்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) உரிய முறையில் கடமைப் பணிகள் (Segregation of duty) பகிரப்படாமை, ERP கடவுச்சொல் பரகசியமாக இருந்தமை மற்றும் தென் மாகாண தள அலுவலகத்தின் நிதிப் பிரிவில் உள்ளகக் கட்டுப்பாட்டில் நிலவிய பலவீனத்தின் காரணமாக அதில் களஞ்சிய உதவியாளர் ஒருவராக கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரினால் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் கம்பனிக்கு சொந்தமான நான்கு நடைமுறை வங்கிக் கணக்குகளிலிருந்து மொத்தம் 50.06 மில்லியன் ஷரூபா மோசடியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்டு இருந்த ஆரம்ப விசாரணைக் குழுவின் மூலம் கண்டறியப்பட்டிருந்தது. மூன்று சந்தர்ப்பங்களில், அதில் 0.44 மில்லியன் ஷரூபா தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், மொத்தம் 49.62 மில்லியன் ஷரூபா தொகை கம்பனிக்கு அறவிட வேண்டி இருந்தது. எனினும், இந்தத் தொகையை அறவிடுவதற்கும் மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையையும் ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுப்பதற்கு கம்பனியால் விரைவில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலவிய 1671.90 மில்லியன் ஷரூபா கடன் நிலுவையினுள் 400.00 மில்லியன் ஷரூபா தொகையை 2 முதல் 5 ஆண்டுகள் வரையான காலப் பகுதியினுள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு 3051.27 மில்லியன் ஷரூபா கிடைக்க வேண்டிய பிடித்து வைத்தல் (Retention Receivable) நிலுவையினுள் 3 முதல் 5 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ள 514.87 மில்லியன் ஷரூபாவையும், 05 ஆண்டுகளுக்கு அதிக காலம் நிலுவையாக உள்ள 490.75 மில்லியன் ஷரூபாவையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு 875.45 மில்லியன் ஷரூபா செலுத்த வேண்டிய பிடித்து வைத்தல் (Retention Payable) நிலுவையினுள் உள்ளடங்கியிருந்த 434.44 மில்லியன் ஷரூபா 2 முதல் 5 ஆண்டுகள் வரையும், 189.67 மில்லியன் ஷரூபா 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் வரையும் தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தன.

(ஐ) கம்பனி மற்றும் இலங்கை ஹதபிம அதிகார சபை ஆகியன கூட்டிணைந்து பள்ளேகெல மற்றும் கொத்மலை ஆகிய பண்ணைகளுக்காக மேற்கொண்ட பொலிடெனல் முறைமைய அறிமுகப்படுத்தும் கருத் திட்டம் (Introducing new poly tunnels for vegetable cultivation at Pallekale and Kothmale farms) தொடர்பாக 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்து. எனினும், அதற்கு பணிப்பாளர்கள் சபையின் அனுமதி கிடைத்திருப்பது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதியாகும். மீளாய்வு ஆண்டு இறுதியிலும் கூட இரு தரப்புகளுக்கு இடையில் முறையான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ஜி.எச்.டீ. தர்மபால

**கணக்காய்வாளர் நாயகம் (பதில்)**

# விரிவான வருமானக் கூற்று

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு | குறிப்பு | CESL 2024 ரூ. | CESL 2023 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | 5 | 8,724,149,677 | 6,854,078,181 |
| விற்பனைக் கிரயம் | 6 | (7,666,057,947) | (6,383,502,298) |
| **மொத்த இலாபம்** | | **1,058,091,730** | **470,575,883** |
| பிற வருமானம் | 7 | 83,428,555 | 78,390,115 |
| நிர்வாக செலவுகள் | | (948,966,363) | (917,306,336) |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | | (1,992,527) | (14,959,827) |
| **இயக்கச் செயல்பாடுகளின் பெறுபேறுகள்** | | **190,561,395** | **(383,300,165)** |
| நிதி வருமானம் | | 481,291,273 | 701,358,095 |
| நிதி செலவு | | (7,761,126) | (15,359,708) |
| **தேறிய நிதி சார் வருமானம்** | 8 | **473,530,147** | **685,998,387** |
| **வருமான வரிச் செலவுக்கு முன் இலாபம்** | | **664,091,542** | **302,698,222** |
| ஆண்டுக்கான வருமான வரி | 9 | (138,969,741) | (118,430,333) |
| ஆண்டிற்கான லாபம்/(நட்டம்) | | **525,121,801** | **184,267,889** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் மீதான ஆதாயம்/(இழப்பு) | 18.(d) | (5,486,275) | (14,828,504) |
| வெளிநாட்டு செயல்பாட்டின் மொழிபெயர்ப்பில் நிகர பரிமாற்ற வேறுபாடுகள் | | 1,205,016 | |
| **ஆண்டிற்கான பிற விரிவான வருமானம்** | | **(4,281,259)** | **(14,828,504)** |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | **520,840,542** | **169,439,385** |

அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழிப்பனவுகளைக் குறிக்கின்றன.

பக்கம் 41 முதல் 76 வரை உள்ள நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒரு பகுதியாகும்.

## நிதி நிலைக் கூற்று

டிசம்பர் 31 நிலவரப்படி

| | குறிப்பு | CESL 2024 ரூ. | CESL 2023 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 10 | 353,803,883 | 386,496,709 |
| பயன்பாட்டு உரிமை | 11 | 12,605,050 | 13,119,226 |
| முடிவுறா வேலைகள் - மூலதன சொத்துக்கள் | 12 | 84,024,722 | 64,711,225 |
| உயிரியல் சொத்துக்கள் | 10A | 27,867,390 | 20,283,662 |
| நீண்ட கால முதலீடுகள் | 13 | 151,594,466 | 145,322,938 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | 20 | 11,784,967 | - |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **641,680,479** | **629,933,759** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 14 | 865,601,139 | 808,100,936 |
| முடிவுறா வேலைகள் | 15 | 133,953,904 | 116,073,806 |
| உயிரியல் சொத்துக்கள் | 16 | 147,298 | 833,858 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 17 | 7,311,271,330 | 6,456,082,879 |
| குறுகிய கால முதலீடுகள் | 13 | 4,730,176,347 | 3,963,681,274 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 18 | 1,398,242,931 | 2,239,127,962 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **14,439,392,949** | **13,583,900,715** |
| **மொத்த சொத்துக்கள்** | | **15,081,073,428** | **14,213,834,474** |
| **உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகள்** | | | |
| பங்களிப்பு மூலதனம் | | 10,000,020 | 10,000,020 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 150,270,564 | 150,270,564 |
| நிறுத்திவைத்த வருவாய் | | 1,728,303,458 | 1,207,462,916 |
| | | **1,888,574,042** | **1,367,733,500** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நலப் பொறுப்பு | 19 | 53,775,759 | 41,891,785 |
| பிற்போட்ட வரி | 20 | - | 32,616,677 |
| தொடர்புடைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் | | 1,569,400,941 | 1,545,964,909 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | **1,623,176,700** | **1,620,473,371** |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் பிற செலுத்த வேண்டியவை | 21 | 11,431,380,039 | 11,180,365,043 |
| வருமான வரி செலுத்த வேண்டியவை | 22 | 137,942,647 | 45,262,559 |
| தள அலுவலக நடப்புக் கணக்குகள் | | - | - |
| வங்கி மேலதிகப் பற்று | 18 | - | - |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **11,569,322,686** | **11,225,627,603** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | **15,081,073,428** | **14,213,834,474** |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழித்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.

பக்கம் 41 முதல் பக்கம் 76 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ள என இத்தால் சான்றுபடுத்துகின்றோம்.

**திரு எச்.எம்.ஐ.யூ. ஹேரத்**
கணக்காளர்/பிரதான நிதி அதிகாரி

**பொறியியலாளர் எஸ்.பீ.ஏ.டீ. சேமசிங்க**
பிரதான நிறைவேற்று அதிகாரி

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.
நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**பொறியியலாளர் ஏ.பி. ஜயதிஸ்ஸ**
தவிசாளர்

**பொறியியலாளர் எஸ்.ஏ.யூ.டீ.சி. சிறிவர்த்தன**
பணிப்பாளர்

2025 பெப்ருவரி 27 ஆம் திகதி

## ஒப்புரவு மாற்றங்கள் கூற்று

| | CESL | | | |
|---|---|---|---|---|
| | பங்களித்த மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கம் ரூ. | மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. | பிடித்துவைத்தல் சம்பாத்தியங்கள் ரூ. |
| **2023 ஜனவரி 01 ஆம் திகதிற்கான நிலுவை** | 10,000,020 | - | 194,550,564 | 1,021,645,174 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | | | | (27,901,643) |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | | - | (44,280,000) | 44,280,000 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம் | - | - | | 184,267,889 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | | (14,828,504) |
| **2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | 10,000,020 | - | 150,270,564 | 1,207,462,916 |
| **2024 ஜனவரி 01 ஆம் திகதிற்கான நிலுவை** | 10,000,020 | | 150,270,564 | 1,207,462,916 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம் | - | - | | 525,121,801 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | (5,486,275) |
| வெளிநாட்டு செயற்பாட்டு பரிவர்த்தனை மீதான தேறிய நாணயமாற்று வித்தியாசங்கள் | | | - | 1,205,016 |
| **2024 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | 10,000,020 | - | 150,270,564 | 1,728,303,458 |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழித்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.

பக்கம் 41 முதல் பக்கம் 76 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | CESL | |
|---|---|---|
| | 2024 ரூ. | 2023 ரூ. |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னருள்ள இலாபம் | **664,091,542** | **302,698,222** |
| ***பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:*** | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீதான தேய்மானம் | 121,883,656 | 140,868,800 |
| தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு | - | - |
| உயிரியல் வளங்கள் மீதான தேய்மானம் | 10,294,296 | - |
| பதிவழிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் | - | - |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 13,058,967 | 8,916,036 |
| தீராத பற்றுக்கான ஏற்பாடு | | - |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் அகற்றல் மீதான இலாபம் | (2,744,518) | 33,895,979 |
| குத்தகை நிலத்தின் கழிவு | 514,175 | 514,176 |
| அபு தாபி அலுவல செயற்பாடுகள் மீதான நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | 1,205,016 | - |
| தேறிய நிதிசார் வருமானம் | (473,530,147) | (685,998,387) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | **334,772,987** | **(199,105,174)** |
| பொருட்பதிவேடுகளில் உள்ள (அதிகரிப்பு)/குறைவு | (57,500,203) | 173,462,592 |
| வணிக மற்றும் ஏனைய கிடைப்பனவுகளில் உள்ள (அதிகரிப்பு)/குறைவு | (855,188,451) | 2,082,027,241 |
| உயிரியல் வளங்களில் உள்ள (அதிகரிப்பு)/குறைவு | 686,560 | (833,858) |
| வணிக மற்றும் ஏனைய கொடுமதிகளில் உள்ள அதிகரிப்பு/(குறைவு) | 251,014,996 | 429,421,419 |
| உரிய கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகளில் உள்ள அதிகரிப்பு/(குறைவு) | 23,436,032 | 7,898,231 |
| நிகழும் பணியில் உள்ள (அதிகரிப்பு)/குறைவு | (17,880,098) | (51,398,284) |
| பொது தொங்கு கணக்கு கடன் நிலுவையில் உள்ள அதிகரிப்பு | - | - |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | **(320,658,177)** | **2,441,472,168** |
| செலுத்திய வட்டி | (7,761,126) | (15,359,708) |
| செலுத்திய வரி | (90,691,297) | (106,230,296) |
| செலுத்திய பணிக்கொடை | (6,661,268) | (9,989,238) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(425,771,869)** | **2,309,892,927** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (69,890,977) | (48,059,483) |
| உயிரியல் வளங்கள் கொள்வனவு | (17,878,023) | - |
| நிகழும் மூலதனப் பணியில் உள்ள முதலீடு | (38,364,777) | (20,456,854) |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் விற்பனை வருமானம் | 2,495,947 | 6,006,693 |
| மானியங்கள் பெறுகை | - | - |
| குறுங்கால வைப்பில் உள்ள முதலீடு | (766,495,073) | (1,217,496,509) |
| நீண்டகால வைப்பில் உள்ள முதலீடு | (6,271,528) | (145,322,938) |
| பங்குலாபங்கள் | - | - |
| வட்டி வருமானம் | 481,291,273 | 701,358,095 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(415,113,157)** | **(723,970,995)** |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பங்குகள் விநியோகத்திலிருந்து கிடைத்த வருமானம் | - | - |
| செலுத்திய பங்குலாபங்கள் | - | |
| கடன் கொடுப்பனவு | - | - |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்கள் கொடுப்பனவு | - | - |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **-** | **-** |
| காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலும் உள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு) | (840,885,026) | 1,585,921,932 |
| ஆரம்பத்திலுள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | 2,239,127,956 | 653,206,026 |
| **இறுதியிலுள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்** | **1,398,242,931** | **2,239,127,962** |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழித்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.

பக்கம் 41 முதல் பக்கம் 76 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 1. கூட்டுத்தானத்தின் தகவல்கள்

### 1.1. பொதுவான தகவல்கள்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் ('கம்பனி') வரையறுக்கப்பட்டுள்ள ஒரு கூட்டிணைந்த தனியார் கம்பனியாகும். இந்த கம்பனி இலங்கையில் அமைந்துள்ளது. இந்த கம்பனியின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7, இலங்கை என் முகவரியில் அமைந்துள்ளது.

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. இதனையடுத்து இந்த கம்பனி 2007 இன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி மீளப்பதிவு செய்யப் பட்டுள்ளது. எனினும், இது 2011 ஆம் ஆண்டில் மட்டுமே அதன் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அந்த ஆண்டிற்கு முன்னர் இந்த கம்பனி அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை.

### 1.2. பிரதான செயற்பாடுகளும் செயற்பாடுகளின் தன்மையும்

இந்த கம்பனி ஏதாவது வகையான பொறியியல் செயற்பாட்டுடன் அல்லது ஏதாவது பொறியியல் சம்பந்தமான செயற்பாட்டுடன் இணைந்த நிர்மாண கருத்திட்டங்களை பொறுப்பேற்று, நிறைவேற்றி செயலாற்றும் வணிக விடயத்தில் ஈடுபட்டுள்ளது.

### 1.3. தலைமை அலுவலகம்

இலக்கம், பௌத்தாலோக்க மாவத்தை<br>
கொழும்பு 07.

### 1.4. கம்பனி செயலாளர்

செல்வி ஜே.ஏ.ஐ.சி. ஜயசிங்க<br>
இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.

### 1.5. வங்கிகளின் பட்டியல்

இலங்கை வங்கி<br>
மக்கள் வங்கி

### 1.6. குறிப்பிடத்தக்க பங்குகள்

குறித்த ஆண்டு இறுதியில் கம்பனியின் ஏகபோக பங்கு பின்வருமாறு இருந்தது:

| பங்குகள் | பங்குகளின் எண்ணிக்கை | பங்கொன்றுக்கான பெறுமானம் (ரூ.) | மொத்த பெறுமானம் (ரூ.) | பங்கு விகிதம் |
|---|---|---|---|---|
| மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் | 100,000 | 100 | 10,000,000 | 100% |
| | 2 | 10 | 20 | |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரயோகித்த பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு விதத்தில் எடுத்துரைக்காத வரயில் இந்தக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள எல்லா ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

## 2.1. கணக்குகளை தயாரிக்கும் அடிப்படை

### 2.1.1 இணக்கல் கூற்று

நிதி நிலைக் கூற்றையும், இலாப அல்லது நட்டக் கூற்றையும், ஏனைய முழுமையான வருமானக் கூற்றையும், ஒப்புரவு மாற்றங்கள் கூற்றையும், காசுப் பாய்ச்சல் கூற்றையும், கணக்கீட்டுக் கொள்கைகளையும் மற்றும் நிதிக் குறிப்புக்களையும் (நிதிக் கூற்றுக்கள்) உள்ளடக்கிய இந்த கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவகம் (இலங்கை CA) விதித்திருக்கின்ற இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRSs/LKASs) மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.2 நிதிக் கூற்றுக்களின் பிரிவுகள்

நிதிக் கூற்றில் பின்வரும் பிரிவுகள் உள்ளடங்குகின்றன:

அ) முழுமையான வருமானக் கூற்று: குறித்த ஆண்டிற்கான கம்பனியின் நிதி செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்குதல்.

ஆ) நிதி நிலைக் கூற்று: குறித்த ஆண்டு இறுதியில் உள்ளது போல் கம்பனியினதும் மற்றும் அதன் குழுவினதும் நிதிக் கூற்று பற்றிய தகவல்களை வழங்குதல்.

இ) ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று: மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் கம்பனியினதும் குழுவினதும் எடுத்துரைத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் என்பவற்றின் நகர்வுகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

ஈ) காசுப் பாய்ச்சல்கள் கூற்று: காசு ஈட்டுதல் மற்றும் காசு ஒப்புரவுகள் மற்றும் அதன் பயன்பாடு என்பன பற்றிய தகவல்களை வழங்குதல்.

உ) நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்: கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றை வழங்குதல்.

2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்படும் முகமாக 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி அன்று பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

### 2.1.3 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்புக்கள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளினதும் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களினதும் (SLFRSs/LKASs) பிரகாரம் கம்பனியினது நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

### 2.1.4 நிதிக் காலப் பகுதி

கம்பனியின் நிதிக் காலப் பகுதி 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான ஒரு 12 மாத காலப் பகுதியாகும்.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.1.5 தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் கம்பனி இயங்கும் அதன் ஆரம்ப பொருளாதார சூழலில் உள்ள நாணயத்தை பயன்படுத்தி அளவிடப் படுகின்றன. கம்பனி நிதிக் கூற்றுக்கள் அதன் தொழிற்படு நாணயமான இலங்கை ஷரூபாவில் (ரூ.) எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.1.6 அளவிடும் அடிப்படை

நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் விடயப் பொருட்கள் தவிர, இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

அ) நிதி சார்ந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் SLFRS 09 என்ற நியாய பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளன.

ஆ) ஊழியர் நன்மைகள் பொறுப்பு LKAS 19 என்ற அட்டுறு மதிப்பீட்டின் அடிப்படையில் இனங்காணப் பட்டுள்ளது.

இ) பொருள் இருப்புக்கள் LKAS 2 என்ற அவற்றின் தற்போதைய பெறுமானத்தில் கொணரப் படுகின்றன.

### 2.1.7 ஒத்தீட்டுத் தகவல்கள்

நிதிக் கூற்றுக்களில் முன்னைய காலப் பகுதி தொடர்பாக பொருத்தமானவாறு வெளிப்படுத்தப்படுகின்ற கனிய, குறுகிய மற்றும் விரிவான தகவல்கள் ஒத்தீட்டுத் தகவல்களில் அடங்குகின்றன. முன்னைய நிதிக் கூற்றின் சமர்ப்பணமும் மற்றும் வகைப்படுத்தலும் பொருத்தமானவாறு நடைமுறை ஆண்டின் அத்தகையவற்றுடன் ஒப்பிடக்கூடிய மிக சிறந்த சமர்ப்பணத்தின் நிமித்தம் திருத்தப்படுகின்றன.

### 2.1.8 அண்ணளவாக்குதல்

இலங்கை ஷரூபாவில் வழங்கப்பட்டுள்ள எல்லா நிதி சார்ந்த தகவல்களும் வேறு விதமாக சுட்டிக்காட்டப்படாத போது நெருங்கிய ஷரூபாவில் (ரூ.) அண்ணளவாக்கப் பட்டுள்ளன.

### 2.1.9 சமப்படுத்தல்

சொத்துக்களும் பொறுப்புக்களும் அல்லது வருமானமும் செலவினமும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படுத்தப்படாத அல்லது அனுமதிக்கப்படாத வரையில் சமப்படுத்தப்படுவதில்லை.

### 2.1.10 பொருண்மையும் கூட்டுமொத்தமும்

ஒரேமாதிரியான பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படுகின்றது. வித்தியாசமான ஒரு தன்மையை அல்லது வேறு விதமான ஒரு தொழிற்பாட்டை உடைய பொருட்கள் அவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய தனித்தனியாக காட்டப்படுகின்றன.

### 2.1.11 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் வருமானங்களின் பதிவாகிய தொகைகள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் அவற்றுடன் இணைந்த வெளிப்படுத்தல்கள் மற்றும் இடைநேர் பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் முதலியவற்றை பாதிக்கும் தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும் மற்றும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகின்றது. இந்த எடுகோள்கள் பற்றிய நிச்சயமற்ற தன்மையும் மதிப்பீடுகளும் எதிர்காலங்களில் தாக்கத்திற்குள்ளாகும் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் கொணரப்படும் தொகைளுக்கான ஒரு பொருண்மையான சீராக்கலை தேவைப்படுத்த வழிவகுக்கக்கூடும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.1.11 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் (தொடரும்)

அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கு ஒரு பொருண்மையான சீராக்கலை செய்வதற்கு தேவைப்படுத்தும் குறிப்பான ஒரு ஆபத்தைக் கொண்டிருக்கும் அதவாது அறிக்கையிடும் திகதியில் எதிர் காலத்துடன் சம்பந்தப்படுகின்ற முக்கிய எடுகோள்களும் மதிப்பீட்டின் நிச்சயமற்ற ஏனைய முக்கிய மூலங்களும் கீழே நிரல் விடயங்களுடன் சம்பந்தப்படுகின்ற நிதிக் கூற்றின் தனித்தனி குறிப்புகளிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டநேரத்தில் கிடைக்கக்கூடியதாகவிருந்த அளவுகோள்கள் அடிப்படையில் கம்பனி அதன் எடுகோள்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டது. எனினும், எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பாக ஏற்கனவேயுள்ள சூழ்நிலைகளும் மற்றும் எடுகோள்களும் கம்பனியின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் எழும் சந்தை மாற்றங்களினால் அல்லது சூழ்நிலைகளினால் மாற்றமடையலாம். அத்தகைய மாற்றங்கள் நிகழும் போது எடுகோள்களில் அவை பிரதிபலிக்கப்படும்.

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் முக்கியமான தீர்மானங்களும், மதிப்பீடுகளும் மற்றும் எடுகோள்களும் பிரகோகிக்கப்பட்டுள்ளவிடத்து பின்வரும் கரும விடயங்களை முகாமைத்துவம் கருத்திற்கொண்டது:

**நிகழ் எண்ணக்கரு**

முகாமைத்துவம் அதன் கம்பனி தொடர்ந்திருக்கும் ஆற்றலை ஒரு நிகழ் எண்ணருவின் அடிப்படையில் மதிப்பீடுசெய்து எதிர்காலத்தில் எதிர்வுகூறக்கூடியளவில் வணிகத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கக்கூடிய வளங்கள் அதற்கு உண்டு என திருப்தியடைகிறது. மேலும், ஒரு நிகழ் எண்ணக்கரு என்ற வகையில் கம்பனியினது ஆற்றல் தொடர்ந்து இருக்கும் என்பதன் பேரில் கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்தலாம் எனும் நிலைமை சம்பவத்துடன் தொடர்புடைய ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் அறியவில்லை. எனவே, ஒரு நிகழ் எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படும்.

கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கான ஒரு பொருண்மையான சீராக்கலுக்கு விளைவாக அமைகின்ற கணிசமான ஆபத்தையும் மற்றும் இனங்காணப்படும் தொகையில் ஒரு தாக்கத்தையும் கொண்டிருக்கின்ற தீர்மானங்கள், எடுகோள்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைகள் என்பன தொடர்பான தகவல்கள் பின்வரும் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

அ) திட்டவட்டமான நன்மைகள் கடப்பாட்டு அளவீடு: உண்மையான முக்கியமான எடுகோள்கள்
ஆ) நிதி உபகரணங்களின் நியாயப் பெறுமான அளவீடு
இ) நிதிசார்ந்த சொத்துக்களில் நட்டம்: உண்மையான அறவிடக்கூடிய தொகை பற்றிய முக்கியமான எடுகோள்
ஈ) வருமான வரி (நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி)
உ) நிதியேற்பாடுகளையும் இடைநேர் செலவுகளையும் இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்: வாழ்வாதாரமும் மற்றும் வளங்களின் ஒரு வெளிப்பாய்ச்சல் அளவும் பற்றிய முக்கியமான எடுகோள்
ஊ) சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் (PPE) பயனுள்ள பாவனை காலத்தை மதிப்பிடுதல்
எ) உயிரியல் சொத்துக்களின் நியாய விலைப்பெறுமானம்

## 2.1.12 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

கம்பனி சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நிதி நிலைக் கூற்றில் நடைமுறை / நடைமுறையல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் முன்வைக்கின்றது. ஒரு சொத்து:

அ) வழமையான செயற்பாட்டு வட்டத்தில் மாற்ற அல்லது விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படும் அல்லது நுகரப்படும்
ஆ) குறிப்பாக வணிக நோக்கத்திற்கு வைக்கப்படும்
இ) அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் பன்னிரெண்டு மாதங்களுக்குள் மாற்ற எதிர்பார்க்கப்படும் அல்லது
ஈ) அறிக்கையிடும் காலத்திக்கு பின்னர் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்களுக்கு ஒரு பொறுப்பை தீர்ப்பனவு செய்ய பரிமாற்றப்படுவதிலிருந்து அல்லது பயன்படுத்தப்படுவதிலிருந்து மட்டுப்படுத்தப்படாத வரையில் காசு அல்லது காசு ஒப்புரவாக இருக்கும் போது ஒரு நடைமுறை சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி அதன் ஏனைய சகல சொத்துக்களையும் நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்துகின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.1.12 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல் (தொடரும்)

ஒரு பொறுப்பு:

அ) வழமையான செயற்பாட்டு வட்டத்தில் தீர்ப்பனவு செய்ய எதிர்பார்க்கப்படும்

ஆ) குறிப்பாக வணிக நோக்கத்திற்கு வைக்கப்படும்

இ) அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் பன்னிரெண்டு மாதங்களுக்குள் மாற்ற எதிர்பார்க்கப்படும் அல்லது

ஈ) அறிக்கையிடும் காலப்பகுதிற்கு பின்னர் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்களுக்கு ஒரு பொறுப்பின் தீர்ப்பனவை பிற்போடுவதற்கு நிபந்தனையற்ற உரிமை இருக்கும் போது ஒரு பொறுப்பாக வகைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி ஏனைய எல்லா பொறுப்புக்களையும் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்துகின்றது. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.1.13 கடன்வாங்கல் செலவுகள்

ஒரு சொத்து அதன் எதிர்பார்த்த பாவனைக்கு அல்லது விற்பனைக்கு ஆயத்தமாகும் பொருட்டு அத்தியாவசியமாக பொருண்மையான ஒரு காலத்தை நுகரும் அத்தகைய ஒரு சொத்தின் கொள்வனவுக்கு, நிர்மாணத்திற்கு அல்லது உற்பத்திற்கு நேரடியாக சேரக்கூடிய கடன்வாங்கல் செலவுகள் அந்த சொத்தின் பாகமாக மூலதனமாக்கப் படுகின்றன. ஏனைய எல்லா கடன்வாங்கல் செலவுகளும் அவை ஏற்படும் காலப் பகுதியில் EIR முறையியலை பிரயோகித்து செலவாக காட்டப்படுகின்றன. நிதிகளின் கடன்வாங்கலுடனான இணைப்பில் ஒரு நிறுவனத்திற்கு ஏற்படும் வட்டியும் மற்றும் ஏனைய செலவுகளும் கடன்வாங்கல் செலவுகளில் அடங்குகின்றன.

### 2.1.14 காசுப் பாய்ச்சல்கள் கூற்று

'காசுப் பாய்ச்சல்கள் கூற்று' என்ற இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இற்கு இணங்க 'நேரடி முறையியலை' பிரயோகித்து காசுப் பாய்ச்சல்கள் கூற்று தயாரிக்கப் பட்டுள்ளது. கையிலுள்ள காசும், வங்கியிலுள்ள காசும் மற்றும் பெறுமான மாற்றத்தின் கணிசமான ஒரு ஆபத்துக்கு அமைவாகவும், தெரிந்த காசுத் தொகைக்கு உடனடியாக சேரக்கூடியதுமான குறுங்கால முதலீடுகளும் காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலும் உள்ளடங்கும்.

கிடைக்கும் வட்டியும் மற்றும் கிடைக்கும் பங்குலாபங்களும் முதலீட்டுக் காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இதே நேரம் செலுத்தப்படும் பங்குலாபம் நிதியிடும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது. செலுத்தப்படும் வட்டி காசுப் பாய்ச்சல்கள் கூற்றை சமர்ப்பிக்கும் நோக்கத்தின் நிமித்தம் இயக்கச்செயற்பாட்டு காசு பாய்ச்சல்களின் கீழ் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது.

கோரிக்கை பேரில் மீளச்செலுத்தக்கூடியதும் கம்பனியின் காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக உருவாகுகின்றதுமான வங்கி மேலதிகப் பற்றுக்களும் குறுங்கால கடன்வாங்கல்களும் காசுப் பாய்ச்சல்கள் கூற்றின் நோக்கத்திற்காக காசும் மற்றும் காசு ஒப்புரவினதும் ஒரு பாகமாக உள்ளடக்கப்படுகின்றன.

### 2.2. வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை

**கொடுக்கல்வாங்கல்களும் நிலுவைகளும்**

எல்லா வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்களும் தொழிற்படு நாணயத்திற்கு உரிய முறையில் மாற்றப்படுகின்றன. கம்பனி தொழிற்படு நாணயத்தை நிர்ணயிக்கின்றது. கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அந்த தொழிற்படு நாணயத்தை பிரயோகித்து அளவிடப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள் இனங்காணலின் நிமித்தம் அந்தக் கொடுக்கல்வாங்கல் முதலில் தகுதிபெறுகின்ற திகதியில் அந்தந்த தொழிற்படு நாணய ஸ்தல வீதங்களில் ஆரம்பத்தில் கம்பனியால் பதியப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.2. வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை (தொடரும்)

**கொடுக்கல்வாங்கல்களும் நிலுவைகளும் (தொடரும்)**

வெளிநாட்டு நாணயத்தில் எடுத்துரைக்கப்படும் நிதி சார்ந்த சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்களும் அறிக்கையிடும் திகதியிலுள்ள ஸ்தல நாணயப் பரிமாற்றல் வீதத்தில் தொழிற்படு நாணயங்களின் ஒப்புரவுகளுக்கு மீளப்பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் அளவிடப்படும் நிதி சாராத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்ல்களின் திகதியிலுள்ள பரிமாற்றல் விகிதங்களை பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. மேலும் நிதி சாராத சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்களும் பெறுமானங்கள் நிர்ணயிக்கப்படும் போது இருந்த நாணயமாற்று வீதங்களை பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய வித்தியாசங்கள் பொதுவாக ஏனைய முழுமையான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

### 2.2.1 வெளிநாட்டு செயற்பாடு

வெளிநாட்டு செயற்பாடுகளில் காணப்படும் சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்களும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ஷரூபாவுக்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. அவற்றின் இலாப அல்லது நட்டக் கூற்றுக்கள் அந்தக் கொடுக்கல்வாங்கல்கள் திகதிகளில் நிலவுகின்ற நாணயமாற்று விகிதத்தில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இணக்கலின் நிமித்தம் கொடுக்கல்வாங்கலின் பேரில் எழுகின்ற நாணயமாற்று வித்தியாசங்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

## 2.3. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஒரு வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மற்றும் நிருவாக அல்லது சேவைகளை வழங்கும் நோக்கத்திற்கு வைக்கப்படுகின்றதும் மற்றும் பயன்படுகின்றதுமான கம்பனியின் சொந்த சொத்துக்களுக்கு கணக்கீடு செய்வதில் 'சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்' தொடர்பான LKAS 16 இன் தேவைப்பாடுகளை கம்பனி பிரயோகிக்கின்றது.

### 2.3.1 இனங்காணலும் அளவீடும்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன சொத்துக்கள் கம்பனிக்கு செல்வதிலும் மற்றும் சொத்துக்களின் செலவை நம்பத்தகுந்த விதத்தில் அளவிடக்கூடியதாக இருப்பதிலும் சம்பந்தப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகள் சாத்தியப்படுமாயின் இனங்காணப்படுகின்றன.

எல்லா சொத்துக்களும், பொறித்தொகுதிகளும், உபகரணங்களும் முதலில் செலவில் பதியப்படுகின்றன. கம்பனி சொத்துக்களுக்கும், பொறித்தொகுதிகளுக்கும் மற்றும் உபகரணங்களுக்கும் செலவு மாதிரியைப் பிரயோகித்து குறைந்த திரண்ட தேய்மானம் மற்றும் ஏதாவது திரண்ட நட்டங்கள் ஆகியவற்றின் ஏதாவது இடைநேர் செலவுகள் அடங்கலாக கொள்வனவின் அல்லது நிர்மாணத்தின் அவற்றை செலவில் பதிகின்றது. கொணரப்படும் பெறுமானத்தை மீளறவிடுவதற்கு முடியாது என சுட்டிக்காட்டுகின்ற சூழ்நிலைகளில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் இருக்கின்ற போது நட்டத்திற்காக சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் கொணரப்படும் பெறுமானங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஒரு மீள்விலைமதிப்பீட்டின் பயனாக ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அதிகரிக்கும் போது, அத்தகைய அதிகரிப்பு ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டு மீள்விலைமதிப்பீட்டு மிகைகளின் தலைப்பின் கீழ் ஒப்புரவில் திரட்டப்படுதல் வேண்டும். எனினும், அத்தகைய அதிகரிப்பு இலாபத்தில் இல்லது நட்டத்தில் முன்னர் இனங்காணப்பட்டுள்ள அதே சொத்தின் ஒரு மீள்விலைமதிப்பீட்டு குறைவை ஒதுக்கும் அளவுக்கு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுதல் வேண்டும்.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.3.1 இனங்காணலும் அளவீடும் (தொடரும்)

ஒரு மீள்விலைமதிப்பீட்டின் விளைவாக ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை குறையும் போது, அத்தகைய குறைவு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப் படுதல் வேண்டும். எனினும், அத்தகைய குறைவு அந்த சொத்து தொடர்பான மீள் விலை மதிப்பீட்டு மிகையில் இருக்கின்ற ஏதாவது ஒரு கடன் நிலுவையின் அளவுக்கு ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுதலும் வேண்டும். ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படும் அத்தகைய குறைவு மீள்விலை மதிப்பீட்டு மிகைகளின் தலைப்பின் கீழ் ஒப்புரவில் திரட்டப்படுகின்ற தொகையை குறைக்கும்.

சொத்தின், பொறித்தொகுதியின், உபகரணத்தின் ஒரு பொருள் தொடர்பில் ஒப்புரவில் உள்ளடக்கப்படும் மீள்விலைமதிப்பீட்டு மிகைகள் குறித்த சொத்து இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்ற போது பிடித்துவைத்தல் சார்ந்த சம்பாத்தியங்களுக்கு நேரடியாக மாற்றப்படலாம்.

### 2.3.2 முழு உரிமையுடைய சொத்துக்கள்

ஒரு சொத்தின், பொறித்தொகுதியின் மற்றும் உபகரணத்தின் செலவுகளில் அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்த்த பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக சேரக்கூடிய ஏதாவது செலவுகள் ஆகியன உள்ளடங்கும். சுயமாக நிர்மாணம் பெற்ற சொத்துக்களின் செலவில் மூலப்பொருட்கள் செலவு, நேரடி தொழிலாளர் செலவு மற்றும் அதன் எதிர்பார்த்த பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக சேரக்கூடிய ஏதாவது செலவுகள் ஆகியன உள்ளடங்கும். இதில் பொருட்களை கழற்றிப் பொருத்தும் மற்றும் அகற்றும் செலவுகளும் மற்றும் அவை அமைக்கப்படும் ஸ்தலத்தில் மீளிடுவதற்கான செலவுகளும் மற்றும் தகுதிபெறும் சொத்துக்கள் பேரிலான கடன்வாங்கல் செலவுகளும் உள்ளடங்கும். ஒரு சொத்தின், பொறித் தொகுதியின் மற்றும் உபகரணத்தின் பாகங்கள் வித்தியாசமான பயனுள்ள பாவனை காலத்தைக் கொண்டிருக்கும் போது அவை அந்த சொத்தின், பொறித்தொகுதியின் மற்றும் உபகரணத்தின் தனியான பொருட்களாக (பிரதான கூறு) கணக்கீடு செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர்களிடமிருந்து மாற்றப்படுகின்ற சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன முதலில் அவற்றின் மீது கட்டுப்பாடு பெறப்படும் திகதியில் நியாயவிலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. சம்பந்தப்படுகின்ற உபகரணத்தின் தொழிற்பாட்டுடன் ஒன்றிணைகின்ற கொள்வனவு செய்யப்பட்டுள்ள மென்பாகம் உபகரணத்தின் பாகமாக மூலதனப்படுத்தப்படுகின்றது.

### 2.3.3 குத்தகை சொத்துக்கள்

கம்பனி அனைத்துப் பொருண்மையான ஆபத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் உரித்துடமை கிடைக்கும் அடிப்படையில் குத்தகைகள் நிதி சார்ந்த குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பேரில், குத்தகைசார்ந்த சொத்து அளவிடப்பட்டு அதன் நியாய விலைப் பெறுமானத்தின் குறைந்த அளவுக்கும் மற்றும் ஆகக்குறைந் தகுத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்திற்கும் சமனான ஒரு தொகையில் மூலதனமாக்கப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலை அடுத்து, சொத்து அந்த சொத்துக்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க கணக்கீடு செய்யப்படுகின்றது.

காணிப் பாவனை உரிமைகளை பெறுவதற்காக செலுத்தப்படும் முன்கூட்டிய குத்தகை வாடகைகள் நன்மைகள் கிடைக்கும் மாதிரிக்கு ஏற்ப குத்தகை நிபந்தனையின் பேரில் கழிக்கப்படுகின்றன. ஏதாவது பாதிப்பு நட்டம் இருந்தால், அது இலாப அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.3.4 பின்னர் எழும் செலவுகள்

சொத்தின், பொறித்தொகுதியின் மற்றும் உபகரணத்தின் ஒரு பொருள் பாகத்தினைப் பிரதியிடும் செலவு அந்தப் பொருளின் கொணரப்படும் தொகை அநேகமாக எதிர்கால பொருளாதார நன்மைகளில் நிலைத்திருக்குமாயின் இனங்காணப்படும். பாகத்தினுள் கம்பனிக்கு செல்லும் மற்றும் அதன் செலவு நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடியதாக இருக்கும் போது இது இனங்காணப்படும். மீளிடப்பட்டுள்ள பாகத்தின் கொணரப்படும் தொகை இனங்காணாது விட்டுவிடப்படுகின்றது. சொத்தின், பொறித்தொகுதியின் மற்றும் உபகரணத்தின் நாளாந்த சேர்விஸ் செலவுகள் ஏற்படுகின்றவாறு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.3.5 இனங்காணாது விட்டுவிடுதல்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன அகற்றலின் பேரில் அல்லது அவற்றின் எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாததன் பேரில் இனங்காணப்படுகின்றன. சொத்து இனங்காணாது விட்டுவிடப்படுவதனால் எழும் ஏதாவது இலாபம் இல்லது நட்டம் (சொத்தின் கொணரப்படும் தொகைக்கும் மற்றும் தேறிய அகற்றல் வருவாய்களுக்கும் இடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படும்) அந்த சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் ஆண்டில் முழுமையான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

### 2.3.6 தேய்மானம்

தேய்மானம் சொத்தின், பொறித்தொகுதியின் மற்றும் உபகரணத்தின் ஒவ்வொரு பாக விடயத்தினதும் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலத்தின் மீதான நேர்நிரல் அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. குத்தகை சார்ந்த சொத்துக்கள் குத்தகை காலத்தின் முடிவில் கம்பனி உரித்துடமையை பெறும் என்ற நியாயமான நிச்சயத்தன்மை இருந்தாலொழிய குத்தகை காலத்தின் குறுகிய காலத்தினதும் மற்றும் பயனுள்ள பாவனை காலத்தினதும் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் தேய்மானம் விற்பனைக்காக வைக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும் திகதியின் முன்னரே ஒரு சொத்தின் தேய்மானம் முடிவடையும் போதும் (விற்பனைக்காக வகைப்படுத்தப்படும் ஒரு அகற்றல் கம்பனியில் உள்ளடக்கப் படும் அல்லது) மற்றும் அந்த சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போதும் பாவனைக்காக கிடைக்கும் நேரத்தில் ஆரம்பமாகும்.

முழு உரிமையுடைய காணிக்கும் மற்றும் நிகழும் மூலதன பணிக்கும் தேய்மானம் கணிப்பிடப்படுவதில்லை. மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு காணப்படும்:

| சொத்து வகுதி | பயனுள்ள பாவனை காலம் (ஆண்டுகள்) |
|---|---|
| கட்டிடம் | 13 1/3 ஆண்டுகள் |
| வாகனம் | 10 ஆண்டுகள் |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் | 5 ஆண்டுகள் |
| கணனி, நலன்புரி மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள் | 8 ஆண்டுகள் |
| உபகரணங்கள் மற்றும் கருவிசாதனங்கள் | 5 ஆண்டுகள் |
| கொள்கலன் | 5 ஆண்டுகள் |
| வாசிகசாலை நூல்கள் | 8 ஆண்டுகள |

கமம்பனி PPE இன் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலங்களை வணிகத் திட்டம் மற்றும் திறமுறைத்திட்டங்கள், எதிர்பார்த்த பாவனை அளவு மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் போன்ற காரணிகளின் அடிப்படையில் வருடாந்தம் மீளாய்வு செய்து வருகின்றது. செயற்பாடுகளின் எதிர்கால பெறுபேறுகள் குறித்த காரணிகளில் உள்ள மாற்றங்களினால் உருவாகும் இந்த மதிப்பீடுகளில் இருக்கும் மாற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படக்கூடும். PPE இன் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலங்களில் ஒரு குறைவு பதிவாகியுள்ள தேய்மான கட்டணம் குறைவதற்கும் மற்றும் PPE இன் நிலுவை குறைவதற்கும் வழிவகுக்கலாம்.

தேய்மான கணிப்பீட்டு முறையியலும் சொத்துக்களின் ஈவுப் பெறுமானங்களும் மாற்றமடைந்துள்ள ஒரு சொத்தின் ஈவுப் பெறுமானம் அல்லது பயனுள்ள பாவனை காலம் இருப்பதாக சுட்டிகள் காண்பிக்கின்ற போது மீளாய்வு செய்யப்படுகின்றன. நடைமுறை எதிர்பார்ப்புகளில் கணிசமான ஒரு மாற்றம் இருந்துள்ளது எனில், ஈவுப் பெறுமானம், தேய்மான கணிப்பீட்டு முறையியல் அல்லது பயனுள்ள பாவனை காலம் என்பன அத்தகைய மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் திருத்தப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.3.7 நிகழும் மூலதனப் பணி - PPE

அறிக்கையிடும் திகதிற்கு நிறைவு செய்யப்படாத குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலவாகிய மூலதன செலவுகள், நிகழும் மூலதனப் பணியாக காட்டப்பட்டுள்ளன. அதே நேரத்தில் ஆண்டு முழுவதும் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டின் நிமித்தம் கிடைக்கக்கூடிய மூலதன சொத்துக்கள் சொத்து, பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 2.3.8 நிகழும் பணி - கணனி மென்பாகம் (கட்புலனாகா சொத்து)

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு வர வாய்ப்புள்ளதா, சொத்தின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமா என்ற அடிப்படையில் ஒரு கட்புலனாகா இனங்காணப்படுகின்றது. ERP மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகின்றது. ERP முறைமையின் அபிவிருத்தி செலவை தெளிவாக அடையாளம் காணவும், நம்பத்தகுந்த முறையில் அளவிடவும் முடியுமாக மற்றும் அவை எதிர்கால பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கும் போது, அவை நிதிக் கூற்றுக்களில் செயற்பாட்டில் உள்ள கட்புலனாகாத சொத்துக்கள் என்ற பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டு, செலவில் காட்டப்படுகின்றன.

### 2.3.9 வாகனங்கள்

அனைத்து வகை வாகனங்களிலும் 20மூ எஞ்சிய பெறுமானத்தை இனங்காணது விட்டு விட்டு, கணக்குகளில் தோன்றும் மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ள.்.பதியப்பட்டுள்ள தொகைகளின் மீது நேர்நிரல் முறையில் தேய்மானம் கணிக்கப்படுதல் வேண்டும். அனைத்து வாகனங்களினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலம் 2021.01.01 ஆம் திகதியிலிருந்து 10 ஆண்டுகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

## 2.4 உயிரியல் சொத்துக்களும் விவசாய உற்பத்தியும்

### 2.4.1 வளரும் உயிரியல் தாவரம்

நடுகைபண்ணல் மற்றும் அறுவடை செய்தல் ஆகிய காலப் பகுதிகளுக்கு இடையில் (நடுகைபண்ணப்பட்டுள்ள பகுதி முதிர்ச்சியடையும் போது) ஏற்படுகின்ற நில தயாரிப்பு, மறுசீரமைப்பு, புதிய நடுகை, மறு-நடுகை, பயிர் பல்வகைப்படுத்தல், இடை-நடுகை மற்றும் உரமிடுதல் போன்ற செலவுகள் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. இந்த முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களுக்கான நேரடி செலவுகள் மற்றும் முதிர்ச்சியடையாத தோட்டங்களுக்கு நிதியளிக்கும் முகமாக பயன் படுத்தப்படும் நீண்ட கால கடன்களுக்குக் காரணமான வட்டி (கடன் வாங்கும் செலவு) அடங்கலாக, காரணமான மேல்தலை செலவுகளில் காட்டப்படுகின்றன. வருடத்தில் காய்க்கும் வளர்கின்ற உயிரியல் சொத்துக்களுக்கு (கரும்பு வேர்கள், பசணி மரம், பப்பாளி மரம், மா மரம், சாண்ட்ரியானா மரம் மற்றும் தென்னம் தோட்டங்கள்) ஏற்படும் செலவு, முதிர்ந்த வளரும் உயிரியல் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டு, LKAS 16 - சொத்து, தாவரம் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு இணங்க அவற்றின் பயனுள்ள பாவனை காலத்தின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 1.1 முதிர்ச்சியடையாத மற்றும் முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டங்கள்

மறு நடுகை மற்றும் புதிய நடுகை செலவுகள் பயிர் அறுவடை செய்யும் நேரம் வரை முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. மேலும், பெருந்தோட்டத்தில் ஏற்படும் பொதுவான கட்டண செலவுகளை, அந்தந்த மறு நடுகை மற்றும் புதிய நடுகை ஆகியவற்றுக்கு செலவிடப்படுகின்ற உழைப்பு ஊதிய நாட்களின் அடிப்படையில் பிரித்து, முதிர்ச்சியடையாத பகுதிகளின் கீழ் மூலதனமாக்கலாம். எஞ்சிய பொதுவான கட்டணங்கள் அவை ஏற்படும் கணக்கீட்டு காலத்தில் செலவிடப்படும். விளைச்சல் பெறும் பகுதிகளின் செலவு நிதியாண்டு இறுதியில் முதிர்ச்சியடைந்த தோட்டங்களுக்கு மாற்றப்படும்.

### 1.2 உள்நிரப்பல் செலவுகள்

நிரப்புதலின் வடிவத்தில் ஏற்படும் நில அபிவிருத்தி செலவுகள், அந்தத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால நன்மைகளை, அதன் நிரப்புதலுக்கு முந்தைய செயல்திறன் மதிப்பீட்டின் தரத்திற்கு அப்பால் அதிகரித்தால் மட்டுமே, உரிய முதிர்ந்த புலத்திற்கு மூலதனமாக்கப்படும். அவ்வாறு மூலதனமாக்கப்படும் உள்நிரப்பல் செலவுகள், உரிய முதிர்ந்த தோட்டத்தின் புதிதாக மதிப்பிடப்பட்ட எஞ்சிய பயனுள்ள ஆயுட்காலத்தில் அல்லது காலாவதியாகாத குத்தகைக் காலத்தில், எது குறைவாக இருக்கின்றதோ, அதன் மீது தேய்மானம் கணிப்பிடப்படும்.

மூலதனமாக்கப்படாத உள்நிரப்பல் செலவுகள், அவை ஏற்படும் ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வளரும் பயிர் நாற்றுமேடைகள்**

நாற்றுமேடைகளின் செலவில் நேரடிப் பொருட்களின் விலை, நேரடி உழைப்பு மற்றும் நேரடியாகக் கூறப்படும் மேன்தலை செலவுகளின் பொருத்தமான விகிதம் என்பன அடங்கும்.

**தேய்மானம்**

தேய்மானம் என்பது, வளரும் உயிரியல் தாவரங்கள் முதிர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் போது ஆரம்பமாகுகின்றது. அதாவது அவை வணிக ரீதியாக சாத்தியமான முதல் பயிரை உற்பத்தி செய்யும் போது அவ்வாறு ஆரம்பமாகும். தேய்மானம் பின்வருமாறு:

| தேய்மானம் | பயனுள்ள பாவனை காலம் |
|---|---|
| கரும்புகள் | 05 ஆண்டுகள் |
| பசன் ப்ருட்டு | 05 ஆண்டுகள் |
| தென்னை | 20 ஆண்டுகள் |
| மா | 20 ஆண்டுகள் |
| சந்திரான | 05 ஆண்டுகள் |

### 2.4.2 வளரும் உயிரியல் தாவரத்தில் விளைபொருள் பயிர்

அறுவடைக்கு முன்னர், நிறுவனம் தனது விவசாய விளைபொருட்களை அதன் வளரும் தாவரத்திலிருந்து தனித்தனியாக இனங்காணுகின்றது. விற்பனைக்கான செலவுகளை குறைத்து இது நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றது. அத்தகைய விவசாய விளைபொருட்களின் நியாய விலைப் பெறுமானத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தினது முடிவிலும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.4.3 தாங்கு விலங்குகள்

தாங்கு விலங்குகள் என்பவை நுகர்வு விலங்குகள் அல்லாத பிற விலங்குகளாகும். தாங்கு விலங்குகள் விவசாய விளைபொருட்கள் அல்ல. எனினும் மாறாக, சுயமாக மீளுருவாகுவனவாகும். நிறுவனம் தாய் பறவைகளை தாங்கி உயிரியல் விலங்குகளாக அடையாளம் கண்டுள்ளது.

கோழி வளர்ப்புகள் விற்பனை செலவுகளைக் குறைத்து நியாயமான பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. தாய் கோழிகளின் நியாய விலை, உள் வருவாய் விகிதம், தாய் கோழிகளின் இறப்பு விகிதங்கள், முட்டை உற்பத்தி விகிதங்கள், முட்டைகளின் குஞ்சு பொரிக்கும் திறன் விகிதங்கள், ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சின் மதிப்பிடப்பட்ட சந்தை விற்பனை விலை மற்றும் தாய் கோழிகளின் மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் ஏற்படும் ஏனைய மதிப்பிடப்பட்ட பண்ணை செலவு ஆகியவற்றின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்ட பணப்புழக்க மாதிரியைப் பயன்படுத்தி (பயன்படுத்தப்படும் வேறு எந்த முறையையும் குறிப்பிடவும்) தீர்மானிக்கப்படுகின்றது.

### 2.4.4 நுகரக்கூடிய உயிரியல் வளங்கள்

நுகரக்கூடிய உயிரியல் வளங்கள் என்பது பண்ணை விளைபொருட்களாக அறுவடை செய்யப்பட வேண்டிய வளங்களாகும் அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்கப்பட வேண்டிய வளங்களாகும். காய்கறி தாவரங்கள், பிராய்லர் கோழிகள் மற்றும் குஞ்சு பொரிக்கும் முட்டைகள் ஆகியவை நுகரக்கூடிய உயிரியல் வளங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நுகரக்கூடிய உயிரியல் வளங்கள் விற்பனை செலவுகளை குறைத்து நியாய விலையில் அளவிடப்படுகின்றன. நிர்வாகத்தின் கருத்துப்படி, பிராய்லர் கோழிகள் மற்றும் குஞ்சு பொரிக்கும் முட்டைகளின் நியாயமான விலை பெறுமானத்தில் செலவு அண்ணளவாக கணக்கிடப்படுகின்றது. முக்கியமாக அந்த வளங்களின் உரிய குறுகிய வாழ்க்கைச் சுழற்சி மற்றும் பிராய்லர் கோழிகளில் குறிப்பிடத்தக்க பெறுமதி சேர்த்தல் உற்பத்தி செயல்முறையிலிருந்து எழுகின்றது. காரணம், ஆண்டின் இறுதியில் குஞ்சு பொரிக்கும் முட்டைகளுக்கு எந்தவித உயிரியல் மாற்றமும் காணப்படுவதில்லை என்பதாலாகும். அதன்படி, நுகரக்கூடிய உயிரியல் வளங்களின் விலை அவற்றின் நியாய விலைப் பெறுமானத்தை அண்ணளவாக மதிப்பிடுகின்றது.

### 2.4 இணைந்த செயற்பாடு

இணைந்த செயற்பாடு என்பது ஒரு கூட்டு ஏற்பாடாகும். இதன் மூலம் ஏற்பாட்டின் கூட்டுக் கட்டுப்பாட்டைக் கொண்ட தரப்பினர், அந்த ஏற்பாட்டுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றுக்கான கடமைகளுக்கு உரிமைகளைப் பெறுவார்கள். கூட்டு நிறுவனம், கூட்டு நடவடிக்கைகளின் கூட்டு சொத்துக்கள், பொறுப்புகள், வருவாய்கள் மற்றும் செலவுகளில் அதன் பங்கை அங்கீகரித்துள்ளது. பொருத்தமான வகைப்பாடுகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

### 2.5 நிதிசார் கருவிசாதனங்கள்

### 2.5.1 நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்கள்

கம்பனி அதன் நிதிசார் சொத்துக்களை இலாபத்தின் அல்லது நட்டத்தின், கடன்களின் முதிர்ச்சி, முதலீடுகளுக்காக ஒதுக்கப்படும் மற்றும் விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஏனைய கிடைப்பனவுகள் என்பவற்றின் ஊடாக நியாய விலைப் பெறுமானத்தில் வகைப்படுத்துகின்றது. கம்பனி அதன் நிதிசார் பொறுப்புக்களை இலாபத்தின் அல்லது நட்டத்தின் மற்றும் கடன்களின் மற்றும் கடன்வாங்கல்களின் ஊடாக நியாய விலைப் பெறுமானத்தில் பின்வரும் வகுதிகளில் வகைப்படுத்துகின்றது.

நிதிசார் சொத்துக்கள் / நிதிசார் பொறுப்புகள் எந்த நோக்கத்திற்காக வாங்கப்பட்டன என்பதைப் பொறுத்து இந்த வகுதி சார்ந்துள்ளது. ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதி சொத்துக்களின் / பொறுப்புகளின் வகுதியை நிர்வாகம் தீர்மானிக்கின்றது. மேலும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் இந்த நிலையை மீளாய்வு செய்கின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.5.2 ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

நிறுவனம், கருவியின் ஒப்பந்த விதிகளுக்கு ஒரு தப்பாக மாறும்போது, அதன் நிதிக் கூற்றுக்களில் ஒரு நிதிசார்ந்த சொத்தை அல்லது நிதிசார்ந்த பொறுப்பை நிறுவனம் இனங்காணுகின்றது.

நிறுவனம் ஆரம்பத்தில் அதன் நிதி சொத்துக்களை நியாய மதிப்பில் அளவிடுகின்றது. ஒரு நிதிசார்ந்த சொத்து இலாபம் அல்லது இழப்பு மூலம் நியாய விலைப் பெறுமானம் இல்லாத நிலையில், நிதி சார்ந்த சொத்தை கொள்வனவு செய்வதற்கு நேரடியாக காரணமாக அமையும் பரிவர்த்தனை செலவுகள், நிதி சார்ந்த சொத்தின் விலையில் உள்ளடக்கப்படும்.

நிறுவனம் ஆரம்பத்தில் அதன் நிதிப் பொறுப்புகளை நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடுகின்றது. இலாபம் அல்லது இழப்பு மூலம் நியாய விலைப் பெறுமானம் இல்லாத நிதிசார் பொறுப்பு ஏற்பட்டால், நிதிசார் பொறுப்புகள் வெளிப்படுத்துகைக்கு நேரடியாகக் காரணமான பரிவர்த்தனை செலவுகள், கொரணப்படும் பெறுமானத்தில் இருந்து கழிக்கப்படும். வர்த்தகசார் கிடைப்பனவுகள் ஆரம்பத்தில் SLFRS 15 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பரிவர்த்தனை விலையில் அளவிடப்படுகின்றன.

### 2.5.3 நிதிசார் சொத்துக்களை வகைப்படுத்தல்

(i) நிதிசார் சொத்துக்கள் பின்னர் தேய்மான செலவில், நியாய விலைப் பெறுமானம் பிற விரிவான வருமானம் மூலம் அல்லது நியாயமான மதிப்பு இலாபம் அல்லது இழப்பு மூலம் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

அ) நிதிசார் சொத்துக்களை முகாமைசெய்வதற்கான கம்பனியின் வணிக மாதிரி மற்றும்

ஆ) நிதிசார் சொத்துக்களின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்பியல்புகள்

(ii) கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதிசார் சொத்துக்கள்

ஒரு நிதிசார் சொத்து பின்வரும் நிபந்தனைகள் இரண்டும் பூர்த்தி செய்யப்பட்டால் கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது.

அ) ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் பொருட்டு நிதிசார் சொத்துக்களை ஒதுக்கிவைப்பதற்கான குறிக்கோள் உடன் கூடிய ஒரு வணிக மாதிரியினுள் வைக்கப்படும் நிதிசார் சொத்து மற்றும்

ஆ) நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும், அவை அசல் மற்றும் நிலுவையில் உள்ள அசல் தொகைக்காக முற்றிலும் செலுத்தப்படும் வட்டி

(iii) ஏனைய முழு வருமானம் மூலம் நியாயமான விலைப் பெறுமானத்தில் அளவிடப்படும் நிதி சொத்துக்கள்

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், ஒரு நிதி சார்ந்த சொத்து ஏனைய முழுமையான வருமானத்தின் மூலம் அதன் நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்படும்.

அ) ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதிசார் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகிய இரண்டின் மூலம் அடையப்படும் நோக்கத்துடன் கூடிய ஒரு வணிக மாதிரியினுள் ஒதுக்கிவைக்கப்படும் நிதிசார் சொத்து மற்றும்

ஆ) நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும், அவை அசல் மற்றும் நிலுவையில் உள்ள அசல் தொகைக்காக முற்றிலும் செலுத்தப்படும் வட்டி

(iv) இலாபம் அல்லது இழப்பு மூலம் நியாயமான விலைப் பெறுமானத்தில் அளவிடப்படும் நிதிசார் சொத்துக்கள்

ஒரு நிதிசார் சொத்து மேற்குறித்த (ii) மற்றும் (iii) ஆம் பந்திகளுக்கு இணங்க ஏனைய முழுமையான வருமானத்தின் ஊடாக கழிக்கப்பட்ட செலவில் அல்லது நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டாலொழிய அது இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடாக அளவிடப்படும்.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.5.4 நிதிசார்ந்த பொறுப்புக்களை வகைப்படுத்தல்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் அதன் பின்னர் பின்வருவன தவிர கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும்:

அ) இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலைப் பெறுமானத்தில் உள்ள நிதிசார்ந்த பொறுப்புக்கள்

ஆ) குறைந்த சந்தை வட்டி வீதத்தில் ஒரு கடனனை வழங்குவதற்கான பொறுப்பு

### 2.5.5 மீளவகைப்படுத்தல்

(i) நிதிசார் சொத்துக்கள் அந்த நிதி சார்ந்த சொத்துக்களை முகாமை செய்வதற்காக கம்பனி அதன் வணிக மாதிரியை மாற்றும் போது மாத்திரம் மீள்வகைப்படுத்தப்படும்.

கம்பனி நிதிசார் சொத்துக்களை மீள்வகைப்படுத்தினால், அந்த மீள்வகைப்படுத்தல் மீள்வகைப்படுத்தல் திகதியிலிருந்து முன்னோக்கி ஏற்புடையதாகும். முன்னர் இனங்காணப்பட்டுள்ள இலாபங்களும் நட்டங்களும் (பாதிப்பு நட்டங்கள் மற்றும் இலாபங்கள் அடங்கலாக) மீளெடுத்துரைக்கப்படுவதில்லை.

(ii) நிதிசார்ந்த பொறுப்புக்கள் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

### 2.5.6 கழிக்கப்பட்ட செலவு மதிப்பீடு

நிதிசார் சொத்துக்களின் கொணரப்படும் முழுமொத்தப் பெறுமானத்திற்கான பயனுள்ள வட்டி விகிதத்தை பிரயோகிப்பதன் மூலம் வட்டி வருமானம் கணிப்பிடப்படுகின்றது.

### 2.5.7 பாதிப்பு நட்டம்

கம்பனி ஒரு நிதிசார் சொத்தின் பேரில் எதிர்பார்த்த கடன் நட்டங்களுக்கான ஒரு நட்டக் கொடுப்பனவை இனங்காணுகின்றது. நிதிசார் கருவிசாதனத்தின் பேரிலான கடன் ஆபத்து அறிக்கையிடும் திகதியில், ஆரம்ப இனங்காணல்கள், நட்டக் கொடுப்பனவுகள் எதிர்பார்த்த கடன் நட்டங்களுக்கான காலத்திற்கு சமனான ஒரு தொகையில் ஏற்பாடு செய்ய்பபடுவதால் கணிசமாக அதிகரித்துள்ளது.

ஆரம்ப இனங்காணலுக்கு பின்னர் நிதி சார்ந்த கருவிசாதனத்தின் மீதான கடன் ஆபத்து அறிக்கையிடும் திகதியில் கணிசமானளவு அதிகரிக்கவில்லை என்றால், அந்த நிதி சார்ந்த கருவிசாதனத்திற்கான இழப்பு கொடுப்பனவுகள் 12 மாத எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்குச் சமமான தொகையில் அளவிடப்படுகின்றன.

### 2.5.8 நிதிசார்ந்த சொத்துக்களை இனங்காணாது விட்டுவிடுதல்

கம்பனி:

அ) நிதிசார்ந்த சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களுக்கான உண்மையான உரிமைகள் காலாவதியாகும், அல்லது

ஆ) இனங்காணாது விட்டுவிடுவதற்காக தகைமை பெறும் மாற்றல் மற்றும் நிதிசார்ந்த சொத்து மாற்றல்கள் காணப்படும்

நிதிசார்ந்த சொத்துக்களை இனங்காணாது விட்டுவிடுகின்றது.

### 2.5.9 நிதிசார்ந்த பொறுப்புக்களை இனங்காணாது விட்டுவிடுதல்

ஒப்பந்தத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தசார் கடப்பாடு நிறைவேற்றப்படும் அல்லது இரத்துச்செய்யப்படும் அல்லது காலாவதியாகும் அதாவது இல்லாதொழியும் போதும் மாத்திரமே ஒரு நிதிசார்ந்த பொறுப்பு (அல்லது நிதி சார்ந்த பொறுப்பின் பாகம்) நிதி நிலைக் கூற்றிலிருந்து நீக்கப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.6 SLFRS 16 - சொத்துக்களின் பாவனை உரிமை

முக்கியமான சொத்து அதன் பாவனைக்காக கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற போது சொத்துக்களின் பாவனை உரிமையை கம்பனி இனங்காணுகின்றது. சொத்துக்களின் பாவனை உரிமை செலவிலும், குறைந்த ஏதாவது திரண்ட தேய்மானத்திலும் மற்றும் பாதிப்பு நட்டங்களிலும் அளவிடப்பட்டு குத்தகைப் பொறுப்புக்களின் ஏதாவது மீள் -அளவீட்டின் நிமித்தம் சீராக்கப்படுகின்றது. பாவனை சொத்துக்களின் உரிமைக்கான செலவில் இனங்காணப்படும் குத்தகைப் பொறுப்புக்களின் தொகை, ஏற்படும் ஆரம்ப நேரடி செலவுகள், ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் கிடைக்கும் ஏதாவது குறைந்த குத்தகை சார்ந்த ஊக்குவிப்புத் தொகைகள் என்பன அடங்குகின்றன. குத்தகை காலத்தின் இறுதியில் குறித்த குத்தகை சொத்தின் உரித்துடமையை பெறுவதற்காக கம்பனிக்கு நியாயமான உறுதிப்பாடு இல்லாதிருந்தால், பாவனைசார் சொத்துக்களின் இனங்காணப்பட்டுள்ள உரிமை அதன் மதிப்பிடப்பட்டுள்ள குறுகிய பயனுள்ள பாவனை காலத்தின் அல்லது குத்தகை காலத்தின் அடிப்படையில் ஒரு நேர்நிரல் முறையியலில் தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. பாவனை சொத்துக்களின் உரிமை பாதிப்புக்குட்ட ஒரு உரிமையாகும்.

### 2.6.1 குத்தகைப் பொறுப்புக்கள்

குத்தகையின் ஆரம்பத் திகதியில், கம்பனி குத்தகை காலத்தின் பேரில் மேற்கொள்ள வேண்டிய குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்தில் அளவிடப் படும் குத்தகைப் பொறுப்புக்களை இனங்காணுகின்றது. குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்தை கணிப்பிடும் போது, குத்தகையில் உட்கிடையாக உள்ள வட்டி வீதம் உடனடியாக நிர்ணயிக்கக்கூடியதாக இல்லையெனில் குத்தகை ஆரம்பத் திகதியில் கம்பனி அதிகரிக்கத்தக்க கடன்வாங்கல் வீதத்தை பயன்படுத்தும். ஆரம்ப திகதியின் பின்னர், குத்தகைப் பொறுப்புக்களின் தொகை வட்டியின் திரட்ட நிலையை பிரதிபலிப்பதற்காக அதிகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குத்தகை கொடுப்பனவுகள் நிமித்தம் குறைக்கப்படும்.

குத்தகை காலத்தில் ஒரு திருத்தம், ஒரு மாற்றம், நிலைத்திருக்கும் அந்த குத்தகை கொடுப்பனவுகளில் ஒரு மாற்றம் முக்கியமான சொத்தை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டில் ஒரு மாற்றம் இருந்தால் குத்தகைப் பொறுப்புக்களின் கொணரப்படும் தொகை அளவிடப்படும்.

## 2.7 வணிகசார் கிடைப்பனவுகள்

வணிகசார் கிடைப்பனவுகள் என்பது வழமையான வணிக நிலைமையில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் அல்லது வழங்கப்படுகின்ற சேவைகளின் நிமித்தம் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளாகும். அநேகமானளவு விற்பனைகள் வழமையாக கடன் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றன. வணிகசார் கிடைப்பனவுகள் வட்டியை சுமந்து வருவதில்லை. கடன் வழமையான கடன் நிபந்தனைகளுக்கு அப்பால் நீடிக்கப்படுகின்ற போது வணிகசார் கிடைப்பனவுகள் பயனுள்ள வட்டி வீத முறையியல்களை பயன்படுத்தி கழிக்கப்படும் செலவில் அளவிடப்படுகின்றன. நிதி சார்ந்த சொத்துக்கள் அல்லாத ஏனைய பிற கிடைப்பனவுகள் செலவில் அளவிடப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் கால முடிவில் வணிக மற்றும் ஏனைய கிடைப்பனவுகளின் கொணரப்படும் தொகைகள், அந்தத் தொகைகளை மீளறவிடுவதற்கு முடியாது என்ற ஏதாவது தெளிவான ஒரு சான்று உண்டா என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு மீளாய்வு செய்யப்படுகின்றன. அவ்வாறெனில், பாதிப்பு நட்டம் முழுமையான வருமான கூற்றில் உடனடியாக அளவிடப்படும்.

வணிகசார் கிடைப்பனவுகளில் நட்டங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதற்கு தெளிவான சான்று உண்டா என பார்க்கும் பொருட்டு கம்பனி அறிக்கையிடும் திகதியில் மதிப்பீடு செய்கின்றது. பாதிப்பு நட்டம் ஏற்கனவேயுள்ள கிடைக்க வேண்டிய தொகைகளின் தற்போதைய நிலையினதும் மற்றும் வரலாற்று சேகரிப்புகள் அனுபவத்தினதும் ஒரு மீளாய்வின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய ஏற்பாடுகள் நிஜமான எதிர்பார்த்த நட்டத்தைப் பிரதிபலிக்கும் பொருட்டு வழமையான காலப்பகுதிகளில் சீராக்கப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.8 பெருட்பதிவேடுகள்

பொருட்பதிவேடுகள் குறைந்த செலவிலும் தேறிய மாறக்கூடிய பெறுமானத்திலும் அளவிடப்படுகின்றன. பொருட்பதிவேடுகளினது செலவில் கொள்வனவு செலவுகள், மாற்றும் செலவுகள், அத்தகைய பொருட்களை அவற்றின் தற்போதைய இடத்திற்கும் மற்றும் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள ஏனைய செலவுகளும் அடங்குகின்றன.

தேறிய மாறக்கூடிய பெறுமானம் என்பது ஏற்கனவேயுள்ள பொருட்களை விற்பனை செய்யக்கூடிய நிலைமையிலிருந்து மாற்றுவதற்கான செலவில்.்.அல்லது குறைந்த மதிப்பிடப்பட்டுள்ள மாறக்கூடிய செலவில் வழமையான வணிக நிலை செயற்பாட்டில் மதிப்பிடப்படுகின்ற விற்பனை விலையாகும். கம்பனி விவசாய உற்பத்திகள் தவிர பொருட்பதிவேடுகளை விநியோகிப்பதற்கும் மற்றும் அளவிடுவதற்கும் அதன் முதல் -தர (FIFO) சூத்திரத்தை பிரயோகிக்கின்றது.

பொருட்களின் மீளறவிடும் தன்மையை மதிப்பிடும் பொருட்டு ஒரு நிபுணரினால் அறிக்கையிடும் இறுதித் திகதியில் பொருட்களின் நகர்வு மீளாய்வு செய்யப்பட்டு மீளறவிடமுடியாது என இனங்காணப்படுகின்ற பொருட்கள் குறித்த ஆண்டு காலப் பகுதியில் பதிவழிக்கப்படுகின்றன.

விவசாய பொருட்களை அவற்றின் தற்போதைய இடத்திற்கும் மற்றும் நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்படும் செலவு பின்வருமாறு கணக்கீடு செய்யப்படுகின்றது.

### 2.8.1 கோழி இறைச்சி

கோழி இறைச்சி எடை இழப்புகளுக்கான உரிய கொடுப்பனவை மேற்கொண்டதன் பின்னர் அளவிடப்பட்டுள்ள சராசரி அடிப்படையில் மேன்தலை செலவுகளின் உகந்த ஒரு விகிதத்துடன் ஆரம்ப செலவில் மதிப்பிடப்படுகின்றது.

### 2.8.2 கோழித் தீனி, மருந்துகள் மற்றும் நானாவித பொருட்கள்

கோழித் தீனி, மருந்துகள் மற்றும் நானாவித பொருட்கள் என்பன பாவனைக்கு தகாத மற்றும் மந்தமாக நகரும் பொருட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் அளவிடப்பட்டுள்ள சராசரி அடிப்படையில் உண்மையான செலவில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### 2.8.3 வணிகப் பொருட்கள்

விற்பனைக்கான சில்லறை பொருட்கள் அடங்கிய வணிகப் பொருட்கள் அளவிடப் பட்டுள்ள சராசரி அடிப்படையில் உண்மையான செலவில் மதிப்பிடப்படுகின்றன.

### 2.8.4 நானாவித இருப்புக்கள்

உற்பத்திகளை பதனிடும் பொருட்டு பயன்படுத்தப்படும் பொதியிடும் மூலப்பொருள் மற்றும் கலவைப் பொருள் என்பன நானாவித இருப்புக்களில் அடங்குகின்றன. இந்த இருப்புக்கள் பாவனைக்கு தகாத மற்றும் மந்தமாக நகரும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் அளவிடப்பட்ட சராசரி அடிப்படையில் உண்மையான செலவில் மதிப்பிடப்படுகின்றன.

**நிகழும் பணி**

நிகழும் பணி குறித்த ஆண்டு இறுதியில் உள்ள செலவுப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப் படாத பணி தொடர்பில் ஏற்படும் செலவைப் பிரதிநிதிப்படுத்துகின்றது. அது குறித்த நிதி ஆண்டு முடிவடையும் வரைக்கும் செலவுப்பட்டியலின் இறுதித் திகதியிலிருந்து ஏற்படும் செலவினத்தின் (அல்லது மதிப்பீட்டின்) தொகையில் அளவிடப்படுகின்றது. வழமையான செயற்பாட்டு ஆற்றலின் அடிப்படையில் கம்பனியின் ஒப்பந்தம் சார்ந்த செயற்பாடுகளில் ஏற்படும் நிலையான வித்தியாசமான மேன்தலை செலவுகளின் ஒரு ஒதுக்கத்துடனும் மற்றும் குறித்த கருத்திட்டங்களுடனும் சம்பந்தமான எல்லா செலவும் இந்த ஆகுசெலவில் அடங்குகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.9 சொத்துக்கள் இழப்பு

சாத்தியமான இழப்பு அறிகுறி தென்பட்டால், பாதிக்கப்பட்ட ஏதாவது ஒரு சொத்தின் அல்லது சொத்துக்களுடன் சம்பந்தப்படும் குழுமத்தின் மீளறவிடக்கூடிய தொகை மதிப்பிடப்பட்டு அதன் கொணரப்படும் தொகையுடன் ஒத்தீடுசெய்யப்படுகின்றது. மதிப்பிடப்பட்டுள்ள மீளறவிடக்கூடிய தொகை குறைவாக இருந்தால், கொணரப்படும் தொகை அதன் மதிப்பிடப்பட்டுள்ள மீளறவிடக்கூடிய தொகைக்கு குறைக்கப்படும். ஒரு பாதிப்பு நட்டம் முழுமையான வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப் படும்.

பின்னர் பாதிப்பு நட்டம் தலைகீழாக மாறினால், சொத்தின் அல்லது சம்பந்தப்படும் சொத்துக்களின் குழுமத்தின் கொணரப்படும் தொகையானது அதன் மீளறவிடக்கூடிய தொகையின் திருத்திய மதிப்பீட்டளவுக்கு குறைக்கப்படுகின்றது. ஆனால் முன்னைய ஆண்டுகளில் சொத்துக்காக அல்லது சம்பந்தப்படும் சொத்துக்களின் குழுமத்திற்காக பாதிப்பு நட்டம் இனங்காணப்படாதிருந்து நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தொகையின் மேலதிகளவுக்கு அவ்வாறு குறைக்கப்படுவதில்லை. பாதிப்பு நட்டத்தின் தலைகீழான மாறுகை முழுமையான வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப் படுகின்றது.

### 2.10 காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்

காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் காசு நிலுவைகளில் அடங்குகின்றன. கம்பனியின் காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக உருவாகுகின்ற கோரலின் பேரில் மீளச்செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் மற்றும் காசு ஒப்புரவுகளினதும் ஒரு கூறாக உள்ளடக்கப்படும்.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களின் நிமித்தம், கையில் உள்ள காசும், வங்கிகளின் கடன் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள வைப்புகளும், மூன்று மாத அல்லது அதற்கு குறைவான உண்மையான முதிர்ச்சிகளுடன் கூடிய பிற குறுங்கால அதிக திரவநிலை முதலீடுகள், தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பன காசும் காசு ஒப்புரவுகளிலும் அடங்குகின்றன. நிதி நிலைக் கூற்றில், வங்கி மேலதிப் பற்றுக்கள் நடைமுறை சார்ந்த பொறுப்புக்களில் கடன்வாங்கல்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

### 2.11 எடுத்துரைத்த மூலதனம்

சாதாரண பங்குகள் ஒப்புரவின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.12 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் இடைநேர் செலவுகள்

ஏற்பாடுகள் ஒரு கடந்த நிகழ்வின் விளைவாக கம்பனிக்கு தற்போது ஒரு கடப்பாடு (சட்ட அல்லது ஆக்கபூர்வ) இருக்கின்ற போது இனங்காணப்படுகின்றன. மேலும் பொருளாதார நன்மைகள் பதிந்திருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் அநேகமாக காணப்படும் போது கடப்பாட்டை தீர்ப்பனவு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும். ஒரு நம்பத்தகுந்த மதிப்பீடு அந்த கடப்பாட்டு தொகையில் மேற்கொள்ளப்படலாம். ஒரு ஏதாவது ஏற்பாட்டுடன் சம்பந்தப்படுகின்ற செலவு ஏதாவது மீளளிப்பின் தேறிய முழுமையான வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்படுகின்றது. ஏனைய பொறுப்புக்கள் தீர்ப்பனவு செய்யப்படும் போது மாறக்கூடிய காசுப் பெறுமானத்தில் பதியப்படும். ஏற்பாடுகள் தனித்தனியான விடயங்களில் குறித்த நியதிகளினதும் மற்றும் வரலாற்று அனுபவத்தினதும் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றன. அநேகமான ஒரு பலன் மதிப்பீட்டு அடிப்படையில் கம்பனி ஒரு மதிப்பீட்டிற்கு வருகின்றது. தெரிந்த எல்லா ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இடைநேர் பொறுப்புக்களானது பொருளாதார நன்மையின் பரிவர்த்தனை அநேகமாக அல்லது உடனடியாக அளவிட முடியாது என்றிருக்கும் போது நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது தற்போதைய கடப்பாடுகளினால் மட்டும் உறுதிப்படுத்தப் படும் சாத்தியமான கடப்பாடுகளாகும். மேலும், இடைநேர் பொறுப்புக்கள் நிதி நிலை கூற்றில் இனங்காணப்படுவதில்லை. ஆனால் இவை இவற்றின் நிகழ்வு தனிமையில் இல்லாத வரையில் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

தற்பொழுது, வழமையான வணிக நடத்தையிலிருந்து எழுகின்ற கோரல்களும் மற்றும் நிறைவு பெறாத வழக்குகளும் கம்பனிக்கு கிடையாது. கம்பனியின் நிதி நிலையில், செயற்பாட்டு இலாபத்தில் அல்லது காசுப் பாய்ச்சல்களில் ஒரு பொருண்மையான தாக்கத்தைக் கொண்டிருக்குமளவுக்கு தனித்தனியாகவும் அதேபோல் மொத்தத்திலும் நிறைவு பெறாத வழக்குகளையும் கோரல்களையும் கம்பனி எதிர்பார்க்கவுமில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

**2.12.1** கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விபரம்:

யுவ டயடிழச வுசனைரயெட

| இல. | வழக்கு இலக்கம் | தரப்புகள் | நிலைமை |
|---|---|---|---|
| 01. | அனுராதபுர தொழில் நியாய சபை வழக்கு இல. 27/mD/2584/2020 | ஏ.ஏ.சி.எஸ்.விஜேவர்தன எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | சம்பள நிலுவைத் தொகை மற்றும் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றுடன் மீள சேவையில் அமர்த்த வேண்டும் என கோரி திரு ஏ.ஏ.சி.எஸ். விஜேவர்தன CESL இற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சட்ட நடவடிக்கைகள் நிகழ்ந்து வருகின்றன. சாட்சிகள் வழிநடத்தப்படுகின்றன (பதிலளிப்பவரின் வழக்கு) |
| 02. | குருநாகல் தொழில் நியாய சபை வழக்கு இல. 23/F/26/2020 | கே.எம்.சி.பி. கருணாரத்ன எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | திருமதி கே.எம்.சி.பி. கருணாரத்ன தன்னை நிரந்தர ஊழியராக அறிவிக்குமாறும், தன்மை மீள சேவையில் அமர்த்துமாறும் மற்றும் சம்பள நிலுவைத் தொகையை வழங்குமாறும் கோரி CESL நிறுவனத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளார். வழக்கு விடயம் இறுதி கட்டத்தில் உள்ளது. மேலும் வழக்கு உத்தரவுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| 03. | மாத்தறை தொழில் நியாய சபை வழக்கு இல. LT/M/26/32/2023 | ஆர்.எல்.பி. குமாரசிறி எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | சம்பள நிலுவைகள், இழப்பீடு மற்றும் பணிக்கொடை ஆகியவற்றுடன் தன்னை மீள சேவையில் அமர்த்துமாறு கோரி திரு ஆர்.எல்.பி. குமாரசிறி CESL நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தாக்கல்செய்துள்ளார். வழக்கு உத்தரவுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| 04. | மாத்தறை தொழில் நியாய சபை வழக்கு இல. LT/M/26/33/2024 | பீ.ஏ.சி. கிருஷாந்த எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | சம்பள நிலுவைகள், இழப்பீடு மற்றும் பணிக்கொடை ஆகியவற்றுடன் தன்னை மீள சேவையில் அமர்த்துமாறு கோரி திரு பீ.ஏ.சி. கிருஷாந்த CESL நிறுவனத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளார். வழக்கு உத்தரவுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| 05. | கண்டி தொழில் நியாய சபை வழக்கு இல. டுவ/03/85/2023 | திரு டபிள்யூ.ஜே.பி.ஏ. ஜயவர்தன எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | சம்பள நிலுவைகள், இழப்பீடு, பணிக்கொடை, சேவை சான்றிதழ் ஆகியவற்றை வழங்குமாறு கோரி திரு டப்ளியூ.ஜி.பி.ஏ. ஜயவர்த்தன CESL நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தாக்கல்செய்துள்ளார். மனுதாரரின் வழக்கு மூடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் வழக்குக்கான சாட்சிகள் வழிநடத்தப்படவுள்ளன. |

மாவட்ட நீதிமன்றத்தில்

| இல. | வழக்கு இலக்கம் | தரப்புகள் | தொகை | நிலைமை |
|---|---|---|---|---|
| 01. | DTS258/23 | எல்.எஸ். ஜசிந்த பெர்னாந்து எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | ரூ. 45,892,637.00 | வழக்கு விடயம் இறுதி கட்டத்தில் உள்ளது. தீர்வு விதிமுறைகள் உள்ளிடப்பட்டுள்ளன. |
| 02. | 132/M/2024 | எட்வர்ட் என்ட் கிறிஸ்டீஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் எதிர் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | ரூ. 8,566,428.12 | பதில் அணைக்க வேண்டியுள்ளது |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**நீதிவான் நீதிமன்றத்தில்**

| இல. | வழக்கு இலக்கம் | தரப்புகள் | நிலைமை |
|---|---|---|---|
| 01. | மஹியங்கனை நீதவான் நீதிமன்ற வழக்கு இல. B/31183 | மஹியங்கனை வனப் பாதுகாப்பு அலுவலகம் எதிர் ஜே.ஏ. பிரேமர்த்ன, டி.பி.ஆர். திலகரத்ன | சட்ட நடைமுறைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அகழ்வாராய்ச்சியாளரை விடுவிக்க ஏற்கனவே எமது எழுத்துப்பூர்வ சமர்ப்பணம் கோவைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 02. | அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் 86596/Labour | சாரதி வழக்கு - பிரதிவாதி சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் | சட்ட நடைமுறைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. விவாதத்திற்காக வழக்கு ஒத்தவைக்கப்பட்டுள்ளது. |

**உயர் நீதிமன்றத்தில்**

| இல. | வழக்கு இலக்கம் | தரப்புகள் | நிலைமை |
|---|---|---|---|
| 01. | HCL 04/2024 | சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனம் எதிர் ஆர்.எம்.ஆர். சதாமாலி குமாரி | சட்ட நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எழுத்துப்பூர்வ சமர்ப்பணம் கோவைப்படுத்தப்படவுள்ளது. |

## 2.13 ஊழியர் நன்மைகள்

**திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள்**

திட்டவட்டமான பங்களிப்புத் திட்டம் என்பது வேலைவாய்ப்புக்குப் பிந்திய நன்மைத் திட்டமாகும். இதன் கீழ் பங்களிப்புகள் ஒரு தனி நிதியத்திற்கு செலுத்தப்படுகின்றன. மேலும் அந்த நிறுவனம் மேலதிக தொகைகளை செலுத்த எந்த சட்டப்பூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடமையும் கொண்டிருக்காது. திட்டவட்டமான பங்களிப்பு திட்டத்தின் நிமித்தம் பங்களிப்புகளுக்கான கடமைகள், ஊழியர்களால் சேவைகள் வழங்கப்படும் காலங்களில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஊழியர் நன்மை சார்ந்த செலவாக இனங்காணப்படுகின்றன. பண மீளப்பெறுதல் அல்லது எதிர்கால கொடுப்பனவுகளில் குறைப்பு கிடைக்கும் அளவிற்கு முன்பணம் செலுத்தப்பட்டுள்ள பங்களிப்புகள் ஒரு சொத்தாக இனங்காணப்படுகின்றன.

**திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்புக்கு தகுதியுள்ள அனைத்து ஊழியர்களும் அந்தந்த சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் இணங்க உரிய பங்களிப்பு நிதியங்களினால் காப்பீடு செய்யப்படுகிறார்கள். நிறுவனம் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% வீதத்தை ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு செலுத்துகின்றது.

**திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு**

திட்டவட்டமான நன்மைகள் திட்டம் என்பது திட்டவட்டமான பங்களிப்புத் திட்டம் அல்லாத ஒரு திட்டமாகும். திட்டவட்டமான நன்மைத் திட்டம் என்பது ஒரு ஊழியர் ஓய்வு பெறும்போது பெறும் நன்மை அளவை வரையறுக்கின்றது. இது பொதுவாக வயது, ஊழியரின் சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு அதிகமான காரணிகளைப் பொறுத்ததாகும்.

திட்டவட்டமான நன்மைகள் திட்டம் தொடர்பான நிதி நிலைக் கூற்றில் இனங்காணப் பட்டுள்ள பொறுப்பு, அறிக்கையிடும் திகதியில் திட்டவட்டமான நன்மைகள் சார்ந்த கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு LKAS 19 - 'பணியாளர் நன்மைகள்' பரிந்துரைத்தபடி, திட்டமிடப்பட்டுள்ள அலகு கடன் (PUC) முறையியலைப் பயன்படுத்தி சுயாதீன காப்பீட்டு நிறுவனங்களால் ஆண்டுதோறும் கணக்கிடப்படுகின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு (தொடர்ச்சி)**

திட்டவட்டமான நன்மைகள் திட்டங்களுக்கான ஆக்சுவேரியல் இலாபங்கள் மற்றும் இழப்புகள், அவை பிற முழுமையான வருமானத்தில் நிகழும் காலத்தில் முழுமையாக இனங்காணப்படும். பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின்படி, ஒரு ஊழியருக்கு பணிக்கொடையை செலுத்துவதற்கான பொறுப்பானது ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை முடித்த பின்னரே எழுகின்றது.

**அபுதாபி நிதியேற்பாடு - முழுநேர ஊழியர்களுக்கான சேவை நன்மை முடிறுத்தல்**

2021 (33) ஆம் இலக்க கூட்டாட்சி உத்தரவு சட்டத்தின்படி, நாட்டில் ஓய்வூதியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பும் பத்திரங்கள் ஆகியவற்றை ஒழுங்குறுத்தல் சட்டத்தின்படி, தேசிய ஊழியருக்கு தனது பணியின் முடிவில் பணி முடிவு நன்மைகளை பெற உரிமை உண்டு.

ஒரு வருடம் அல்லது அதற்கு அதிக காலம் தொடர்ச்சியான சேவையை முடித்த முழுநேர வெளிநாட்டு ஊழியருக்கு, தனது சேவையின் முடிவில் சேவை முடிவு நன்மைகளை பெற உரிமை உண்டு. இது பின்வரும் அடிப்படை ஊதியத்தின்படி கணக்கிடப்படுகின்றது:

அ. முதல் ஐந்து வருட கால சேவையில் ஒவ்வொரு வருடத்திற்கும் இருபத்தொரு (21) நாள் ஊதியம்

ஆ. அந்தக் காலப்பகுதியை விஞ்சுகின்ற ஒவ்வொரு வருடத்திற்கும் முப்பது (30) நாள் ஊதியம்

வெளிநாட்டுத் தொழிலாளி, ஒரு வருட தொடர்ச்சியான சேவையை நிறைவு செய்திருந்தால், வேலையில் செலவழித்த காலத்திற்கு ஏற்ப, வருடத்தின் சில பகுதிகளுக்கு சலுகையைப் பெற உரிமை உண்டு. வேலைக்குச் செல்லாமல் இருந்த ஊதியம் பெறாத நாட்கள், சேவைக் காலத்தின் கணக்கீட்டில் உள்ளடக்கப்படாது.

### 2.14 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி

நடைமுறை மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி வருமான வரி செலவில் அடங்குகின்றது. அது இலாப அல்லது நட்டக் கணக்கில் இனங்காணப்படுகின்றது.

### 2.15 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி

### 2.15.1 நடைமுறை வரி

நடைமுறை வரி என்பது, அந்த ஆண்டிற்கான வரி விதிக்கக்கூடிய வருமானத்திற்கு அல்லது நட்டத்திற்கு செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க எதிர்பார்க்கப்படும் வரியையும், முன்னைய ஆண்டுகளைப் பொறுத்தவரை செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரியில் ஏதேனும் சீராக்கலையும் உள்ளடக்கியதாகும். நடைமுறை வரி செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க தொகை என்பது, வருமான வரிகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கும், செலுத்தப்பட அல்லது பெற எதிர்பார்க்கப்படும் வரித் தொகையின் சிறந்த மதிப்பீடாகும். அறிக்கையிடும் திகதியில் விதிக்கப்பட்ட அல்லது கணிசமாக விதிக்கப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகின்றது. நடைமுறை வரியில் ஈவுத்தொகையிலிருந்து எழுகின்ற எந்தவொரு வரியும் அடங்கும்.

வருமான வரிக்கான ஒதுக்கீடு, நிதி நிலைக் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும் 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் அதற்கான ஏதேனும் திருத்தங்களுக்கும் இணங்க கணக்கிடப்படுகின்றது. ஏற்புடைய வருமான வரி விகிதம் 2024 ஜனவரி 1 முதல் 2024 தசம்பர் 31 வரையிலான காலத்திற்கு 30% ஆகும். நடைமுறை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சில அளவுகோல்களை பூர்த்தி செய்தால் மட்டுமே ஈடுசெய்யப்படும்.

நேரடி சமத்துவமின்மையாக இனங்காணப்பட்டுள்ள பொருட்களுடன் தொடர்புடைய நடைமுறை வரியானது, இலாப அல்லது நட்டக் கூற்றில் அல்லாமல், ஒப்புரவில் இனங்காணப்படுகின்றது. ஏற்புடைய வரி விதிமுறைகள் விளக்கத்திற்கு உட்பட்ட சூழ்நிலைகள் தொடர்பாக வரி வருமானத்தில் எடுக்கப்பட்டுள்ள நிலைப்பாடுகளை நிர்வாகம் அவ்வப்போது மதிப்பீடு செய்து, பொருத்தமானவிடத்து அந்த விதிகளை உறுதிப்படுத்துகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.15.2 பிற்போடப்பட்டுள்ள வரிவிதிப்பு

நிதி அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் சுமந்து செல்லும் தொகைகளுக்கும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிகமான வேறுபாடுகளின் நிமித்தம் பிற்போடப்பட்டுள்ள வரி இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள், பயன்படுத்தப் படாத வரி வரவுகள் மற்றும் விலக்கு அளிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் ஆகியவற்றிற்காக இனங்காணப்படுகின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. அதற்கு எதிராக அவற்றைப் பயன்படுத்தலாம். பிற்போடப்பட்டுள்ள வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் தொடர்புடைய வரிப் பலன் இனி அடையப்பட வாய்ப்பில்லாத அளவிற்கு குறைக்கப்படுகின்றன. எதிர்கால வரி விதிக்கக்கூடிய இலாபங்களின் நிகழ்தகவு மேம்படும் போது அத்தகைய குறைப்புகள் தலைகீழாக மாறும்.

இனங்காணப்படாத பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு இனங்காணப்பட்டு பயன்படுத்தப்படலாம்.

அறிக்கையிடும் திகதியில் விதிக்கப்பட்டுள்ள அல்லது கணிசமாக விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்களைப் பயன்படுத்தி, தற்காலிக வேறுபாடுகள் தலைகீழாக மாறும்போது பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களில் பிற்போடப்படும் வரி அளவிடப்படுகின்றது.

பிற்போடப்பட்டுள்ள வரியின் அளவீடு, அறிக்கையிடும் திகதியில் நிறுவனம் அதன் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கொணரப்படும் தொகையை மீளறவிடும் அல்லது தீர்ப்பனவு செய்யும் பொருட்டு விதத்திலிருந்து வரும் வரி விளைவுகளை பிரதிபலிக்கிறது.

இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அப்பால் இனங்காணப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான பிற்போடப்பட்டுள்ள வரி, இலாபத்திற்கு அல்லது இழப்புக்கு வெளியால் இனங்காணப்படுகின்றது. பிற்போடப்பட்டுள்ள வரி சார்ந்த பொருட்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குகளின் அடிப்படையிலான பரிவர்த்தனையுடன் தொடர்புடையதாக இனங்காணப்படுகின்றன. நடைமுறை வரி சொத்துக்களை நடைமுறை வரி பொறுப்புகளுக்கு எதிராக அமைக்க சட்டப்பூர்வமாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், பிற்போடப்பட்டுள்ள வரி சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி பொறுப்புகள் ஆகியன ஈடுசெய்யப்படுகின்றன. மேலும் பிற்போடப்பட்டுள்ள வரிகள் அதே வரி விதிக்கக்கூடிய நிறுவனம் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடன் தொடர்புடையவையாகும்.

**பிற்போடப்பட்டுள்ள வரிகள் தொடர்பான குறிப்பிடத்தக்க தீர்ப்புகள்**

பிற்போடப்பட்டுள்ள வரி சொத்துக்கள் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளுக்கு இனங்காணப்படுகின்றன. ஏனெனில் வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைக்க வாய்ப்புள்ளதாலாகும். அதற்கு எதிராக இழப்புகளை பயன்படுத்தலாம். எதிர்கால வரி விதிக்கக்கூடிய இலாபங்களின் அளவு மற்றும் எதிர்கால வரி திட்டமிடல் உத்திகள் அடங்கலாக சாத்தியமான நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணக்கூடிய பிற்போடப்பட்டுள்ள வரி சொத்துக்களின் அளவை தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க நிர்வாக தீர்ப்பு தேவைப்படுகின்றது.

## 2.16 குத்தகைகள்

**நிதிசார் குத்தகைகள்**

உரிமையுடன் தொடர்புடைய அனைத்து அபாயங்களையும் மற்றும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றினால், ஒரு குத்தகை, நிதிசார் குத்தகையாக வகைப்படுத்தப்படும்.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.16 குத்தகைகள் (தொடர்ச்சி)

**ஆரம்ப இனங்காணலும் மற்றும் அடுத்தடுத்த அளவீடும்**

ஆரம்பத்தில், நிதிசார் குத்தகை மற்றும் நிதிசார் குத்தகை பொறுப்புகளின் கீழ் வைத்திருக்கும் சொத்துக்கள், குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்தின் நியாய விலைப் பெறுமானம் மற்றும் குத்தகையின் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்படும் ஆகக்குறைந்த குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்திற்கு குறைவான நிதி நிலைக் கூற்றுக்களில் சொத்துக்களாகவும் பொறுப்புகளாகவும் இனங்காணப்படுகின்றன.

பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி, அடுத்தடுத்த குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் கட்டணத்திற்கும் நிலுவையில் உள்ள பொறுப்பைக் குறைப்பதற்கும் இடையில் பிரிக்கப்படுகின்றன.

**செயற்பாட்டுக் குத்தகைகள்**

செயற்பாட்டுக் குத்தகைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் குத்தகை காலப்பகுதியில் நேர் நிரல் முறைறைப் பிரயோகித்து இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 2.17 SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானம்

வருமானம் என்பது ஒரு நிறுவனத்தின் சாதாரண நடவடிக்கைகளின் போது எழுகின்ற வருமானமாகும். SLFRS 15 இன்படி, ஒரு வாடிக்கையாளர் பொருட்களின் அல்லது சேவைகளின் கட்டுப்பாட்டைப் பெறும்போதும், நிறுவனம் எதிர்பார்க்கும் உரிமையின் அளவிலும் (நிறுவனம் ஒரு செயல்திறன் கடமையை பூர்த்தி செய்யும் போது) வருமானம் இனங்காணப்படுகின்றது. குறித்தவொரு காலப் பகுதியில் அல்லது தீர்ப்புகள் தேவைப்படும் நேரத்தில் வாடிக்கையாளர் அந்த சொத்தின் கட்டுப்பாட்டைப் பெறும்போது பொருட்கள் அல்லது சேவை மாற்றப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் உடனான ஒப்பந்தங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை இனங்காண கம்பனி ஐந்து-படி மாதிரியை SLFRS 15 அறிமுகப்படுத்துகின்றது.

பின்வரும் அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே நிறுவனம் ஒரு வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்தைக் கணக்கிடுகிறது:

அ) ஒப்பந்தத்தில் உள்ள தரப்பினர் ஒப்பந்தத்தை (எழுத்துப்பூர்வமாக, வாய்மொழியாக அல்லது ஏனைய வழக்கமான வணிக நடைமுறைகளுக்கு ஏற்ப) அங்கீகரித்துள்ளனர் மற்றும் அவற்றின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளனர்

ஆ) மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான ஒவ்வொரு தரப்பினரின் உரிமைகளையும் நிறுவனம் அடையாளம் காண முடியும்

இ) மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கட்டண விதிமுறைகளை நிறுவனம் அடையாளம் காண முடியும்

ஈ) இந்த ஒப்பந்தம் வணிக ரீதியான பொருளைக் கொண்டுள்ளது (அதாவது, ஒப்பந்தத்தின் விளைவாக நிறுவனத்தின் எதிர்கால பணப்புழக்கங்களின் ஆபத்து, நேரம் அல்லது அளவு மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது) மற்றும்

ஈ) வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஈடாக நிறுவனம் தனக்கு உரிமையுள்ள கிரயத்தை அறவிடும் வாய்ப்பு அதிகம்

**அ) நிர்மாண ஒப்பந்தங்கள்**

**நிர்மாண வருமானம்**

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து SLFRS 15 நிமம் வருமானத்தின் பிரகாரம், ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் காலத்திற்கு (உள்ளீட்டு முறையியலின் அடிப்படையில்) விகிதாசாரமாக இலாப அல்லது நட்டக் கூற்றுக்களில் நிர்மாண வருமானம் இனங்காணப்படுகின்றது.

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 2.17 SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானம் (தொடர்ச்சி)

உள்ளீட்டு முறையின் கீழ், வருமானம் நிறுவனத்தின் செயல்திறன் சார்ந்த கடமையின் திருப்திக்கான உள்ளீட்டினது அடிப்படையில், அத்தகைய செயல்திறன் கடமையின் திருப்திக்கான மொத்த எதிர்பார்க்கப்படும் உள்ளீடுகளுடன் (மதிப்பிடப்பட்ட செலவு) தொடர்புடையதாக இனங்காணப்படுகின்றது.

STC ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ள கருத்திட்டங்களுக்கு, ஒப்பந்த வருமானம் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப வருமானத்தின் 90% வீத அளவிற்கும், ஒப்பந்தப் பணிகளில் உள்ள ஏதேனும் வித்தியாசங்கள், உரிமைகோரல்கள் மற்றும் ஊக்கத்தொகை கொடுப்பனவுகள் ஆகியவற்றிற்கும் மட்டுமே நிறுவனம் உரிமை கோரும் அளவிற்கு இனங்காணப்படும்.

ஒப்பந்த வருமானம், STC-இடமிருந்து பெறப்பட்டவுடன் (உண்மையான உரிமையுள்ள தொகை) STC அங்கீகரித்துள்ள ஒப்பந்த வருமானம் ஒப்புதலாக திருத்தப்படும். மற்ற ஒப்பந்தங்களுக்கு, ஒப்பந்த விலையில் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்பத் தொகை மற்றும் ஒப்பந்தப் பணியில் ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால் அவை அடங்கும்.

**ஆ) பொருட்கள் விற்பனை**

பொருட்களின் உரிமையின் குறிப்பிடத்தக்க அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் ஆகியன வாங்குபவருக்கு மாற்றப்படும்போது, நிறுவனம் வழக்கமாக உரிமையுடன் தொடர்புடைய அளவிற்கு தொடர்ச்சியான நிர்வாக ஈடுபாட்டையோ அல்லது விற்கப்படும் பொருட்களின் மீது பயனுள்ள கட்டுப்பாட்டையோ வைத்திருக்காதபோது பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானம் இனங்காணப்படுகின்றது.

**இ) உயிரியல் வளங்களின் நியாய மதிப்பில் ஏற்படும் மாற்றங்களால் வரும் இலாபம்**

மதிப்பிடப்பட்ட விற்பனை செலவுகளைக் குறைத்து, உயிரியல் வளங்கள் மற்றும் விவசாய விளைபொருட்கள் ஆகியவற்றை நியாய மதிப்பில் ஆரம்ப இனங்காணலில் ஏற்படும் இலாபம் அல்லது இழப்புகள் இலாப நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. அடுத்தடுத்த அளவீடு காரணமாக நியாய மதிப்பில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் இலாபம் அல்லது இழப்புகள் அவை எழும் காலகட்டத்தில் இலாப நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

## 2.18 தேறிய நிதிசார் வருமானம்/(செலவு)

### 2.18.1 நிதிசார் வருமானம்

நிதி வருமானம் என்பது முதலீடு செய்யப்பட்ட நிதியின் மீதான வட்டி வருமானத்தை உள்ளடக்கியது. வட்டி வருமானம் பயனுள்ள வட்டி விகிதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றது. இது நிதி கருவிசாதனங்களில் எதிர்பார்க்கப்படும் பாவனை காலம் அல்லது பொருத்தமானவிடத்து, நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் நிகர சுமந்து செல்லும் தொகைக்கு ஒரு குறுகிய காலம் முழுவதும் மதிப்பிடப்பட்ட எதிர்கால பற்றுக்களை சரியாக தள்ளுபடி செய்யும் விகிதமாகும். வட்டி வருமானம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தேறிய நிதி வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 2.18.2 நிதிசார் செலவு

நிதிசார் செலவு என்பது கடன்களுக்கான வட்டிச் செலவுகளை உள்ளடக்கியது. வட்டிச் செலவு, பயனுள்ள வட்டி விகிதத்தைப் (EIR) பயன்படுத்தி சேரும்போது பதிவு செய்யப்படுகின்றது. இது நிதிக் கருவிசாதனத்தின் எதிர்பார்க்கப்படும் பாவனை காலம் அல்லது பொருத்தமான இடங்களில், குறுகிய காலத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால ரொக்கக் கொடுப்பனவுகளை நிதிப் பொறுப்பின் தேறிய சுமந்து செல்லும் தொகைக்கு சரியாக தள்ளுபடி செய்யும் விகிதமாகும்.

கடன் வாங்கும் செலவுகள் அவை ஏற்படும் காலகட்டத்தில் செலவாக இனங்காணப் படுகின்றன. நிர்மாணத்திற்கு அல்லது மேம்பாட்டிற்கு நேரடியாகக் காரணமாக அமையும் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றை தவிர, அவை நிர்மாணத்திற்கான அல்லது மேம்பாட்டிற்கான சொத்துக்களின் விலையின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 2.19 செலவினம் இனங்காணல்

ஏற்படும் செலவுகளுக்கும் குறிப்பிட்ட வருமானப் பொருட்களின் வருமானத்திற்கும் இடையிலான நேரடி தொடர்பின் அடிப்படையில் செலவுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. வணிகத்தை நடத்துவதில் ஏற்படும் அனைத்து செலவினங்களும் அந்த ஆண்டிற்கான இலாபத்தை கணக்கிடுவதில் வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. பழுதுபார்ப்புகள் மற்றும் புதுப்பித்தல்கள் செலவு செய்யப்பட்ட ஆண்டில் இலாபத்திற்கு அல்லது நஷ்டத்திற்கு அறவிடப்படுகின்றன. செலவு திரட்டல் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

**நிர்மாண ஒப்பந்தங்கள்**

வருடத்தில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்ட மொத்த செலவு, நிர்மாணம் சார்ந்த செலவுகளில் சேர்க்கப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

**ஏனைய செலவுகள்**

வணிகத்தை நடத்துவதிலும், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றை திறமையான நிலையில் பராமரிப்பதில் ஏற்படும் அனைத்து செலவுகளும் முழுமையான வருமான கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன.

**பங்குலாபப் பகிர்ந்தளிப்பு**

நிறுவனத்தின் பங்குதாரர்களால் ஈவுத்தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில், நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை விநியோகம் நிறுவனத்தின் நிதிநிலை கூற்றுக்களில் ஒரு பொறுப்பாக இனங்காணப்படுகின்றது.

### 2.20 அறிக்கையிடும் திகதிற்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலத்திற்குப் பிந்தைய நிகழ்வுகள் என்பவை, அறிக்கையிடும் காலத்தின் முடிவிற்கும் நிதிநிலை கூற்றுக்களை வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதிற்கும் இடையில் நிகழும் சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகளாகும்.

அறிக்கையிடும் காலத்திற்கு பிறகு நிகழும் நிகழ்வுகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தேவையான போது நிதிநிலை கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 2.21 பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள்

நிறுவனம் அதன் சாதாரண பங்குகளுக்கான அடிப்படை வருமானத்தை (EPS) முன்வைக்கின்றது. அடிப்படை EPS கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்குக் கூறப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தை, அந்தக் காலகட்டத்தில் நிலுவையில் உள்ள சாதாரண பங்குகளின் சராசரி எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் கணக்கிடப் படுகின்றது.

### 3. சம்பந்தப்பட்டுள்ள தரப்பு வெளிப்படுத்தல்

### 3.1 சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் நியதிகளும் மற்றும் நிபந்தனைகளும்

சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து விற்பனை மற்றும் கொள்முதல்கள் குறுகிய கால பரிவர்த்தனைகளில் நிலவும் விதிமுறைகளுக்கு சமமான விதிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டு இறுதியில் நிலுவையில் உள்ள நிலுவைகள் பாதுகாப்பற்றவை மற்றும் வட்டி இல்லாதவை மற்றும் ரொக்கமாக தீர்வு காணப்படுகின்றன. சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளின் பெறத்தக்கவைகளுக்கு அல்லது செலுத்த வேண்டியவைகளுக்கு எந்த உத்தரவாதங்களும் வழங்கப்படவில்லை அல்லது பெறப்படவில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 3.2 முக்கிய முகாமைத்துவ ஆளணி உறுப்பினர்களும் (KMP) மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் (CFM) சம்பந்தப்படும் கொடுக்கல்வாங்கல்கள், ஒழுங்குகள் மற்றும் ஒப்பந்தங்கள்

LKAS 24 - 'சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளின் வெளிப்படுத்தல்கள்' பிரகாரம், முக்கிய முகாமைத்துவ ஆளணி உறுப்பினர்கள் என்பது நிறுவனத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுதல், பணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அதிகாரத்தையும் மற்றும் பொறுப்பையும் கொண்டவர்களாவர். அதன்படி, பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் (நிறைவேற்று மற்றும் நிறைவேற்று சாரா பணிப்பாளர்கள் அடங்கலாக) நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணி உறுப்பினர்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளனர்.

KMP - இன் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் (CFM) என்பவர்கள், அந்த கம்பனி உடனான கையாளுதலில் KMP-களால் செல்வாக்கு செலுத்த அல்லது பாதிக்கப்பட எதிர்பார்க்கப்படும் குடும்ப உறுப்பினர்கள் ஆவர். அவர்களில் பின்வரும் நபர்கள் அடங்குவர்:

(அ) தனிநபர் வீட்டுத் துணைவர்கள் மற்றும் பிள்ளைகள்
(ஆ) தனிநபர் வீட்டுத் துணைவர்களின் பிள்ளைகள் மற்றும்
(இ) தனிநபரை அல்லது தனிநபரின் வீட்டுத் துணைவரைச் சார்ந்திருப்பவர்கள்

CFM என்பது அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய தரப்புகள். இந்த ஆண்டில் CFM உடன் எந்த கொடுக்கல்வாங்கல்களும் இல்லை.

## 3.3 பணிப்பாளர்களின் கடன்

நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு எந்தக் கடன்களும் வழங்கப்படவில்லை.

## 4 நிதி இடர் முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

நிதி இடர் முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தில் நிதிக் கருவியைப் பயன்படுத்தி பொருளாதார மதிப்பை நிலைநிறுத்துவதும் மற்றும் நிறுவனத்தின் ஆபத்து எதிர்ப்பை நிர்வகிப்பதும் ஆகும். நிறுவனத்தின் முக்கிய நிதி சொத்துக்களில் வர்த்தகம் மற்றும் பிற பெறத்தக்கவைகள் மற்றும் அதன் செயல்பாடுகளிலிருந்து நேரடியாகப் பெறப்படும் ரொக்கம் மற்றும் குறுகிய கால வைப்புத்தொகை ஆகியவை அடங்கும்.

நிறுவனம் பயன்படுத்தும் முக்கிய நிதிப் பொறுப்புகள் வர்த்தகம் மற்றும் பிற செலுத்த வேண்டியவை ஆகும். இந்த நிதி முதலீடுகளின் முக்கிய நோக்கம் நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு நிதியளிப்பதும் அதன் செயல்பாடுகளை ஆதரிப்பதற்கான உத்தரவாதங்களை வழங்குவதுமாகும்.

நிறுவனத்தின் ஆபத்தை பகுப்பாய்வு செய்வதற்கும் பொருத்தமான ஆபத்து வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை அமைப்பதற்கும் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ கொள்கைகளை நிறுவியுள்ளது. இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் முறைமைகள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் அனைத்து ஊழியர்களும் பயிற்சி, முகாமைத்துவ தரம் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் மூலம் தமது வகிபங்குகள் மற்றும் கடமைகளைப் புரிந்துகொள்ளும் ஒரு ஒழுக்கமான ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகிய விடய அம்சங்களுடன் நிர்வாகம் எவ்வாறு இணங்குகின்றது என்பதை நிறுவன கணக்காய்வு குழு மேற்பார்வையிடுகின்றது மற்றும் நிறுவனத்தின் இடர் ஆபத்து தொடர்பாக இடர் முகாமைத்துவ கட்டமைப்பையும் மதிப்பாய்வு செய்கின்றது. நிறுவன கணக்காய்வு குழு அதன் மேற்பார்வை வகிபாத்திரத்தில் உள் கணக்காய்வால் உதவப்படுகின்றது. உள்ளக கணக்காய்வு பிரிவு இடர் முகாமைத்துவ கட்டுப்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றின் வழக்கமான மற்றும் தற்காலிக மதிப்பாய்வுகளை மேற்கொள்கின்றது. இதன் விளைவாக கணக்காய்வுக் குழுவிற்கு தெரிவிக்கப்படுகின்றது. குழு அதன் செயல்பாடுகள் குறித்து பணிப்பாளர்கள் சபைக்கு தொடர்ந்து அறிக்கையிடுகின்றது.

சந்தை ஆபத்து, கடன் ஆபத்து, பணப்புழக்க ஆபத்து அடங்கலாக முக்கிய நிதி அபாயங்களுக்கு நிறுவனம் ஆளாகின்றது. கீழே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வகை ஆபத்தையும் நிர்வகிப்பதற்கான கொள்கைகளை பணிப்பாளர்கள் சபை ஏற்று, சரிபார்த்து, அங்கீகரிக்கின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 4.1 சந்தை ஆபத்து

சந்தை ஆபத்து என்பது சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிசாதனங்களில் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாயமான பெறுமான ஏற்ற இறக்கமாக இருக்கும் அபாயமாகும். சந்தை இடர் முகாமைத்துவத்தின் நோக்கம், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுருக்களுக்களினுள் சந்தை இடர் வெளிப்பாடுகளை நிர்வகிப்பதும் கட்டுப்படுத்துவதுமாகும். அதே நேரத்தில் வருவாயை மேம்படுத்துவதும் ஆகும். அத்தகைய அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இடர் முகாமைத்துவ குழுவால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் வகை ஆபத்துக்கள் சந்தை ஆபத்தில் அடங்குகின்றன:

அ) வட்டி வீத ஆபத்து
ஆ) நாணய ஆபத்து
இ) நுகர்வுப்பொருள் விலை ஆபத்து
ஈ) ஒப்புரவு விலை ஆபத்து

சந்தை அபாயத்தால் பாதிக்கப்படும் நிதிக் கருவிகளில் முக்கியமாக வைப்புத்தொகை அடங்கும்.

நிறுவனம் எதிர்கொள்ளும் சந்தை அபாயத்தில் நாணய ஆபத்து, வட்டி வீத ஆபத்து மற்றும் பிற விலை அபாயங்கள் என்பன அடங்கும்.

### 4.1.1 வட்டி வீத ஆபத்து

வட்டி வீத ஆபத்து என்பது சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஒரு நிதிக் கருவியின் நியாயமான பெறுமானம் அல்லது எதிர்கால பணப்புழக்கங்கள் ஏற்ற இறக்கமாக இருக்கும் அபாயமாகும். சந்தை வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களின் அபாயத்திற்கு வெளிப்பாடு முதன்மையாக நிறுவனத்தின் மிதக்கும் விகிதத்துடன் கூடிய வைப்புத்தொகைகளுடன் தொடர்புடையது. நிறுவனம் வட்டியை ஈட்டக்கூடிய வங்கி வைப்புத்தொகைகளைக் கொண்டுள்ளது. இது வட்டி விகிதங்களில் ஏற்படும் பாதகமான இயக்கங்களின் விளைவாக அதற்கு அபாயங்களை ஏற்படுத்தக்கூடும்.

### 4.2 கடன் ஆபத்து

கடன் ஆபத்து என்பது ஒரு நிதி ஆவணம் அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தத்தின் கீழ் எதிர்த்தரப்பு தனது கடமைகளை நிறைவேற்றாமல், நிதி இழப்புக்கு வழிவகுக்கும் அபாயமாகும். நிறுவனம் அதன் இயக்க நடவடிக்கைகள் (முக்கியமாக வர்த்தக பெறத்தக்கவைகள்) மற்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுடனான வைப்புத்தொகைகள் மற்றும் ஏனைய நிதி ஆவணங்கள் அடங்கலாக அதன் நிதி நடவடிக்கைகளிலிருந்து கடன் அபாயத்திற்கு ஆளாகின்றது.

**வணிகசார் கிடைப்பனவுகள்**

வாடிக்கையாளர் கடன் இடர் முகாமை தொடர்பான நிறுவனத்தின் நிறுவப்பட்டுள்ள கொள்கை நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைய ஒவ்வொரு தள அலுவலகத்தாலும் வாடிக்கையாளர் கடன் இடர் முகாமை செய்யப்படுகின்றது.

நிறுவனத்தின் கடன் அபாய வெளிப்பாடு முக்கியமாக ஒவ்வொரு வாடிக்கையாளரின் தனிப்பட்ட பண்புகளால் பாதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு தள அலுவலகமும் அதன் வாடிக்கையாளர்களின் நிதி நிலையை கண்காணிக்கின்றது. மேலும் முக்கியமான வாடிக்கையாளர்களின் நிமித்தம் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தனிப்பட்ட அடிப்படையில் குறைபாடு பற்றிய ஒரு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. கணக்கீடு உண்மையான ஏற்பட்ட வரலாற்றுத் தரவை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பெரும்பாலான வாடிக்கையாளர்கள் அரசாங்கத் துறைகளைச் சேர்ந்தவர்களாவர். பொருள் கொடுப்பனவுகள் உத்தரவாதங்களால் ஆதரிக்கப்படுகின்றன. ஆதலால், செயற்பாடுகளைத் (நிர்மாணங்கள்) தொடங்குவதற்கு முன்பு வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதால், வர்த்தக பெறத்தக்கவைகளைப் பொறுத்தவரை ஆபத்து செறிவு குறைவாக இருப்பதாக நிறுவனம் கருதுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 4.2 கடன் ஆபத்து (தொடர்ச்சி)

அறிக்கையிடும் திகதியில் கடன் அபாயத்திற்கு இருந்த அதிகபட்ச வெளிப்பாடு:

| திகதியில் | வணிகசார் பற்றுக்கள் |
|---|---|
| 2023 திசம்பர் 31 | 2,397,002,063 |
| 2024 திசம்பர் 31 | 3,049,955,954 |

## 4.3 திரவநிலை ஆபத்து

காசுப் பாய்ச்சல் ஆபத்து என்பது, நிறுவனம் அதன் நிதிப் பொறுப்புகளுடன் தொடர்புடைய கடமைகளைச் சமாளிப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் அபாயமாகும். இந்த கடமைகள் பணத்தை அல்லது பிற நிதிச் சொத்தை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றன. நிறுவனம் பணப்புழக்க திட்டமிடல் கருவிகளைப் பயன்படுத்தி நிதி பற்றாக்குறையின் அபாயத்தைக் கண்காணிக்கிறது.

நிறுவனத்தின் காசுப் பாய்ச்சல் அபாயத்தை நிர்வகிப்பதற்கான அணுகுமுறை, முடிந்தவரை போதுமான பணப்புழக்கம் அதன் பொறுப்பை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதையும், நிதி சொத்துக்களுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் இடையிலான சமநிலையைப் பேணுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புகள் அல்லது நிறுவனத்தின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்காமல் இயக்க நடவடிக்கைகளிலிருந்து பணப்புழக்கங்களை முன்னறிவிப்பதையும் உறுதி செய்வதாகும்.

நிதிப் பொறுப்புகளில் எதிர்பார்க்கப்படும் பணப்புழக்கங்களை விடவும் அதிகமான தொகையில் அதன் காசும் மற்றும் காசும் ஒப்புரவும் மற்றும் ஏனைய பிற மிகவும் சந்தைப்படுத்தக்கூடிய கடன் கருவிகளின் அளவைப் பேணுவதே நிறுவனத்தின் நோக்கமாகும். பணப்புழக்க அபாயத்தை அளவிடுவதற்கும் குறைப்பதற்கும், நிறுவனம் அதன் தேறிய செயற்பாட்டு காசுப் பாய்ச்சலை உன்னிப்பாக கண்காணித்து, காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பாதுகாக்கப்பட்ட நிதி வசதிகளை முன்னறிவித்து பேணுகின்றது. மேலும், காசு மேலாண்மை அடங்கலாக சரியான செற்பாட்டு மூலதன கட்டுப்பாட்டு மூலம் நிறுவனம் அதன் பணப்புழக்க அபாயத்தைக் குறைக்கின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | | CESL | |
|---|---|---|---|
| | | 2024 ரூ. | 2023 ரூ. |
| 5 | **வருமானம்** | | |
| | நிர்மாண வருமானம் | 8,723,302,219 | 6,854,078,181 |
| | உசாதுணை வருமானம் | 847,458 | |
| | | **8,724,149,677** | **6,854,078,181** |
| 6 | **விற்பனை ஆகுசெலவு** | | |
| | மூலப்பொருட்கள் | 3,092,747,555 | 2,719,924,908 |
| | தொழிலாளர் செலவு | 3,164,230,303 | 2,604,309,414 |
| | போக்குவரத்து கட்டணங்கள் | 236,778,270 | 229,750,633 |
| | கருவிசாதனங்கள் | 22,280,185 | 29,726,471 |
| | மேன்தலை மற்றும் நானாவித செலவுகள் | 812,963,094 | 676,713,214 |
| | நிர்மாண சேவைகள் | 337,058,541 | 123,077,658 |
| | | **7,666,057,947** | **6,383,502,298** |
| 7 | **ஏனைய வருமானம்** | | |
| | இருப்புப் பொருட்களின் விற்பனை வருமானம் | - | 20,942,308 |
| | வாடகை வருமானம் | 19,038,108 | 16,745,010 |
| | ERP வருமானம் | 787,717 | - |
| | இயந்திராதிகள்/சொத்துக்கள் வாடகை வருமானம் | 56,000 | 5,792,213 |
| | தரகு வருமானம் | - | 204,400 |
| | கட்டணங்கள் வருமானம் | 1,058,088 | 587,791 |
| | நானாவித வருமானம் | 31,663,072 | 86,225,556 |
| | கேள்வி விலை மனுக் கட்டணங்கள் வருமானம் | 3,819,737 | 748,717 |
| | அஸ்பால்ட்டு கொங்கிரீட்டு, யுடீஊ மற்றும் கூழாங்கற்கள் விற்பனை வருமானம் | - | (16,928,932) |
| | தீராத பற்றுக்கான ஏற்பாட்டு ஒதுக்கம் | - | - |
| | சொத்துக்கள் அகற்றல் இலாபம்/(நட்டம்) | 2,744,518 | (33,895,979) |
| | அஸ்பால்ட்டு/கிரஷர் பொறித்தொகுதி இலாபம் (நட்டம்) | (2,661,902) | (2,030,970) |
| | நிலக்காட்சிப்படுத்தல் பணி | 26,923,217 | - |
| | | **83,428,555** | **78,390,114** |
| | **இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | | |
| | பின்வரும் விடயங்கள் இயக்கச்செயற்பாட்டு இலாப வருகையில் அறவிடப்பட்டுள்ளன/(வரவுவைக்கப்பட்டுள்ளன) | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 1,062,500 | 1,403,163 |
| | கணக்காய்வாளர்களின் வேதனாதிகள் | 2,102,998 | 1,798,100 |
| | சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீதான தேய்மானம் | 121,883,656 | 140,868,800 |
| | தர்மமும் நன்கொடைகளும் | 948,000 | 658,000 |
| | தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான கொடுப்பனவு | - | 14,345,077 |
| | ஊழியர் நன்மைகள் செலவு | 419,927,373 | 309,608,177 |
| | **ஊழியர் நன்மைகள் செலவு** | | |
| | சம்பளங்களும் ஊதியங்களும் | 308,591,414 | 233,132,965 |
| | திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்பு | 23,969,398 | 21,549,200 |
| | மேலதிகநேர, ஊக்குவிப்பு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 87,366,561 | 54,926,013 |
| 8 | **தேறிய நிதிசார் வருமானம்** | | |
| | **நிதிசார் வருமானம்** | | |
| | வட்டி வருமானம் | 481,291,273 | 701,358,095 |
| | | **481,291,273** | **701,358,095** |
| | **நிதிசார் ஆகுசெலவு** | | |
| | வட்டி சார்ந்த செலவுகள் | (7,761,126) | (15,359,708) |
| | | **(7,761,126)** | **(15,359,708)** |
| | **தேறிய நிதிசார் வருமானம்** | **473,530,147** | **685,998,387** |
| 9 | **வரி சார்ந்த செலவுகள்** | | |
| | முன்னைய ஆண்டு வருமான வரி சீராக்கல் | (33,719,763) | (20,493,987) |
| | குறித்த ஆண்டிற்கான பிற்போடப்பட்டுள்ள வரி | (44,401,644) | 18,351,146 |
| | குறித்த ஆண்டிற்கான வருமான வரி | 217,091,148 | 120,573,174 |
| | | **138,969,741** | **118,430,333** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| 10 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்<br>10.1 CESL | காணி<br>ரூ. | கட்டிடங்கள்<br>ரூ. | தளபாடங்கள் பொருத்துக்கள்<br>ரூ. | நிர்மாண கருவிசாதனங்கள் மற்றும் உபகரணங்கள்<br>ரூ. | அலுவலக உபகரணங்கள்<br>ரூ. | பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள்<br>ரூ. | கொள்கலன்கள்<br>ரூ. | கணனிகள்<br>ரூ. | வாகனங்கள்<br>ரூ. | வாசிகசாலை நூல்கள்<br>ரூ. | மொத்தம்<br>ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | | | | | | | |
| **2024 ஜனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை** | 8,415,147 | 98,200,295 | 40,982,374 | 644,050,718 | 60,365,143 | 393,657,123 | 54,962,877 | 87,144,595 | 149,313,167 | 678,994 | 1,537,770,433 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | 33,635,000 | | 3,826,162 | 12,523,539 | 6,561,607 | 4,537,713 | (0) | 8,777,597 | 0 | 29,358 | 69,890,977 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான அகற்றல்கள் | | | (1,112,205) | (9,128,523) | (2,503,451) | (4,538,369) | | (4,350,205) | | | (21,632,754) |
| WIP இல் இருந்து PPE இற்கு மாற்றப்பட்டவை | | 19,051,280 | | | | | | | | | 19,051,280 |
| பிழை திருத்தம் | | | - | | | | | - | | | - |
| **2024 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | **42,050,147** | **117,251,575** | **43,696,331** | **647,445,734** | **64,423,299** | **393,656,467** | **54,962,877** | **91,571,987** | **149,313,167** | **708,352** | **1,605,079,936** |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | |
| 2024 ஜனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை | | 54,869,169 | 30,300,775 | 520,403,038 | 44,695,494 | 342,924,646 | 43,932,540 | 73,710,300 | 40,042,299 | 395,464 | 1,151,273,725 |
| பிழை திருத்தம் | | | (318,660) | (1,298,207) | (19,106) | (28,998) | | (22,342) | | | |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | | 9,399,009 | 3,656,396 | 61,497,023 | 5,845,956 | 19,714,524 | 917,323 | 7,600,235 | 13,175,590 | 77,599 | 121,883,656 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான அகற்றல்கள் | | | (951,606) | (8,130,751) | (2,339,875) | (4,443,197) | | (4,328,583) | | | (20,194,012) |
| பிழை திருத்தம் | | | (318,660) | (1,298,207) | (19,106) | (28,998) | | (22,342) | | | (1,687,313) |
| 2024 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை | - | **64,268,177** | **32,686,894** | **572,471,116** | **48,182,468** | **358,641,784** | **44,375,050** | **76,959,611** | **53,217,889** | **473,063** | **1,251,276,052** |
| **தேறிய புத்தகப் பெறுமானம்** | | | | | | | | | | | |
| **2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | **8,415,147** | **43,331,126** | **10,681,599** | **123,647,680** | **15,669,649** | **50,732,477** | **11,030,337** | **13,434,295** | **109,270,868** | **283,530** | **386,496,708** |
| **2024 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | **42,050,147** | **117,251,575** | **43,696,331** | **647,445,734** | **64,423,299** | **393,656,467** | **54,962,877** | **91,571,987** | **149,313,167** | **708,352** | **353,803,883** |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **செலவு** | | | | | | | | | | | |
| **2023 ஜனவரஜ 1 ஆம் திகதிற்கான நிலுவை** | 8,415,147 | 86,951,785 | 39,688,872 | 670,031,302 | 58,932,833 | 392,673,868 | 54,984,877 | 85,487,082 | 193,593,167 | 672,144 | 1,591,431,077 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | | 11,248,510 | 2,006,706 | 5,124,745 | 3,050,442 | 2,895,142 | 88,000 | 3,355,425 | | 6,850 | 27,775,820 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான அகற்றல்கள் | | | (713,204) | (5,357,413) | (1,618,132) | (1,911,887) | (110,000) | (1,697,912) | (44,280,000) | | (55,688,548) |
| பிழை திருத்தம் | | | | (25,747,916) | | | | | | | (25,747,916) |
| மீள்விலை மதிப்பீட்டு சீராக்கல் | | | | | | | | | | | - |
| **2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | **8,415,147** | **98,200,295** | **40,982,374** | **644,050,718** | **60,365,143** | **393,657,123** | **54,962,877** | **87,144,595** | **149,313,167** | **678,994** | **1,537,770,433** |
| **2023 ஜனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை** | - | 47,029,985 | 26,834,245 | 448,016,200 | 39,860,497 | 320,482,160 | 40,620,376 | 66,597,004 | 34,289,009 | 307,591 | 1,024,037,067 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | | 7,839,184 | 3,921,144 | 74,330,888 | 4,834,997 | 22,442,486 | 3,334,164 | 8,730,774 | 15,347,290 | 87,873 | 140,868,800 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான அகற்றல்கள் | - | | (454,614) | (4,097,784) | | | (22,000) | (1,617,478) | (9,594,000) | | (15,785,876) |
| பிழை திருத்தம் | | | | 2,153,735 | | | | | | | 2,153,735 |
| | | | | | | | | | | | - |
| | | | | | | | | | | | - |
| **2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை** | - | **54,869,169** | **30,300,775** | **520,403,038** | **44,695,494** | **342,924,646** | **43,932,540** | **73,710,300** | **40,042,299** | **395,464** | **1,151,273,725** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

### 10.A வளரும் உயிரியல் வளங்கள்

| முழுமொத்த கொணரப்படும் தொகைகள் | முதிர்ச்சியடையாத வளங்கள் | | | | முதிர்ச்சியடைந்த வளங்கள் | | | | 2024.12.31 ஆம் திகதிற்கு | 2023.12.31 ஆம் திகதிற்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தென்னை ரு. | கரும்பு ரு. | ஏனைய ரு. | மொத்தம் ரு. | பசன் ப்ருட்டு ரு. | கரும்பு | ஏனைய ரு. | மொத்தம் ரு. | ரு. | ரு. |
| **ஆகுசெலவில்** | | | | | | | | | | |
| ஜனவரி 1 ஆம் திகதியில் உள்ள நிலுவை | 111,300 | 1,322,386 | 384,754 | 1,818,440 | 445,463 | | - | 445,463 | 2,263,903 | |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | 2,742,815 | 2,543,283 | 3,242,354 | 8,528,451 | | 0 | - | - | 8,528,451 | 2,313,399 |
| இருந்து (இற்கு) மாற்றல் | - | 3,865,669 | 1,099,206 | 4,964,875 | 1,099,206 | 3,865,669 | - | 4,964,875 | - | - |
| முழுமையான வருமானக் கூற்றுக்கான (இற்கு) மாற்றல் | - | | | - | | | - | - | - | - |
| திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிலுவை | 2,854,115 | - | 2,527,902 | 5,382,016 | 1,544,669 | 3,865,669 | - | 5,410,338 | 10,792,354 | 2,313,399 |
| **தேய்மானம்** | | | | | | | | | | |
| ஜனவரி 1 ஆம் திகதியில் உள்ள நிலுவை | - | - | - | - | - | - | - | - | - | - |
| குறித்த ஆண்டிற்கான கட்டணம் | - | - | - | - | 308,934 | 773,134 | - | 1,082,068 | 1,082,068 | 49,496 |
| திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிலுவை | - | - | - | - | 308,934 | 773,134 | - | 1,082,068 | 1,082,068 | 49,496 |
| **தேறிய கொணரப்படும் பெறுமானம்** | 2,854,115 | - | 2,527,902 | 5,382,016 | 1,235,736 | 3,092,535 | - | 4,328,270 | 9,710,287 | 2,263,903 |

(i) முதிர்ச்சியடைந்த வளரும் உயிரியல் வளங்களில் பசன் ப்ருட்டு உள்ளடங்குகின்றது. வளரும் அத்தகைய தாவரங்கள் திரண்ட குறைந்த ஆகுசெலவு தேய்மானத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன. இவை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் தொடர்பான பாதிப்பு பற்றிய இலங்கைக் கணக்கீட்டு நியமம் - LKAS 16 இற்கு இணங்க எடுத்துரைக்கப்படுகின்றன.

(ii) முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டத்திற்கான முதிர்ச்சியடையாத பெருந்தோட்டத்தின் மாற்றம் அந்த பெருந்தோட்டம் வணிகத்தின் நிமித்தம் ஆயத்தமாக இருக்கின்ற போது ஆரம்பமாகும்.

(iii) முதிர்ச்சியடையாத தாவரங்களில் தென்னை, மா, சந்திரான முதலியன அடங்குகின்றன.

**நுகரக்கூடிய உயிரியல் வளங்கள்**

| முழுமொத்த கொணரப்படும் தொகைகள் | முதிர்ச்சியடையாத வளங்கள் | | | | முதிர்ச்சியடைந்த வளங்கள் | | | 2024.12.31 ஆம் திகதிற்கு | 2023.12.31 ஆம் திகதிற்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கோழிக் ரு. | குஞ்சுகள் ரு. | பயிர்கள் ரு. | ஏனைய ரு. | கோழிக் குஞ்சுகள் ரு. | பயிர்கள் | மொத்தம் ரு. | ரு. | ரு. |
| **ஆகுசெலவில்** | | | | | | | | | |
| ஜனவரி 1 ஆம் திகதியில் உள்ள நிலுவை | 13,947,092 | - | - | 13,947,092 | 4,072,668 | - | 4,072,668 | 18,019,760 | - |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான சேர்வுகள் | 9,349,572 | - | - | 9,349,572 | | - | - | 9,349,572 | 18,098,870 |
| இருந்து (இற்கு) மாற்றல் | (23,296,664) | - | - | (23,296,664) | 23,296,664 | - | 23,296,664 | - | - |
| முழுமையான வருமானக் கூற்றுக்கான (இற்கு) மாற்றல் | - | - | - | - | - | - | - | - | - |
| திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிலுவை | - | - | - | - | 27,369,332 | - | 27,369,332 | 27,369,332 | 18,098,870 |
| **தேய்மானம்** | | | | | | | | | |
| குறித்த ஆண்டிற்கான கட்டணம் | - | - | - | - | 9,212,229 | - | 9,212,229 | 9,212,229 | 79,110 |
| திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிலுவை | - | - | - | - | 9,212,229 | - | 9,212,229 | 9,212,229 | 79,110 |
| **தேறிய கொணரப்படும் பெறுமானம்** | - | - | - | - | 18,157,103 | - | 18,157,103 | 18,157,103 | 18,019,759 |

| டிசம்பர் 31 நிலவரப்படி | CESL 2024 ரூ. | CESL 2023 ரூ. |
|---|---|---|

**10.2 முழுமையாக தேய்ந்துள்ள சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

நிதி நிலைக் கூற்றுத் திகதியிலும் பயன்பாட்டில் உள்ள கம்பனியின் முழுமையாக தேய்ந்துள்ள சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் செலவு பற்றிய விபரங்கள் பின்வருமாறு காணப்படும்:

| முழுமையான உரித்துடைய PPE | முழுமையாக தேய்ந்துள்ள | தேய்மான கணிப்பீடு | மொத்தம் |
|---|---|---|---|
| கட்டிடங்கள் | | 117,251,575 | 117,251,575 |
| வாகனங்கள் | 334,767 | 148,978,400 | 149,313,167 |
| அலுவலக உபகரணங்கள் | 28,195,166 | 36,228,132 | 64,423,299 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 17,658,048 | 26,038,283 | **43,696,331** |
| நிர்மாண உபகரணங்கள் | 418,514,861 | 228,930,872 | **647,445,734** |
| வாசிகசாலை நூல்கள் | 94,009 | 614,344 | **708,352** |
| பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் | 316,062,500 | 77,593,968 | **393,656,467** |
| கணனி | 62,922,678 | 28,649,309 | 91,571,987 |
| கொள்கலன்கள் | 40,098,508 | 14,864,369 | 54,962,877 |
| | **883,880,537** | **679,149,251** | **1,969,810,160** |

**11 பாவனை சொத்துக்களின் உரிமை**

காணியின் உரிமையை பெற்றுக் கொள்ள முன்கூட்டி செலுத்திய குத்தகை வாடகைகள் கிடைக்கும் நன்மைகள் மாதிரிக்கு இணங்க குத்தகை காலத்தின மீது கழிக்கப்படுகின்றன. காணியின் பாவனை உரிமையில் குத்தகை சொத்துக்கள் அடங்குகின்றன. இவை விலைமதிப்பீட்டில் எடுத்துரைக்கப்பட்டு எஞ்சியிருக்கின்ற குத்தகை காலத்தின் பேரில் ஒரு நேர்நிரல் அடிப்படையில் கழிக்கப்படுகின்றன. பாதிப்பு நட்டம் ஏதும் இருந்தால் அது இலாப அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும்.

| | 2024 | 2023 |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்தில் உள்ள | 13,119,225 | 13,633,401 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான கொள்வனவு | - | - |
| கழிவு | (514,175) | (514,176) |
| குறித்த ஆண் டு இறுதியில் உள்ள | 12,605,050 | **13,119,225** |

**11.1 குத்தகை சொத்துக்கள் பற்றிய விபரங்கள்**

இந்த குத்தகை சொத்து என்பது ஒரு காணியாகும். இந்த காணி சபரகமுவ தல அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு பயன்படுகின்றது. இந்த குத்தகை காணி நக ரஅபிவிருத்தி அதிகார சபையுடன் (நஅஅச) செய்துகொள்ளப்பட்டுள்ள ஒரு குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 30 ஆண்டுகளுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டதாகும். இந்த குத்தகை ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் திகதியில் ஆரம்பமாகியது. இந்த காணி 2019 ஜுலை மாதம் 08 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் 30 ஆண்டு காலப்பகுதிற்கு ஒரு நேர்நிரல் அடிப்படையில் தேய்மானம் கழிக்கப்பட்டு வருகின்றது.

| சொத்து | காணியின் அளவு (ஏக்கர்) | குத்தகை காலம் |
|---|---|---|
| பொறித்தொகுதி இல. 582 (துண்டு இலக்கங்கள் 7,8,9)<br>புதிய நகரம் நிலஅளவைத்திட்டம் இலக்கம் 582<br>இரத்தினபுரி | 60P | 20219.07.08 - 30 ஆண்டுகள் |

**12 நிகழும் மூலதனப் பணி**

| | 2024 | 2023 |
|---|---|---|
| <u>உள்ளக மென்பாக அபிவிருத்தி</u> | | |
| நிலுவை B/F - | 10,110,000 | 10,110,000 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள செலவு | | |
| | **10,110,000** | **10,110,000** |
| <u>கட்டிட நிர்மாணம்</u> | | |
| நிலுவை B/F - | 40,251,754 | 34,144,371 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள செலவு | 25,014,396 | 6,107,383 |
| மாற்றப்பட்டவை | (19,051,280) | - |
| | **46,214,870** | **40,251,754** |
| <u>காணி அபிவிருத்தி செலவு*</u> | | |
| நிலுவை B/F - | **14,349,471** | |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள செலவு | **13,350,381** | **14,349,471** |
| மாற்றப்பட்டவை | | |
| | **27,699,852** | **14,349,471** |
| மொத்த நிகழும் மூலதனப் பணி | **84,024,722** | **64,711,225** |

**13 முதலீடுகள்**

| | 2024 | 2023 |
|---|---|---|
| நீண்டகால முதலீடு (குறிப்பு இலக்கம் 13.1) | 151,594,466 | 145,322,938 |
| குறுங்கால முதலீடு (குறிப்பு இலக்கம் 13.2) | 4,730,176,347 | 3,963,681,274 |
| | 4,881,770,813 | 3,963,681,274 |

**13.1 நீண்டகால முதலீடு**

**கடன்களும் கிடைக்க வேண்டிய நிதி சார்ந்த சொத்துக்களும்**

| | 2024 | 2023 |
|---|---|---|
| திறைசேரி முறிகளில் உள்ள முதலீடு<br>தீர்ப்பனவுப் பெறுமானம் ரூ.148,015,856.66<br>முதிர்ச்சித் திகதி - 2027.09.15 | 151,594,466 | 145,322,938 |
| | **151,594,466** | **145,322,938** |

**13.2 குறுங்கால முதலீடு**

| | 2024 | 2023 |
|---|---|---|
| ரெபோ | - | - |
| குறுங்கால முதலீடுகள் | 4,730,176,347 | 3,963,681,274 |
| | **4,730,176,347** | **3,963,681,274** |

1,076,192,656 ஷரூபா தொகையான நிலையான வைப்புக்கள் 2024.12.31 ஆம் திகதிற்கு வங்கி உத்தரவாதமாக வைக்கப்பட்டுள்ளன.

**14 பொருட்கள்பதிவேடு**

| | 2024 | 2023 |
|---|---|---|
| பொருட்கள்பதிவேடு - நிர்மாண மூலப்பொருட்கள் | 865,601,139 | 808,100,936 |
| மூலப்பொருட்களின் அகற்றல் | - | - |
| | **865,601,139** | **808,100,936** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| டிசம்பர் 31 நிலவரப்படி | | CESL | |
|---|---|---|---|
| | | 2024 ரூ. | 2023 ரூ. |
| 15 | **நிகழும் பணி** | | |
| | ஆரம்ப நிலுவை | 116,073,806 | 64,675,522 |
| | முன்னைய ஆண்டு சீராக்கல் | | |
| | முன்னைய ஆண்டு சீராக்கல் ஒதுக்கம் | (3,287,946) | (21,535,294) |
| | நடைமுறை ஆண்டிற்கான WIP | 21,168,044 | 72,933,578 |
